
புதிய சமுதாயம்
KDN 0131/78
ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்
முருகா வருக
21
PUTHIYA SAMUDHAYAM
50காசு

அட்டைப்படம்

பத்துமலை முருகப் பெருமானுக்குப் பக்தர்கள் காவடி செலுத்தும் காட்சி. இந்தச் சிற்பம் பத்துமலைக் கலைக்கூடத்தில் உள்ளது.

வண்ணப்படம்: மாயன்.


வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

மாதமிருமுறை மலரும் குடும்ப இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2009 தை 12

கம்பம் 1 ∴ (25-1-1978) ∴ குடும்பம் 21



நாளை என்பது வரட்டும் வரட்டும்
நீஅதற் கஞ்சாதே
நாளை என்பது வாரா திருப்பினும்
நீஅதைக் கெஞ்சாதே

நேற்று நடந்தது உனக்குத் தெரியும்
நிறைகுறை நிலைபுரியும்
ஏற்று நடந்திட எதுசரி எதுமுறை
எனவொரு வழிதெரியும்

இன்று நடப்பது எனதே எனதென
எழுந்திடு எழுந்திடுநீ
நின்று துணிவுடன் நின்று தெளிவுடன்
நடந்திடு நடந்திடுநீ

கோரையை நட்டுக் கீரையைப் பறித்த
கொம்பன் எவனுமில்லை
காரியம் செய்வதில் வீரனை எந்தக்
காலமும் வெல்வதில்லை

நாளை என்பது வரட்டும் வரட்டும்
நீஅதற் கஞ்சாதே
நாளை என்பது வாரா திருப்பினும்
நீஅதைக் கெஞ்சாதே

எங்கள் அலுவலகம்:
131, ஜாலான் துவாங்கு
அப்துல் ரஹ்மான், [2-ஆவது மாடி]
கோலாலம்பூர் 01-08.
அஞ்சல் பெட்டி எண்: 2066,
தொலைபேசி: 925116

தைப்பூச விழா

மலேசியாவில் இந்துக்கள் கொண்டாடுகிற பல்வேறு பண்டிகைகளில் தீபாவளிக்கு அடுத்த சிறப்பு நிலையில் தைப்பூச உற்சவம் பத்துமலை, பினாங்கு, சுங்கைப்பட்டாணி, ஈப்போ கல்லுமலை முதலான பல்வேறு இடங்களில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. குறிப்பாக பத்துமலையில் நடைபெறுகிற தைப்பூசம் மலேசிய ரீதியில் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் லட்சக் கணக்கில் திரளுகின்ற பெரிய வைபவமாக அமைந்திருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால் நாட்டில் நடைபெறும் சமயப் பண்டிகைகளில் இந்த அளவுக்கு லட்சம் மக்களை ஆண்டுதோறும் ஈர்க்கின்ற பெரிய உற்சவம் வேறு எதுவுமில்லை என்று சொல்வது மிகையாகாது. இந்துப் பக்தர்களை மட்டுமின்றி சர்வசமூக மக்களையும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளையும் கூட ஏராளமாக பத்துமலைத் தைப்பூசம் கவர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. தைப்பூச உற்சவத்தின் போது இந்துக்கள் மட்டுமின்றி சீன சமூகம் முதலான பிற சமூகங்களைச சேர்ந்த பக்தர்களும் காவடி எடுத்தல், சிதறு தேங்காய் உடைத்தல் போன்ற சடங்குகளிலும் பங்கு கொள்வது சமூகங்களிடையே சகோதரத்துவத்தையும் நேசத்தையும் வளர்க்கின்ற அரிய காட்சி ஆகும்.

தைப்பூச விழாவுக்கு இத்துணை மகத்துவம் இருந்தும் பினாங்கு மாநிலத்தில் மட்டுமே தைப்பூசத்தன்று பொது விடுமுறை அளிக்கப்படுகின்றது. பத்துமலைத் தைப்பூசத்திற்காக சிலாங்கூர் மாநிலத்திலும் பேரா, கெடா, மாநிலங்களிலும் பினாங்கைப் போலவே தைப்பூச விடுமுறை வழங்கப்பட்டால் இந்து பக்தர்களுக்கு பேருதவியாக இருக்கும். குறிப்பிட்ட மாநில அரசாங்கங்கள் இந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தைப்பூசத்திற்கு மேலும் சிறப்பை வழங்கி, இந்து பக்தர்களின் மனதைக் குளிர வைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

பத்துமலையைப் பொறுத்த வரையில் பக்கத்தில் நடைபெறும் கல்லுடைப்பு நடவடிக்கைகள் இன்னும் அபாயகரமாக நீடித்து வருவது கவலைதருகின்ற நிலைமையாகும். இந்தப் புனிதமான பத்துமலைக்கோவிலுக்குக் கல்லுடைப்பினால் சேதம் ஏதும் விளைந்து விடுமோ என்னும் அச்சம் லட்சக் கணக்கான பக்தகோடிகளின் நெஞ்சத்தை

எப்போதும் உறுத்திக் கொண்டிருக்கிறது. சிலாங்கூர் மாநில அரசாங்கம் இந்தக் கல்லுடைப்பை நிறுத்தப் போவதாகக் கொடுத்திருக்கும் வாக்குறுதிகள் எப்போது நிறைவேறும் என்று தெரியவில்லை. குத்தகை வழங்கப்பட்டிருக்கும் கல்லுடைப்பு நிறுவனங்களுக்கு மாற்று இடங்களை வழங்கி பத்துமலையையும், அதன் சுற்றுப் புறத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சிலாங்கூர் அரசாங்கத்தை சார்ந்திருக்கிறது. இனிமேலும் இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் சிலாங்கூர் அரசாங்கம் கல்லுடைப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கையில் உடனடியாக இறங்கவேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறோம்.

பத்துமலைக்கும் மற்றத் தைப்பூச விழாக்களுக்கும் காவடி முதலிய நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற வருகின்ற பக்த கோடிகள் இந்து சமய நெறி முறைகளையும், புனிதத்தையும் பாதுகாக்கிற முறையில் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவது முக்கியமாகும். மற்றவர்கள் பார்த்துப் பரிகசிக்கிற மாதிரி காவடி எடுக்கும் பக்தர்களும் அவர்களைச் சூழ்ந்து செல்பவர்களும் கண்ட கண்டபடி ஆடுவதும் சமயத்திற்குப் புறம்பான டப்பா பாட்டுக்களைப் பாடுவதும் தவிர்க்கப் படவேண்டும். முருகன் சன்னிதியில் மதுபானங்களை அருந்திவிட்டு அந்த மயக்கத்தில் பக்தர்களைப் போல் பரவச நிலையில் பாசாங்கு செய்வது மகா பெரிய பாவமாகும். ஆண்டவன் இவர்களை ஒரு போதும் மன்னிக்க மாட்டார். அலகுக் காவடிகள் என்னும் பெயரில் அகோரமான சித்ரவதைக் காட்சிகளை நடத்தித்தான் நேர்த்திக்கடன் செலுத்த வேண்டும் என்னும் அவசியம் கிடையாது. கோவில் நிர்வாகங்கள் இத்தகைய சித்ரவதைகளைக் கண்டிப்பான முறையில்தடை செய்வதற்கும் முன்வர வேண்டும். பால் காவடி, இளநீர்க் காவடி, போன்ற எளிய காவடிகளையே ஆண்டவன் அதிகம் விரும்புவான் என்பதைப் பக்த கோடிகள் உணரும்படி செய்வது கோவில் நிர்வாகங்களின் பொறுப்பாகும்.

தைப்பூச உற்சவம் முதலான இந்துப் பண்டிகைகளில் இனி மேலும் இத்தகைய கேலிக் கூத்துகளும் அநாகரிகமான பேயாட்டங்களும் நடைபெறுதபடி இந்து சமயத் தலைவர்களும், கோவில்களும், அமைப்புக்களும் முன்னெச்சரிக்கையாகப் பிரச்சாரங்களை நடத்தி பக்த கோடிகளை நல்வழிப்படுத்த முற்பட வேண்டும் என்றும் விண்ணப்பித்துக் கொள்கிறோம்.

வியட்னாமின் நேசக்கரம்

வியட்னாமின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான நுயன் டுய் டிரின் அண்மையில் மலேசியாவுக்கும் மற்றும் ஆசியான் நாடுகளுக்கும் வருகை புரிந்து, வர்த்தகம் முதலான உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டிருப்பது தென்கிழக்காசிய அமைதிக்கும், எதிர்காலத்திற்கும் நல்ல அறிகுறியாக அமைந்திருக்கிறது. இந்தோசீனாவில் கம்யூனிச ஆட்சி அமைந்த பிறகு ஆசியான் நாடுகளுக்கும் இந்தோசீன நாடுகளுக்குமிடையே ஐயப்பாடும், அச்சமும் தொடர்ந்து நிலவியதை மறுப்பதற்கு இல்லை. மலேசியாவும் மற்ற ஆசியான் நாடுகளும் பலமுறை நேசக்கரம் நீட்டியும் அதனைப் பூரணமாக இந்தோசீன நாடுகள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தது கவலைக்குரிய நிலைமையாக இருந்து வந்தது. நல்ல வேளையாக வியட்னாம் ஆட்சியாளர்கள் ஆசியான் நாடுகளின் நல்லெண்ணத்தையும் அமைதிக் குறிக்கோளையும் நன்கு உணர்ந்து இப்போது தங்கள் உறுதியான நேசக்கரத்தைக் கொடுக்க முன் வந்திருப்பது ஆறுதல் அளிப்பதாகும். இந்த உறவு நாளுக்கு நாள் வலுவடைந்து இந்த மண்டலத்தின் எதிர்கால அமைதிக்கும் செல்வச் செழிப்புக்கும் உறுதுணையாக அமையும் என்று பெருநம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம். முக்கியமாக இந்த நேச உறவு முகிழப்பதற்கு அரும்பாடுபட்ட நமது வெளியுறவு அமைச்சர் துங்கு அகமது ரிதாவுதீனையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

வேப்பெண்ணெய் பீதி

வேப்பெண்ணெய் புகட்டப்பட்ட ஐந்து பச்சிளம் குழந்தைகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து சுகாதார அமைச்சு வேப்பெண்ணெய் விற்பனைக்குத் தடை விதித்துக் கடைகளில் உள்ள சரக்குகளையும் கைப்பற்றியிருக்கிறது. கடைகளில் விற்கப்படும் வேப்பெண்ணெயில் நஞ்சு கலந்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப் படுவதால் சுகாதார அதிகாரிகளின் இந்த எச்சரிக்கை நடவடிக்கை நியாயமானதே ஆகும் என்றாலும், வேப்பெணணெய் இந்தியக் குடும்பங்களில் கைகண்ட அரிய மருந்தாகப் பயன் படுத்தப்பட்டு வருவதால் இப்பொழுது விதிக்கப்பட்டுள்ள விற்பனைத் தடை விரைவில் நீக்கப்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

வேப்பெண்ணெய்ச்சோதனையை விரைவில் நடத்தி முடித்து அதற்குரியபொறுப்பாளிகளைக் கண்டு பிடித்து அவர்கள் மீது தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அதன் பிறகு கலப்படமற்ற சுத்தமான வேப்பெண்ணெய்கடைகளில்முறையாக விற்கப்படுவதற்கும் சுகாதார அமைச்சு ஆவன செய்ய வேண்டும். இவ்வகையில் வேப்பெண்ணெய் இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும் பூரண ஒத்துழைப்பைச் சுகாதார அமைச்சுக்கு நல்கவும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

சிறுவர் கதை

முயற்சியுடையோர்க்

தமிழ்ப்பாணன்

மலர் வண்ணன் மிகவும் முயற்சியுள்ள மாணவன். அவன் படிப்பில் மிகவும் கெட்டிக் காரன். படிப்பில் மட்டுமா கெட்டிக்காரன். காற்பந்து விளையாடுவதிலும் அவன் மிகவும் கெட்டிக்காரன்.

அவன் ஆறும் வகுப்பில் படித்து வந்தான். அவனுடைய காற்பந்து விளையாட்டைக் கண்ட ஆசிரியர்களும், மற்றவர் களும் இவன் எதிர்காலத்தில் நிச்சயமாக ஒரு சிறந்த விளையாட்டாளனாகத் திகழ் வான் என்று உறுதியாக நம்பி னார்கள்

மலர் வண்ணன் ஒருநாள் இரவில் நண்பனின் வீட்டிற்குச் சென்றுவிட்டு தன்னுடைய இருப்பிடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தான்

அப்போது- மழை தூறல் போட ஆரம்பித்தது. அங்கே நடக்கப் போகும் ஒரு து""ரச் சம்பவத்தை முன் கூட்டியே அறிந்து கொண்டு வானம்கூட அழத் தொடங்கிவிட்டதுபோல் அமைந்தது அந்த மழை.

மலர் வண்ணன் நடந்து வந்த பாதையில் வேகமாக வந்த கார் ஒன்று அவனை வந்து மோதியது. அவன் கீழே விழுந் தான். காரை ஓட்டி வந்தவர் குடிபோதையில் வேகமாக ஓட்டி வந்திருந்தார்.

எனவே பிரேக் போட்டு உடனே காரை நிறுத்த அவருக்கு இயலாமல் போய் விட்டது. கோரச் சம்பவம் அது! அதுவே மலர் வண்ணனின் வாழ்க்கையைப் பாதிக்தும் சம்பவமாக அமைந்துவிட்டது!

மலர்வணணன் மருத்து வமனைக்குக் கொண்டு செல்லப் பட்டான். அந்தோ பரிதாபம்! அவனுடைய வலதுகால் முறிந்து விட்டது. சீர் செய்ய முடியாத அளவுக்கு உடைந்துவிட்டதால், டாக்டர்கள் அனைவரும் காலை எடுப்பதைத் தவிர உயிரைக் காப்பாற்ற வேறு வழி இல்லை என்று உறுதியாகக் கூறிவிட் டார்கள்.

எனவே மலர்வண்ணன் தன் பொன்னான காலையிழந்து விட்டான். சிறப்பாகக் காற் பந்து விளையாடியவன் இனி எப்படி பந்து விளையாடுவான்? "எதிர்காலத்தில் சிறந்த பந்து விளையாட்டாளனாக வருவான்" என்று கூறியவர்கள் கண்ணீர் வடித்தார்கள். இனிமேல் அவ னுக்குப் பந்து விளையாட முடி யாது!

ஆனால் அவனுக்கு வேறு எதுவுமே செய்ய முடியாமல் போகவில்லையே! காலைத்தவிர வேறு எதுவும் பழுதாகவில்லை. அவனுடைய மனம் இப்போது விளையாட்டுத் துறையைவிட்டு, இசைத்துறையின் பக்கம் திரும் பியது.

அவனுடைய ஆசிரியரும், பெற்றோர்களும் அவனுக்கு ஆறுதல் கூறினார்கள். அவன் மனமுடைந்திருந்தான். அவ னுக்கு ஆறுதல் கூறி தன்னம் பிக்கை உள்ளவனாக்கினார்கள்.

கால் போனாலும் முயற்சி செய்தால் வேறு ஏதாகிலும் ஒரு துறையில் சிறப்புப்பெற முடியும் என்பதை விளக்கினார் கள். அதுபோலவே அவன் இசைத்துறையில் ஈடுபட்டான்.

முழு மூச்சுடன் அதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு முறையாகப் பயிற்சி செய்தான். சில ஆண்டுகளிலேயே அவன் வீணையின் "அரசன்" ஆகிவிட் டான்.

அவனின் விரல்கள் பட்ட மாத்திரத்தில் வீணை இன்பகர மான இசையை எழுப்பியது- நாடே புகழும்படியான இசை மன்னன் ஆனான்.

முயற்சியோடு தன்னம் பிக்கையுடனும் அவன் இசை யுலகில் முன்னேறினான். தான் ஒரு நொண்டி என்ற உணர்வே அவனுக்கு இல்லை. மற்றவருக் கும் இல்லை.

அவனை எல்லாரும் பாராட் டினார்கள்; புகழ்ந்தார்கள். அவ னின் இசையைக் கேட்க எல் லாரும் விரும்பினார்கள். அவன் புகழ் பெற்றான். பார் புகழ செல்வத்துடன் வாழ்ந்தான்!

ஆயுள் குறையுமா?

மனிதர்கள் எல்லாரும் மனிதர் களைப் பற்றித்தான் விவாதித்துக் கொண்டு இருப்பார்களா?

இல்லை! மகத்தான மனிதர்கள் கருத்துக்களைப் பற்றி விவாதிக் கிறார்கள்; சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்கிறார் கள்; மட்டமான மனிதர்கள், மனிதர்களைப் பற்றி விவாதிக்கிறார் கள்.

—சீனப் பழமொழி

வேலை செய்வதால் ஆயுள் குறை யுமா?

மனிதனைக் கொல்வது வேலை யல்ல. கவலையே அவனைக் கொல் கிறது. இயந்திரம் சுற்றுவதால் தேய்வதில்லை; உராய்வதாலேயே தேய்கிறது.

—சீசர்

மனித இரத்தம் அதிகம் சிந்தி யது விபத்துக்களாலா?

இல்லை! வேறு எதையும்விடக் கடவுளின் பெயராலேயே அதிக இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது.

—விவேகானந்தர்

வீ. செல்லத்துரை,
கோலாலம்பூர்.

ஒரு பக்கக் கதை

பிறந்தநாள்

கற்பகம்



என் நண்பன் கண்ணபிரான், கண்டிப்பாக அன்று தன் வீட்டுக்கு வரும்படி எனக்கு அன்புக் கட்டளை இட்டிருந்தான். அவன் தங்கைக்குப் பிறந்த நாளாம்.

பரிசுப் பொருளோடு அவன் வீட்டுக்குச் சென்றேன்.

வீட்டில் நண்பன் இல்லை.

அவனுடைய மோட்டார் சைக்கிளையும் வீட்டில் காணவில்லை. விசாரித்ததில் ஓர் அவசர அலுவலாக நண்பன் வெளியே போயிருப்பதாகவும், விரைவில் திரும்பி விடுவான் என்றும் அவனுடைய அப்பா கூறினார்.

பிறந்த நாள் கொண்டாட்டத்திற்குஅறிகுறியாகக் காதைச் செவிடாக்கும்படி ஒலிபெருக்கியில் சினிமாப் பாடல்கள் ஒலித்தன. சில இளவட்டங்கள் பாட்டுப் பாடினர். "கோ கோ" ஆடினர். பிறந்தநாள் கொண்டாட்டம் அல்லவா? ஒரே கூத்து கும்மாளமாயிருந்தது.

அங்கிருந்தவர்களில் எவருமே எனக்கு அறிமுகமில்லாதவர்கள் என்பதால் கண்ணபிரானை எதிர் பார்த்துக் கொண்டு நான் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தேன்.

சும்மா உட்கார்ந்திருந்தால் மனம் சும்மா இருக்குமா? கண்களும் சும்மா இருக்குமா? கண்கள் சுற்றுமுற்றும் நோட்டமிட்டன. நண்பனின் வீட்டுக்கு எதிரே இருந்த வீட்டிலும் ஏதோ விசேஷம் போலிருக்கிறது. அங்கும் பந்தல் போட்டிருந்தார்கள். கூட்டமும் இருந்தது.

பக்கத்தில் அமர்ந்திருந்த ஒருவரிடம் விசாரித்தேன்.

"அவுங்க வீட்டில ஒருத்தங்க செத்துப் போயிட்டாங்க!" என்றார் அவர்.

"ஏன் கேட்டோம்" என்றிருந்தது எனக்கு. எதிரே துக்கத்தில் தோய்ந்திருக்கும் ஒரு கூட்டத்திற்கு முன்பு பிறந்தநாள் கொண்டாடும்ஒருகூட்டம். இப்போது ஒலிபெருக்கியில் ஒலித்துக்கொண்டிருந்த பாட்டு எனக்கு நஞ்சு மாதிரி இருந்தது.

எதிரில் சாவு வீடு இருக்கும் போது இவர்களுக்கு எப்படி பாட்டும் கூத்தும் போட முடிகிறது. என்று வியந்தேன்.

பாட்டையும் ஆட்டத்தையும் நிறுத்தலாம். முடியாவிட்டால் குறைக்கலாமே என்று தோன்றியது.

நண்பனுடைய அப்பாவைக் கண்டு விஷயத்தைச் சொன்னேன்.

அவர் ஒரு மாதிரியாக என்னைப்பார்த்தார்.

"ஊருல நாட்டுல "எழவு" விழுந்தா எங்க வூட்டுல ஒண்ணுமே நடக்கக் கூடாதுன்னு சொல்லுறீங்களா?"

"அதுக்கில்லீங்க, இந்தப் பாட்டையும் ஆட்டத்தையும் நிறுத்திட்டு கொஞ்சம் அடக்கமா நீங்க செய்ய வேண்டியதைச் செய்துக்கலாமே? என்ன, சாவு வீட்டுக்காரங்களுக்குப் பாட்டும் கூத்தும் சங்கடத்தைத் தராதுங்களா?"

என்னுடைய உபதேசத்தைக் கேட்டதும் அவருக்கு இன்னும் எரிச்சலாகியது.

"இதெல்லாம் முன்னமேயே ஏற்பாடான விஷயம் சாவு திடீர்னு வந்தது. அதனாலே சாவுக்காக இதை நிறுத்தறதில எதுவும் வந்துடப் போறதில்லை" என்று கூறி நகர்ந்து விட்டார்.

கண்ணபிரான் வரட்டும். அவனிடமாவது விஷயத்தைக் கூறிப் பார்ப்போம் என்று எண்ணிக்கொண்டு நண்பனின் வரவை எதிர்பார்த்துக் கிடந்தேன்.


ஒலிபெருக்கியில் "வாங்கோன்னா" பாட்டு ஒரே அமர்க்களத்துடன் ஒலித்துக்கொண்டிருந்தது. அதற்கேற்ப சில இளைஞர்கள் ஆட்டம் போட்டனர்

அப்போது ஒருவர் பரபரப்போடு ஓடிவந்து நண்பனின் அப்பாவிடம் ஏதோ சொன்னார்.

செய்தியைக் கேட்டதும் "பாட்டையும் ஆட்டத்தையும் நிறுத்துங்கடா" என்று சத்தம் போட்டார், நண்பனின் அப்பா. கூட்டத்தில் "கப்சிப்" பென்று ஒரே அமைதி! மயான அமைதி.

அவர் ஏன் பாட்டை நிறுத்தச் சொன்னார் என்பதை அறிந்தபோது எனக்கு நாடியே நின்று விட்டது போலிருந்தது.

மோட்டார் சைக்கிளில் சென்றிருந்த கண்ணபிரான் விபத்தில் சிக்குண்டு இறந்து விட்டான் என்பதை அறிந்தால் பின்னே எப்படி இருக்கும்!



பினாங்கில் தைப்பூசம்

சி. அன்பானந்தம்

உருகாத மனமும் "முருகா" என்று ஓதில் உருகும் என்று கூறுவார்கள்! அந்த இனிய சொல்லுக்கு அத்தனை சிறப்பு, அத்தனை அருட்சக்தி!

முருகனுக்குகந்த திருவிழாக்கள் பல. அவற்றுள் சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஐப்பசி கந்த சஷ்டி, கார்த்திகை தீபம், தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம் போன்றவை சில. ஒவ்வொரு மாதங்களின் விழாக்கள் ஒவ்வோரிடங்களில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

தைப்பூசத்தைப் பொறுத்தமட்டில், நாம் இங்கே, பினாங்கு நகரிலே நடைபெறுகின்ற விழாவைப் பற்றி அறிந்துகொள்ளப் புகுமுன் தைப்பூசம் எதற்காகக் கொண்டாடப்படுகின்றது என்பதையும் ஓரளவு தெரிந்துகொள்ளுவது பொருத்தமாக இருக்கும்.

மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத ஒன்று அன்பு. அந்த அன்பின் அடிப்படையிலேதான் உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த இயக்கத்திற்குத் துணையாக விளங்கிக் கொண்டிருக்கும் ஐந்து வகை நிலங்களிலே, என்றும் இனிமை துலங்கும் இடமாகத் திகழ்வது குறிஞ்சி நிலமாகும். ஆகவே தான், புலவர்கள் அகத்துறைக் கவிதைகளின் ஆக்கத்திற்குரிய நிலைக்களனாகக் குறிஞ்சித் திணையை முதன்மையாக மதித்துப் போற்றுகின்றார்கள்.

இயக்கத்திற்கு ஆதாரமான அந்த குறிஞ்சி நிலத்துக்குரிய கடவுள் முருகப்பெருமானாவார். ஆகவேதான், முழு நிலவு தண்ணொளி பரப்பிக்கொண்டிருக்கும் பௌர்ணமிகளில், அக்கால மக்கள் விழாவெடுத்து முருகனை வழிபட்டு வந்தார்கள். மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சியிலேதான் ஆண்டு முழுமையும் மனங்கவரும் தண்மையான சூழ்நிலைகளும் இயற்கையான அருவிகளும் அமைந்துள்ளன.

ஆடி மாதத்திலே விதைக்க ஆரம்பித்த மக்கள், அறுவடைகளை முடித்துக் கதிர் மணிகளையெல்லாம் வீடு கொண்டுவந்து சேர்த்து, அந்தக் களிப்பிலே கதிரவனுக்குப் பொங்கலிடும் மாதம் தை மாதமாகும். ஆகவே, தை மாதம் அவர்களின் மகிழ்ச்சிக்குரிய மாதமாகின்றது. தை பிறந்தால் எல்லா வகைகளிலும் நல்ல வழி பிறக்கும் என அவர்கள் நம்புவதால், உழைத்துப் பயன்கண்ட அவர்கள் உற்சாகத்தை வெளிப்படுத்த அம் மாதத்திலே வரும் பௌர்ணமியையும் சிறப்புடன் கொண்டாடுகின்றார்கள். தை மாதப் பௌர்ணமி பூசத்தன்று வருவதால் அதைத் தைப்பூசம் என அழைக்கின்றோம்.

அசுரர்களை ஒழித்து அமரர்களையும் மக்களையும் காக்க அவதரித்த ஆறுமுகக் கடவுளுக்கு, சர்வேஸ்வரனான சிவபெருமான் சக்திமிக்க வேலொன்றைத் தைப்பூசத்தன்று வழங்கி ஆசி வழங்கியதாகவும் கூறுவார்கள். ஆகவே, மன அமைதிக்கும் மகிழ்வுக்கும் காரணமாகவுள்ள குறிஞ்சிநிலக் கடவுளான முருகனுக்கு மக்கள் எடுக்கும் மாபெரும் திருவிழாவே தைப்பூசமாகும்.

பினாங்கைப் பொறுத்தமட்டில், அங்கே மூன்று நாட்களும் விழாக்கோலம் பூண்டு கோலாகலமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கும். வாட்டர் ஃபால் ரோட்டிலிருக்கும் நகரத்தார் தெண்டாயுதபாணி கோவிலிலும் தண்ணீர்மலை மேற்

கோவிலிலும் தைப்பூச உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

பூசத்துக்கு முதல்நாள் புனர்பூசத்தன்று, பினாங்கு ஸ்திரீட் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோவில் வீட்டிலிருந்து புறப்பட்டு தெண்டாயுதபாணி சுவாமி வெள்ளி ரதத்தின் மீதமர்ந்து பக்தர்கள் புடைசூழ மங்கள வாத்தியங்களோடு செட்டியார்களின் காவடியாட்டத்துடன் சிவன் கோவில் வழியாகப் பல திருவீதிகளையும் கடந்து தண்ணீர்மலைக் கோவிலையடைந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். மிகவும் வரதையான தெய்வமாகத் திகழும் அந்த உற்சவ மூர்த்தி 1850ஆம் ஆண்டில், பினாங்கு ஸ்திரீட், 138ஆம் நம்பர் கட்டிடத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்டதாகும்.

தண்ணீர்மலையிலுள்ள நகரத்தார் தெண்டாயுதபாணி கோவில் 1858ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டதாகும். அங்கே திருவீற்றிருக்கும் தெண்டாயுதபாணியின் திருவுருவமும் மிகவும் சக்தி கொண்டதாகும். தைப்பூசத்தன்று மூலவருக்கும் உற்சவ மூர்த்திக்கும் சிறப்பான அபிடேக ஆராதனைகள் நடந்துகொண்டேயிருக்கும். அன்னதானம் வழங்கப்படுகின்றது. நாள் முழுதும் பல்வேறு சிறப்பட்ட காவடிகள் முருகனை வலம்வந்து வணங்கி மேலேயுள்ள கோவிலுக்குச் சென்றுகொண்டிருக்கும்.

மேலேயுள்ள கோவில், இந்து எண்டோவ்மெண்ட் போர்டால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. "தண்ணீர்க்குளம்" என்று இப்போது கூறப்படுகின்ற இடத்தில்தான் பல ஆண்டுகட்கு முன்பு. வேலவனை நினைவூட்டும் வேல் ஒன்றினை வைத்து முன்னோர்கள் வழிபட்டு வந்தார்கள். காலவோட்டத்தில், அங்கே ரிசர்வயர் கட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது, அந்த இடத்துக்குச் சற்று தள்ளி இப்போதுள்ள இடத்தில் குன்றின் மேலே கோவிலொன்றை அமைத்து அங்கே வேலையும் பாலதெண்டாயுதபாணியையும் விநாயகரையும் முறைப்படி பிரதிஷ்டைசெய்து வழிபட ஆரம்பித்தார்கள். மலையடிவாரத்தில் இடும்பன் கோவிலும் உண்டு.

நகரத்தார்கள் தைப்பூச விழாவை மூன்று நாள் விழாவாகக் கொண்டாட ஆரம்பித்த பிறகு. பக்தர்கள் எடுத்துச் செல்லும் காவடிகளையெல்லாம் மேலேயிருக்கும் பாலதெண்டாயுதபாணி கோவிலில் கொண்டு போய்ச் செலுத்த ஆரம்பித்தார்கள். அதே வழக்கப்படி இன்றும் ஏராளமான காவடிகள் செலுத்தப்பட்டுவருகின்றன. காலத்திற்கேற்றவாறு, மக்களுக்கும் பக்தர்களுக்கும் தேவையான வைகளையெல்லாம் கோவிலின் நிர்வாகக்குழு கவனித்து அவ்வப்போது செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

மேலேயுள்ள கோவிலையடுத்துத் தம்மால் நிர்மாணிக்கப்பட்ட பெரிய மண்டபத்தில் பெருநிலக்கிழார் அருள்மாமணி என்.டி.எஸ். ஆறுமுகம் பிள்ளையவர்கள் தைப்பூசத்தன்று வரும் மக்களனைவருக்கும் அன்னதானம் வழங்கிவருகின்றார்.

மேற்கோவில் முருகனுக்கு நாள் முழுதும் பக்தர்கள் கொண்டுவந்து செலுத்தும் காவடிகளின் எண்ணிக்கைகணக்கிலடங்கா. பாலும் பன்னீருமாக நாள் முழுதும் பல்வேறு அபிசேகங்களும் ஆராதனைகளும் நடந்துகொண்டேயிருக்கும். இரவெல்லாம் தண்ணீர்மலைப் பகுதி வண்ணவண்ண விளக்குகளால் ஒளி மயமாக விளங்கிக்கொண்டேயிருக்கும்.

இனி, மூன்றும் நாள். முதல் நாள் கோவில் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு சென்ற காவடிகளையெல்லாம், மூன்றும் நாளான ஆயில்ய நாளன்று, முனியாண்டி சன்னிதியிலிருந்து ஆட்டபாட்டங்களுடன் எடுத்துச்சென்று நகரத்தார்கள் தெண்டாயுதபாணி சன்னிதானத்தில் சிறப்பாகக் கொண்டு செலுத்தும் காட்சி கண்டுகளிக்க வேண்டிய அருமையான காட்சியாகும்.

அன்று மாலை, தண்ணீர்மலைத் தெண்டாயுதபாணி, கோவிலிலிருந்து மீண்டும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வண்ண ரதத்தில் ஆரோகணித்து முக்கியமான பெருஞ்சாலைகளின் வழியாகப் பக்தர்களுக்கெல்லாம் அருள்பாலித்து ஆசிவழங்கிக்கொண்டே நகர் வலமாக வந்து விடியற்காலை நேரத்தில் பினாங்கு ஸ்திரீட் கோவில்வீட்டில் மீண்டும் சேர்க்கைசேர்ந்து உரிய வழிபாடுகளுடன் உற்சவமூர்த்தி மூலஸ்தானத்தை அடைகின்றார்.

அன்றிரவு நடைபெறும் திருவுலாவிலே, இந்துக்களும் சீனர்களும் எண்ணிலடங்காத தேங்காய்களைச் சிதறு காய்களாக உடைக்கின்றார்கள். பலர் தங்களின் பிரார்த்தனைகளுக்கான காணிக்கைகளையெல்லாம் சுவாமிக்குச் செலுத்துவார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொதுமக்களும் பக்தர்களும் இன வேறுபாடின்றிக் கலந்துகொண்டு பேருவகையடைகின்றார்கள்.

சுவாமி புறப்பட்டுச் செல்கின்ற முதல் நாளிலும், பூசத்தன்றும், சுவாமி திரும்ப வரும் பொழுதும் எங்கே பார்த்தாலும் வழிநெடுகிலும் தண்ணீர்ப் பந்தல்களும் அலங்காரப் பொம்மைகள் பாலையணிவிக்கக் காத்திருக்கும் மலர்களும் ஆங்காங்கே சிற்றுண்டிக் கடைகளும் அமைக்கப்பட்டிருக்கும். போக்குவரத்துக்கான வசதிகளையெல்லாம் அரசாங்க அனுமதியுடன் அதிகப்படுத்தியிருப்பார்கள். எல்லா வசதிகளையும் மக்களுக்குச் செய்துகொடுப்பதில் கோவிலின் எல்லா நிர்வாகக்குழுவினரும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்துகொடுப்பதால், பினாங்குத் தைப்பூசம் மிகவும் அதிகப்படியான பக்தர்களையும் பொது மக்களையும் கவர்வதில் வியப்பில்லையல்லவா. அதிலும், தைப்பூசத்தன்று பினாங்கு மாநிலத்தில் விடுமுறையுமுண்டு! கேட்கவா வேண்டும்! நீங்களும் இந்த ஆண்டுத் தைப்பூசத்துக்குப் பினாங்கிற்கு வர மறந்துவிடவேண்டாம்!


செட்டியார்களின் காவடிகள்...

குறிஞ்சித் தெய்வம்

பி. சாரங்கபாணி



தமிழர்கள் முருகனுடைய பெருமையைப் புலப்படுத்தி இருக்கும் தகைமை எண்ணி எண்ணி இன்புறுவதற்குரியது. தொல்காப்பியம் குறிஞ்சி நிலத்துக்குத் தெய்வம் முருகன் என்று சொல்கிறது. "சேயோன் மேய மைவரை உலகமும்" என்பதுசூத்திரம். நிலத்தைஐந்து திணையாக வகுத்தனர் தமிழ் மக்கள். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும் ஒன்றும் விளையாமல் பொட்டலாக இருக்கும் இடம் பாலை என்றும், காடும் காட்டைச் சார்ந்த இடங்களும் முல்லை என்றும், ஊரும் வயலும் படர்ந்த இடம் மருதம் என்றும் கடலும் கடலைச் சார்ந்த இடங்களும் நெய்தல் என்றும் வழங்கப்படும். இவற்றை ஐந்திணைகள் என்பர். இவற்றில் முதலாக நிற்பது குறிஞ்சி.

ஒவ்வொரு நிலத்துக்கும் ஒவ்வொரு தெய்வம் உண்டு. குறிஞ்சியாகிய முதல் திணைக்குத் தெய்வம் முருகன். உலகம் ஊழிக் காலத்தில் தண்ணீரில் மூழ்கியிருந்தது. நீர் மெல்ல மெல்ல வடிந்து தரை தோன்றியது. அப்படித்தோன்றியபோது முதலில் காட்சி அளித்தது மலைதான். "கல் தோன்றி மண் தோன்றாக் காலம்" என்று இந்தக்காலத்தைக் கூறுவர். ஆகவே முதலில் தோற்றமளித்தது குறிஞ்சி.

முதலில் தோன்றிய மனிதன் மலையில் வாழ்ந்தான். அவனுக்குத் தெய்வம் என்ற உணர்ச்சி உண்டான போது அக்கடவுளைத் தெய்வமாகக் கொண்டான். ஆகவே முதலில் தோன்றிய மனித சமுதாயத்தின் முதற்கடவுளாக முருகன் இருந்தான் என்ற நம்பிக்கையைத் தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்று இந்த மரபிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அகப் பொருளில் காதலனும் காதலியும் ஒன்றுபடும் ஒழுக்கத்தை இரண்டாகப் பிரிப்பார்கள். களவொழுக்கம், கற்பொழுக்கம் என்பன அவை. அந்த இரண்டு வகை ஒழுக்கத்தையும் முருகன் தன் வாழ்க்கையில் காட்டினான். அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றி ஒருவனும் ஒருத்தியும் சந்தித்துக் காதல் கொள்வது களவுத் திருமணம். முருகன் வள்ளியை இவ்வாறு தான் கண்டு காதல் செய்தான்.

தாய் தந்தையர் கொடுக்க மணப்பது கற்புத் திருமணம். இந்த முறையில் தெய்வயானையை மணந்தான். இந்த ஒழுகலாறுகளை நடத்திக் காட்டி தமிழர்களின் காதல் வாழ்க்கைக்கு முதல் எடுத்துக்காட்டாக நிற்கிறான் முருகன்...

குறிஞ்சி நிலத்தில் வாழ்கிறவர் தினை முதலியவற்றைப் பயிரிடுவார்கள். அவர்கள் எதைப் பயிரிட்டாலும் அந்தப் பயிரில் விளையும் முதல் பயனை முருகனுக்கென்று வழங்கிவிடுவார்கள். தினை, கதிர் விட்டால் முதல் கதிர் முருகனுக்கு உரியதாகும். கனிமரம் பழுத்தால் முதல் கனி முருகனுக்கு உரியது. இவ்வாறு முருகன் கோயிலில் நாள்தோறும் அன்று விளைந்த புதிய பொருள்களே நிவேதனப் பண்டங்களாக வரும். ஆதலால் அவனைப் "புதிய பொருள்களை நுகரும் கடவுள்" என்று சொன்னார்கள்.

புறத்திணைகளில் முதலில் இருப்பது வெட்சி. அந்தத் திணைக்கு உரிய பூ வெட்சியாதலின் அப்பெயர் வந்தது. வெட்சிப் பூ முருகனுக்கு உகந்த மலர். "வெட்சித் தண்டைக் காலென் நிலை" என்று அருணகிரிநாதர் பாடுவார். ஆகவே, புறப்பொருளிலும் முதல் திணையோடு தொடர்புடையவனாக முருகன் விளங்குகிறான்.

கடைச்சங்க நூல்களாக இன்றும் என்றும் வழங்குபவை முப்பத்தாறு நூல்கள் அவற்றை மூன்று வரிசையாக பிரித்துள்ளார்கள். பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை அவை. அவற்றில் முதல் வரிசையில் நிற்பது பத்துப்பாட்டு எனும் தொகுதி. அதில் உள்ள பத்துப்பாடல்களில் முதலாவதாக இருப்பது திருமுருகாற்றுப்படை. முருகனுடைய புகழைக் கூறும் தன்மையால் அதை முப்பத்தாறு நூல்களிலும் முதலில் வைத்துப் போற்றுகிறார்கள். இவ்வாறு தொகை நூல்களில் முதலில் முருகன் நிற்கிறான்.

வீரமும் அழகும் நிறைந்தவன் முருகன். வீரர்கள் ஏந்தும் படைக்கலன்கள் பல. அவற்றில் சிறந்தவை வாள், வேல், அம்பு என்பவை. கையில் ஏந்தியபடியே பகைவரைத் துணிக்கும் கருவிகளைச் சஸ்திரம் என்றும் கையினின்றும் விட்டுப் பகைவரைச் சாடுவனவற்றை அஸ்திரம் என்றும் கூறுவர். வாள் சஸ்திரம், அம்பு அஸ்திரம். வேலோ இருவகையாகவும் பயன்படும். ஆதலின் இந்த மூன்று சிறப்பான படைக்கலன்களிலும் தலைமையுடையது வேல் என்று புலவர்கள் குறித்துள்ளார்கள். அத்தகைய முதன்மையான படையை ஏந்தும் முதல்வன் முருகன்.

இவ்வாறு முருகனைப் பல வகையிலும் முதல்வனாக வைத்து வழிபடுவது தமிழர்களின் வழி வழி வந்த பழக்கமாக இருந்து வருவதால் முருகனைத் தமிழ்க் கடவுள் என்று புலவர்கள் கூறுகிறார்கள்.

சுவைத்தொடர்

"கனவுகள் பலகோடி" தொடர்கதை எழுதிய எழுத்தாளர் மாங்கனிக்கு எமது பாராட்டுக்கள். கதையைச் சுவைபட எழுதியுள்ளார்.

அதர்ட்டன் தோட்டம், நெகிரி செம்பிலான்,
வீ. குப்புசாமி

விரைவிலா முடிவது?

"முருகுவைக் கேளுங்கள்" பகுதியில் திரு. முருகுவின் பதில்கள் யாவும் ஏற்கத்தக்கவையே. "கனவுகள் பலகோடி" தொடர்ந்து வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது இவ்வளவு விரைவில் முடியும் என்று எதிர்ப்பார்க்கவில்லை. எனினும் கதையில் இறுதிப்பகுதி மிக அருமை. கதாசிரியருக்கு எனது பாராட்டுக்கள். அகிலனின் தொடர் கதையான "பால்மரக் காட்டினிலே" மிக அருமை.

போர்ட்கிள்ளான், பொ. குணசீலன்

கானல் நீர்

பெரும்பாலும் காதலின் முடிவு கானல் நீர்தான். இருந்தாலும் தொடர் நவீனம் "கனவுகள் பலகோடி" நமக்கு நல்ல இதமான முடிவைத் தந்து முடிந்திருப்பது மனதுக்கு இனிமையாக இருக்கின்றது. "பாவையர் பக்கம்" என்று சொல்லிவிட்டு அதிலும் சிறிதளவு பிடுங்கிக் கொள்கிறீர்களே! பாவையர்கள் படையெடுத்து வந்துவிடப் போகிறார்கள்!

ஜெரம், சிலாங்கூர், எம். லெட்சுமணன்

இளம் நெஞ்சங்களின்...

"மாங்கனி" எழுதிய "கனவுகள் பலகோடி" தொடர்கதை அருமையான கதையென்றால் மிகையாகாது. இது இளம் நெஞ்சங்களின் ஆதரவைப் பெற்றிருக்கும் என்று நம்புகிறேன். முடிவில் கதாசிரியை மனதில் கீறல்களைக் கொடுத்து விட்டார்...!

சுங்கை சுமூன், கொ. வனிதநாதன்

78" காலண்டர்

சமூகத்திற்கு வழிகாட்ட வந்த புதிய சமுதாயத்தினால், மேலும் ஒரு பயனுள்ள அழகிய 78-ஆம் ஆண்டு காலண்டர் எங்களுக்கு கிடைத்தது. இதைக் கண்ட என் உள்ளம் மிகவும் பூரிப்படைந்தது.

புத்தாண்டில் புதிய சமுதாயம் மேலும் பல சுவையான கதை, கட்டுரை, கவிதைகளை ஏந்தி சிறப்பான மலராகத்தோன்ற வேண்டும்.

டேசுன் டுரியான் தோட்டம், சிலாங்கூர்,
எஸ். அஞ்சலை தேவி

உறவுப் பயணம்

"புதிய சமுதாயத்தின்" உறவுப் பயணத்திற்காக தாங்கள் பல இன்னல்களையும் அடைகிறீர்கள். அந்த இன்னல்களுக்கு ஏற்ப உங்கள் நோக்கங்கள், பயணங்கள் மூலம் பல வெற்றியைத் தேடி கொடுத்திருக்கிறது என்பதைக் கடந்த மூன்று உறவுப் பயணக் கட்டுரைகள் தெள்ளத்தெளிவாக விளக்கிக் காட்டின.

புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்,
எஸ். விஜய். விஜிதாஸ்

நிறைவு

புதிய சமுதாயம் இதழைப் படிக்கும்போது நல்ல தரமான ஒரு பத்திரிகையைப் படித்துவிட்ட ஒரு நிறைவு ஏற்படுகிறது. எல்லா அம்சங்களும் மிக நன்று வாழ்த்துக்கள்.

போர்ட்டிக்சன், குமாரி பி. எஸ். கமலா

நாளுக்குநாள்

புதிய சமுதாயம் நாளுக்குநாள் மெருகேறிக் கொண்டே போகிறது. புதிய சமுதாயத்தில் வரும் அத்தனை அம்சங்களும் கரும்புபோல் இனிக்கின்றன.

தாவாவ், சபா, ரிச்சர்ட் சௌரி

"கீறல்கள்"

புதிய சமுதாயத்தில் இடம்பெற்ற சிறுகதைகள் யாவும் மிகவும் சிறப்பாக இருந்தன. அதுவும் "கீறல்கள்" எனக்கு பிடித்த கதையும்கூட.

விளம்பரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் புதிய சமுதாயத்தை நான் வரவேற்கிறேன்.

பத்தாங்காலி, ஊதாப்பூ ராமச்சந்திரன்

அறுவை டாக்டர்

கே: தினமும் என் தலைமயிர் கொட்டிக் கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க வழி என்ன?
ப: மொட்டையடித்துக் கொள்ளுங்கள்.

கே: தொப்பை விழாதிருக்க என்ன செய்ய வேண்டும்?
ப: விழாதபடி கையால் பிடித்துக் கொள்ளுங்கள்.



கே: முதுமையைத் தவிர்க்க ஒரு வழி சொல்லுங்கள்?
ப: சிறந்த வழி, இளமையிலேயே இறந்துவிடுவது தான்!

-ப. செல்லம்மா,
கோலாலம்பூர்.

உறவுப் பயணம்-4



ராமதாஸ் மனேகரன்

புதிய இடங்களுக்குப் பயணம் செய்வதன்மூலம் புதிய அனுபவங்களையும், புதிய கருத்துக்களையும் பெறுவதோடு, புதிய நண்பர்களையும் பெறும் வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சென்ற 25-12-77முதல் 31-12-77 வரையில் நாங்கள் மேற்கொண்ட உறவுப் பயணம் நிரூபித்துக் காட்டியது. புனிதர் ஏசுகிறிஸ்துவின் பிறந்த நாளான (கிறிஸ்மஸ்) 25-12-77 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு தலைநகரிலிருந்து "புதிய சமுதாயம்" காரில் ஆசிரியர் முருகு அவர்களுடன் ஆசிரியர் பகுதியைச் சேர்ந்த திரு. பாதாசனும் நானும் கெடா மாநிலம் நோக்கி பயணமானேம். வழக்கமாக ஓட்டுநர் திரு. இராமசாமியே காரை ஓட்டினர்.

பிற்பகல் 3 மணிக்கெல்லாம் சுங்கைப் பட்டாணியிலிருக்கும் தமது இல்லத்திற்கு வந்து சேர்ந்துவிடுமாறு எழுத்தாளர் திரு. எம். ஏ. இளஞ்செல்வன் முன்கூட்டியே 24-12-77ல் தந்தி அனுப்பியிருந்தார். கெடாவில் அவருடைய முயற்சியினுல் தான் சந்திப்புக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவர் குறிப்பிட்ட நேரத்திற்குள் போய் சேர்ந்துவிட வேண்டுமே என்ற எண்ணத்தில் இடையில் எங்கும் நிற்காமல் சென்று கொண்டிருந்தோம். சிம்மோர் வந்து சேர்ந்தபோது பிற்பகல் 11 மணி ஆகிவிட்டது. அங்கிருந்த இந்தியர் உணவகம் ஒன்றில் தேநீர் மட்டும் அருந்திவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். சுங்கைசிப்புட், பேராவின் அரச நகரான கோலக்கங்சார் போன்ற ஊர்களையெல்லாம் கடந்துவிட்டோம். புக்கிட் கந்தாங் எனும் சிற்றூரை நெருங்குவதற்கு இன்னும் சுமார் ஒரு மைல் தூரமே இருந்தது. எங்களுக்கு முன்னுல் சென்று கொண்டிருந்த குளிர்சாதன வசதிகள் நிறைந்த சிங்கப்பூர் பயண பஸ் ஒன்றினை "ஓவர் டேக்" பண்ணினுர் எங்கள் டிரைவர். அதனைத் தொடர்ந்து லோரி ஒன்று அந்த நீண்ட நின்றது. முன்னுல் ஒரு விபத்து! எங்களுக்குப் பின்னுல் கண் மூடி கண் திறப்பதற்குள் மெர்சிடிஸ் பென்ஸ், ஓவர்டேக் செய்தபோது புதிய கார் ஒன்றுடன் எதிரும் புதிருமாக மோதிக்கொண்டது. நாங்கள் ஓவர்டேக் பண்ணிய அதே சிங்கப்பூர் பயண பஸ் எங்களுக் பஸ்ஸை "ஓவர் டேக்" செய்து எங்களுக்குப் பின்னுல் விரைந்து வந்துகொண்டிருந்தது. அடுத்த வினுடியே எங்களுக்கு போயிங் 747 விமானத்தில் பயணம் செய்வதைப் போல ஓர் உணர்வு ஏற்பட்டது. டிரைவர் திரு. இராமசாமி திடீரென "பைலட்டாக" மாறி விட்டார். புக்கிட் கந்தாங் நெடுஞ்சாலையின் முன்னுள் ஒரே கூட்டமாக இருந்தது. அந்தச் சாலையில் எதிரும் புதிருமாக கார்களும், வேன்களும் ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருந்தன. எங்கள் காரும் "சடன் பிரேக்"குடன் பின்னுல் "சடன் பிரேக்" போட்ட லோரியில் மோதியது. பயணிகளைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் அந்த பஸ் டிரைவர் இடதுபுறமாக பஸ்ஸை திருப்பவே அது அங்கிருந்த கால்வாயில் போய் விழுந்தது. சாலை ஓரத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வயது முதிர்ந்த மலாய்க்காரர் ஒருவர் அதனுடன் இழுத்துச் செல்லப்பட்டார். நல்லவேளையாக அங்கிருந்த அல்லூர் அவரை காயங்களுடன் உயிருக்கு ஆபத்தில்லாமல் காப்பாற்றி விட்டது. அவரின் முகமெல்லாம் ரத்தம் வழிய உடனடியாக மருத்துவமனைக்கு அங்கிருந்தவர்களில் சிலர் அழைத்துச் சென்றனர்.



கோலக்கெட்டில் சந்திப்பில் புதிய சமுதாயத்தின் நோக்கங்களை எடுத்துரைக்கிறுர் ராமதாஸ் மனேகரன். இடமிருந்து வலம்:- திருவாளர்கள் ஜெயராமன், பாதாசன், எம். ஏ. இளஞ்செல்வன், ஆசிரியர் முருகு.

நண்பர் பாதாசனும் நானும் விருட்டெனக் காரிலிருந்து இறங்கி ஆளுக்கு ஒரு பக்கம் விரைந்தோம். சுற்றுப்பயண பஸ்ஸிலிருந்த கதவுகள் அடைபட்டு விட்டதால் பின்னுலிருந்த

கண்ணாடியை உடைத்துக் கொண்டு பயணிகள் வெளியேறிக் கொண்டிருந்தனர். எங்கள், காருக்கு முன்னாலும் ஒரு பயங்கர விபத்து! அதனையும் போய்ப் பார்த்தோம். சாலையெல்லாம் போத்தல்கள் உடைந்து சிதறிக் கிடந்தன. தார் ரோடு சிவப்பு வண்ணத்தில் இருந்தது. இவ்வளவு ரத்தமா? அதைப் பார்த்ததும் என் உடல் சிலிர்த்தது. பிறகு தான் புரிந்தது அந்தச் சிவப்புக்கு காரணம்— "சில்லிசாஸ்" நிறைந்த பாட்டில்களை ஏற்றி வந்த வேன் விபத்துக்குள்ளானதால் உடைந்த பாட்டில்களிலிருந்த சில்லிசாஸ் ரத்தம் போலத் தோற்றமளித்தது.

அந்த விபத்தில் ஓர் உயிர் பிரிந்து விட்டதை அறிந்ததும் எங்களுக்குப் பெரும் வருத்தமாகிவிட்டது. அந்தச் சில நிமிடங்களில் 5 வாகனங்கள் முன்னும் பின்னும் மோதிக்கொண்டதும் இவற்றுக்கெல்லாம் மத்தியில் எங்கள் கார் நின்றுகொண்டிருந்தது. நல்லவேளை நாங்கள் பிழைத்துக் கொண்டோம். சிறிது நேரத்தில் போலிஸ்காரர்கள் வந்து போக்குவரத்துக்கு வழிவிட்டனர். எங்கள் பயணமும் தொடர்ந்தது. சில மைல்கள் கடந்து வந்துவிட்டோம்.

மீண்டும் நடு ரோட்டில் பெரும் கூட்டம் நிறைந்திருப்பதைப் பார்த்ததும் "ஐயையோ இங்கேயும் ஏதோ எக்ஸிடன்ட் ஆயிடுச்சு போல இருக்கு" என்று எங்கள் டிரைவர் பல்லவி பாட ஆரம்பித்து விட்டார். கார்கள் கியூவில் நின்று கொண்டிருந்தன. சங்கிலி தொடரைப் போல எங்கள் காரும் பின்னால் போய் நின்றது. மாத்தாங் எனும் அந்தப் பகுதியில் தைப்பூசத்திற்கு திரள்வது போல மக்கள் வெள்ளம் நிறைந்து நின்றது. பிறகுதான் எங்களுக்கு விஷயம் புரிந்தது. லாருட் மாத்தாங் ஓம்சக்தி சிவானந்த அருளானந்த முனீஸ்வரர் ஆலயத்தில் "திருவெம்பாவை உற்சவம்" காவடி பவனியோடு நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அங்கு வந்திருந்த மலேசியாவின் முதிய எழுத்தாளர்களில் ஒருவரான திரு. மா. செ. மாயதேவன் சொல்லக் கேட்டுத் தெரிந்து கொண்டோம். "திருவெம்பாவை உற்சவமா?" என்று எங்கள் ஆசிரியர் வியந்தார்-அவருக்குமட்டுமா வியப்பு? அப்படி ஒரு உற்சவத்தை நாங்களும் அன்றுதான் கேள்விப்பட்டோம். இந்த ஆலயத்திற்கு சொந்தமாக ஒரு



டாக்டர் எஸ். சுப்பிரமணியம்

தோட்டமும் இருப்பதை அறிந்ததும் எங்கள் வியப்பு பன்மடங்காகியது.

எங்கள் பயணம் தொடர்ந்தது. பிற்பகல் 2 மணியளவில் பட்டர்வொர்த்தில் மத்திய உணவை முடித்துக் கொண்டு சுங்கைப்பட்டாணியை நோக்கி விரைந்தோம். மெர்தேகா பாலத்தைக் கடந்ததும் "செலாமட் டாத்தாங் க கெடா" என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்ததும் நண்பர் பாதாசனும் நானும் நிமிர்ந்து உட்கார்ந்தோம். மலேசியாவின் நெற்களஞ்சியத்திற்குள் நுழைந்து விட்டோம் என்பதைப் பச்சை பசேலென கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் நெற்கதிர்களைப் பார்த்ததும் அறிந்துகொண்டோம்.

அந்த நெல் வயல்களில் எருமைகள் அருமையான வளர்ச்சியுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்றுகொண்டிருந்தன. சரியாக பிற்பகல் 3.15க்கு நண்பர் திரு. எம். ஏ. இளஞ்செல்வனின் இல்லம் சென்றடைந்தோம். வாசகர்களும் எழுத்தாளர்களும் ஆசிரியர் முருகுவின் வருகையை முன்கூட்டியே அறிந்திருந்ததால் இளஞ்செல்வனின் இல்லத்தில் ஒரு சிறு "படையெடுப்போடு" நின்றிருந்தனர். கனிவான வரவேற்புக்குப் பின் குளிர்பானங்களை இளஞ்செல்வனின் துணைவியார் சகோதரி ச. சுந்தராம்பாள் முகமலர்ச்சியுடன் எல்லோருக்கும் வழங்கினர்.

"என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எங்கெங்கு எப்போது செல்லவேண்டும்" என்பதை நாங்கள் கேட்பதற்கு முன்பே சந்திப்புக் கூட்டங்களின் முழு விவரத்தையும் வரிசையாக எழுதிய அட்டவணை ஒன்றினை ஆசிரியரிடம் வழங்கினார் நண்பர் இளஞ்செல்வன். உறவுப் பயணத்திற்கான அந்த அட்டவணையை நாங்கள் கூர்ந்து நோக்கினோம்.

கோலக்கெட்டில், சுங்கை டிவிஷன், மாலோ தோட்டம், பெட்னோக் தோட்டம், தேய்லை தோட்டம், ஹார்வார்ட் தோட்டம், சுங்கைப்பட்டாணி, பட்டாணிபாரா தோட்டம் இப்படி நிறைய இடங்களில் சந்திப்புக் கூட்டங்களை வெவ்வேறு நாட்களில் ஏற்பாடு செய்திருப்பது தெரியவந்தது.

25-12-77ஆம் தேதி முதல் கூட்டம் கோலக்கெட்டிலில் அம்னோ மண்டபத்தில் தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் ஏற்பாட்டில் மாலை 5 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாலை 4 மணிக்கு நண்பர் இளஞ்செல்வனுடன் எங்கள் உறவுப்பயணத்தின் முதல் கூட்டத்திற்குக் கோலக்கெட்டில் நோக்கிப் பயணமானோம்.

மாலை 5.30க்கு அம்னோ மண்டபத்தில் கோலக்கெட்டில் தமிழ் இளைஞர் மணிமன்றச் செயலாளர் திரு. மணிராஜ் வரவேற்புக் கூற, சந்திப்புக் கூட்டம் ஆரம்பமானது. மணிமன்றத் தலைவர் திரு. எஸ். ஜெயராமன் தலைமையுரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து மன்றக் காப்பாளர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்களும், கெடா மாநில மணிமன்றப் பேரவையின் செயலாளர் திரு. சகாதேவனும் சிறப்புரை ஆற்றினர். அவர்களை அடுத்து நண்பர் திரு பாதாசனும் நானும் உரையாற்றினோம்.



"ஏண்டா, உச்சந் தலையிலே மட்டும் மொட்டை அடிச்சிருக்கே?"
"அங்க வழுக்கையா இருந்தா

அதன் பின்னர் ஆசிரியர் முருகு அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் தம் உரையில் "இந்நாட்டில் நாம் மானம் மரியாதையோடு வாழவேண்டுமானால் தமிழ் அவசியமானது. நம் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தமிழ் நிச்சயமாக ஒரு தடைக்கல்லாக இருக்காது" என்று கூறினார்.

அதன் பின்னர் கலந்துரையாடல் நிகழ்வுற்றது.

திருவாளர்கள் எம். எல். முத்தையன், கே. எஸ். மணியம், சுங்கை உலார் மணிமன்றத் தலைவர் எஸ் சுப்பிரமணியம், த. ப. லெட்சுமணன் போன்ற தமிழ் நெஞ்சங்கள் சிறமான கருத்துக்களை எடுத்துரைத்தனர். தேநீர் விருந்துடன் கோலக் கெட்டில் சந்திப்பு, இரவு 7.30 மணிக்குக் கோலாகலமாக முடிவுற்றது. அதன் பின்னர் சுங்கைப்பட்டாணி யு. பி. சுங்கை டிவிஷனில் துங்கு அப்துல் ரஹ்மான் நூல் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டாவது சந்திப்புக்குப் போகவேண்டி இருந்ததால் கோலக்கெட்டில் மணிமன்ற நண்பர்களுடன் சிறிது நேரம் அவகாசமாகப் பேசக்கூட முடியவில்லை. அரை மணிநேரம் காலதாமதம் வேறு ஏற்பட்டு விட்டது. நண்பர் இளஞ்செல்வன் எங்களைக் 'கடத்திக்' கொண்டு போவதில் குறியாக இருந்தார்.

யு. பி. சுங்கை டிவிசன்

இரவு எட்டு மணிக்கு யு. பி. சுங்கை டிவிசன் தோட்டம் வந்தடைந்தோம். எங்களுடன் நண்பர் எஸ் ஆர். பஞ்சவர்ணமும் ஒட்டிக்கொண்டார்- அவர் தான் எங்கள் படப்பிடிப்பாளர். யு. பி. டிவிசனில் எங்களை அகமும் முகமும் மலர ஓர் உயர்ந்த மனிதர் வரவேற்றார். அவர் தான் நூலகத் தலைவரும் புதிய சமுதாயத்தின் ஏஜண்டுமான திரு. பெ. க. நாராயணன். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு ஆறு ஆண்டு காலமாக இயங்கிவரும் இந்த நூலகத்தில் 200 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். 1,500 நூல்கள் இருக்கின்றன.

நூலகச் செயற்குழு உறுப்பினர் திரு. பெ. க. முருகேசு வரவேற்புரை நல்கிய பின்னர் திரு. மு. செல்லையாவின் கடவுள் வாழ்த்துப் பண்ணுடன் கூட்டம் ஆரம்பமானது. திரு. பெ. க. நாராயணன், ஆசிரியர் முருகு அவர்களுக்கு நூலக சார்பாக மலர்மாலை அணிவித்துத்



கோலக்கெட்டில் ந்திப்பில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்.


தலைமையுரை ஆற்றினார். அந்தக் கூட்டத்திலேயே அடுத்த இதழிலிருந்து கூடுதலான பிரதிகளுக்கு "ஆர்டர்" கொடுத்து எங்களின் உறவுப் பயணத்திற்கு உரமூட்டினார் "உயர்ந்த மனிதர்" திரு. நாராயணன்.

அதன் பின்னர் ஆசிரியர் முருகு சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து வாசகர்கள் கலந்துரையாடல் நடந்தது. துருவித் துருவிப் பல கேள்விகளைக் கேட்டு எங்கள் ஆசிரியரையே திக்குமுக்காட வைத்து விட்டார்கள் யு. பி. டிவிசன் புதிய சமுதாயம் வாசகர்கள்.

திருவாளர்கள்: குணாளன், செல்லையா, முருகேசன், ஆ. சுப்பிரமணியம், ராமசாமி, கே. முனியாண்டி, எஸ். முத்தையா போன்றவர்கள் "பட்பட்" எனப்பலவிதமான கேள்விகளைக் கேட்டு ஆசிரியரிடம் விளக்கம் பெற்றனர்.

தேனீர் விருந்துடன் சந்திப்பை இனிதே முடித்துக் கொண்டு நூலகத்தை விட்டு எங்கள் காரை நோக்கி நடந்தோம். திடீரென நூலகம் முன்பு ஒரு மறியல் நடைபெற்றது. "ஒரு குரூப் போட்டோ எடுத்துக்கொண்டப் பிறகே உங்களையெல்லாம் நாங்கள் விடுவோம்!" என்ற அன்புக் குரல்கள்! நூலக உறுப்பினர்களின் அன்புக் கட்டளையை எங்களால் மீற முடியுமா? "குரூப் போட்டோ" எடுத்துக் கொண்ட பிறகு எல்லோருக்கும் நன்றிகூறி சுங்கைப் பட்டாணி நோக்கித் திரும்பினோம். அந்நேரம் என் கை கடிகாரத்தைப் பார்த்தேன். இரவு மணி 9.25 ஆகிவிட்டிருந்தது.

காரில் வரும்போது கோலக் கெட்டில் மணிமன்ற உறுப்பினர்களின் மணிமணியான கருத்துக்களைப் பற்றியும் யு பி. டிவிசன் நூலக இளைஞர்களின்



சுங்கை டிவிசன் துங்கு அப்துல் ரஹ்மான் நூலகத் தலைவர் திரு. பெ. க. நாராயணன் ஆசிரியருக்கு மாலை அணிவிக்கிறார்.

துணிவான கேள்விக்கணைகளைப் பற்றியும் காரிலிருந்த நண்பர் பாதாசனும், இளஞ்செல்வனும் நானும் ஆசிரியருடன் ஒரு "குட்டி" மாநாட்டையே நடத்திக்கொண்டு இரவு 10.30 மணியளவில் சுங்கைப்பட்டாணி வந்து சேர்ந்தோம். இளஞ்செல்வனின் இல்லத்தில் இரவு உணவை "லேட்"டாக உண்டு விட்டு, நாங்கள் நால்வரும் சுங்கைப்பட்டாணி ஜாலான் இப்ருகிமிலுள்ள திரு. இராம. முத்தப்பன் அவர்களின் இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம்.

பாதாசனும் நானும் அடித்துப் போட்ட பாம்புபோல அயர்ந்து படுத்துவிட்டோம். எங்களுக்கு முன்னாலேயே எங்கள் "பைலட்" டிரைவர் இராமசாமி குறட்டை விட ஆரம்பித்துவிட்டார். எங்கள் ஆசிரியருக்கும் தூக்கம் சொக்கிக் கொண்டுதான் வந்தது. ஆனால் திரு இராம. முத்தப்பன் ஆசிரியரைத் தூங்கவிடவில்லை. அவர் இலக்கிய சர்ச்சையில் ஈடுபட்டு சுவாரசியமாகப் பேச ஆரம்பித்துவிட்டார். அவர்கள் எத்தனை மணிக்கு உறங்கினார்களோ எனக்குத் தெரியாது. நித்திராதேவி எங்களை அணைத்துக்கொண்டுவிட்டாள்.



சுங்கை டிவிஷன் சந்திப்பில் கலந்து கொண்ட இளைஞர்களில் ஒரு பகுதியினர்.

அடுத்த நாள் 26-12-77 திங்கட்கிழமை. கூலிம் பெலாம் தோட்டத்தில் நண்பர் எம். ஏ. இளஞ்செல்வன் மூன்றாவது சந்திப்புக் கூட்டத்திற்கு மாலை 4 மணியளவில் ஏற்பாடு செய்திருந்தார். முதலில் பெட்னேக் தோட்டத்திற்குச் சென்று அங்கிருந்து நண்பர் ஒருவரை அழைத்துக்கொண்டு பெலாம் தோட்டத்திற்குச் சென்றோம். போய்ச் சேருவதற்குள் எங்கள் டிரைவர் கதறுத ஒரு குறை தான். பாதை கரடு முரடாக இருந்ததால் கார் வீணாகிவிடுமே என்று சலித்துக் கொண்டே ஓட்டிக்கொண்டு வந்தார்.

அந்தத் தோட்டத்தில் மாலை மணி 5.20க்கு கூட்டம் ஆரம்பமானது. தமிழாசிரியர் திரு கோ. புண்ணியவான் வரவேற்புரை ஆற்றினார். அவர்தம் உரையில் இந்தத் தோட்டத்திற்கு முருகு அவர்களின் வருகை ஒரு வரப்பிரசாதமாகும் என்று வர்ணித்தார்.


இனிய நண்பர் இளஞ்செல்வனின் அறிமுகவுரைக்குப் பின்னர் ஆசிரியர் முருகு சிறப்புரை ஆற்றினார். சந்திப்புக் கூட்டத்தில் இளைஞர்களும், தோட்டத்துப் பாவையர்களும் நிறைய பேர் கலந்து கொண்டிருந்தனர். நண்பர் பாதாசன் தாமே இயற்றிய "அடி என்னடி மூக்கம்மா" என்ற பாடலைப் பாடி மகிழ்வித்தார்.

அந்தச் சந்திப்புக் கூட்டத்தினைச் சமூகத் தொண்டரும் பெக்கான் மாலாவ் ம. இ. கா. செயலாளருமான திரு எஸ். பரசுராமன் ஏற்பாடு செய்திருந்தார். வாசகர்களின் கலந்துரையாடலுக்குப் பின்னர் நண்பர் திரு புண்ணியவானின் நன்றியுரையுடன் மாலை சுமார் 6 மணிக்கு சந்திப்பு நிறைவுக்கு வந்தது.

பெட்னேக் தோட்டம்

மாலை 5.30 மணிக்கு பெட்னேக் தோட்டத்தில் சந்திப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது ஆனால் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் பெலாம் தோட்டத்தில் கூட்டம் ஆரம்பிக்கக் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. நண்பர் இளஞ்செல்வன் தன் கைகடிகாரத்தை விநாடிக்கு ஒரு தரம் பார்த்துக் கொண்டே இருந்தார் என்று சொன்னால் கூட அது மிகையாகாது. ஒரு வழியாகப் பெலாம் தோட்டத்து ஏற்பாட்டாளர்களுக்கும், வாசக நண்பர்களுக்கும் பிரியாவிடை கொடுத்துவிட்டு மீண்டும் கரடு முரடான பாதையில் பெட்னேக் தோட்டம் நோக்கித் திரும்பினோம். மாலை 6.45க்கு பெட்னேக் தோட்ட மாரியம்மன் கோயிலில் ஆராதனைக்குப் பின்னர் சந்திப்புக் கூட்டம் ஆரம்பமானது. பெட்னேக் மாரியம்மன் கோயில் துணைத்தலைவர் திரு. ஏ. விஸ்வநாதன் வரவேற்புரை ஆற்றினார். நண்பர் இளஞ்செல்வன் அறிமுகவுரை ஆற்றினார். நண்பர் பாதாசன் அங்கும் "சிவப்பு பாஸ்போட்" தொல்லையை விளக்கும் "மூக்கம்மா" பாடலை பாடிச் சிந்தனைக்கு விருந்தளித்தார். ஆசிரியர் முருகு சிறப்புரை ஆற்றிய பின்னர் கலந்துரையாடல் நடைபெற்றது. திருவாளர்கள் எஸ். நடராஜா, எம். செல்லப்பன் புதிய சமுதாய வளர்ச்சிக்குக் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எடுத்துக் கூறினர். பெட்னேக் தோட்டத்தில் விற்பனைப் பொறுப்பை திரு. மணியம் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

பெட்னேக் தோட்டத்து ம. இ. கா. பொருளாளர் திரு. எஸ். விஜயனும், பெட்னேக் ம. இ. கா. துணைத்தலைவர் திரு. எம். சாமிக்கண்ணுவும் இந்நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தனர். இரவு 7.30 மணிக்கு சந்திப்பு இனிதே முடிவடைந்தது. ஏற்பாட்டாளர்கள் எங்களுக்குக் குளிர்பானங்களை வழங்கி குளிர்ந்த முகங்களுடன் பிரியாவிடை தந்தனர்.



டிரைவர்: பஸ்ஸுல பிரேக் அறுந்து போச்சு. குதிக்கிறவங்க எல்லாம் குதிச்சிருங்க.

சுங்கைப்பட்டாணி நோக்கி நாங்கள் திரும்பிக் கொண்டிருந்தோம். இரவு எட்டு மணிக்கு பீடோங் தமிழ்ப்பள்ளியின் தலைமையாசிரியர் திரு. சு. தில்லையப்பன் அவர்கள் இரவு விருந்துக்கு ஏற்பாடு செய்திருப்பதாக நண்பர் இளஞ்செல்வன் கூறினார். நான் நண்பர் பாதாசனின் முகத்தைப் பார்த்தேன்- "ஐயோ பாவம்! அருமையான விருந்தை விட்டுட்டுப் போகப் போறீங்களே...?" என்று என் பார்வை .சொல்லாமல் சொல்லி இருக்கும் போலிருக்கிறது. "மனோகரன், என் பங்கையும் சேர்த்து நீங்களே சாப்பிட்டு விடுங்கள்!" என்று கூறி முறுவலித்தார் நண்பர் பாதாசன். மறுநாள் செவ்வாய்க்கிழமை அவருக்குத் தலைநகரில் வேலை இருந்ததால் அன்றிரவு 10மணி மெயிலில் பட்டர்வொர்த்திலிருந்து தலைநகர் திரும்பி விடுவதாக ஏற்கனவே திட்டம் போட்டிருந்தார் பாதாசன். மாலையிலிருந்து நண்பர் இளஞ்செல்வனும் நானும் என்னென்னமோ ஆசை வார்த்தைகளெல்லாம் கூறிப்பார்த்துவிட்டோம். ஊஹூம் அவர் மயங்கவில்லை; மசியவில்லை. தலைநகர் திரும்புவதிலேயே குறியாக இருந்தார். இரவு 8.30க்கு சுங்கைப்பட்டாணி வந்து சேர்ந்தோம். முதல்வேலை-நண்பர் பாதாசனைப் பட்டர்வொர்த்திற்குவழியனுப்பி வைக்கவேண்டும். டாக்சி கிடைக்காததால், எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் செல்லுவதற்கான வழிகளை நண்பர் இளஞ்செல்வன் விளக்கிக் கூறிய பின்னர்- குழந்தைக்கு "டாட்டா" காண்பிப்பதுபோல நண்பர் பாதாசனுக்கு டாட்டா காட்டிவிட்டு நாங்கள் விடை பெற்றோம்.



பெட்னேக் தோட்டச் சந்திப்புக் கூட்டத்தில் ஆசிரியர் முருகு பேசுகிறார்.

இரவு 9 மணிக்குத் தலைமை ஆசிரியர் திரு. தில்லையப்பன் அவர்களின் இல்லத்தில் பல் சுவை நிறைந்த விருந்தினை ஒரு "கை" பார்த்தோம். தில்லையப்பன் தம்பதிகள் எங்கள் ஆசிரியர் "சரண்டர்" ஆகும் வரை ஒன்று மாற்றி ஒன்றைப் பரிமாறித் திக்குமுக்காடா வைத்து விட்டார்கள். எங்கள் பாடும் அப்படித்தான்!

விருந்து முடிந்து எல்லோரும் சுவையாக உரையாடிக் கொண்டிருந்தோம். அந்த சுவைக்கு மேலும் சுவைச் சேர்க்கும் வண்ணம் ஐஸ்கிரீமை எல்லோருக்கும் வழங்கி மேலும் சுவை சேர்த்தார் திருமதி தில்லையப்பன். அந்நேரம் பார்த்துக் குறிஞ்சி மலர் பூத்தது போல 'டி வி.'யில் ஒரு தமிழ்ப் பாடலையும் கேட்டு மகிழ அரிய தொரு வாய்ப்பும் எல்லோருக்கும் கிடைத்தது. தில்லையப்பன் தம்பதிகளுக்கு இரவு வணக்கம் கூறி விடை பெற்றோம். அன்றிரவு நாங்கள் படுக்கையில் போய்ச்சாயும்போது இரவு மணி 12.00

(இன்னும் வரும்)

கூலியாள் பிரதமரானார்

ஃ சிறு பிள்ளைகளுக்கு பள்ளிக்குப் போகும்போது வாங்கிச் சாப்பிடக் கொடுக்கும் சில்லரையில் பாதியைச் சேர்த்து வைக்கச் சொல்ல வேண்டும். சேமிப்பின் அவசியத்தை எடுத்துரைக்க வேண்டும். ஓர் அழகான உண்டியல் வாங்கிக் கொடுக்க வேண்டும். இந்தில் எதுவும் எளிதாக வளைந்து விடும்.

ஃ பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது இரண்டு ஆட்கள் சாப்பிடும் உணவை உட்கொள்ள வேண்டும். நன்றாகப் பகலில் உறங்க வேண்டும். பழங்கள் நிறைய சாப்பிட வேண்டும். கலகலப்பாக எந்நேரமும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் குழந்தையின் வளர்ச்சி நன்றாகவும் உறுதியாகவும் இருக்கும்.

ஃ ஆபீஸ் உத்தியோகம் பார்ப்பவர்கள் மாலை மணி 4க்கு வீடு திரும்பியபின் என்ன செய்ய வேண்டும்? (1) பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். (2) பிள்ளைகளை நடக்கக் கூட்டிக் கொண்டு போக வேண்டும். (3) மனைவி மக்களோடு கொஞ்ச நேரமாவது சிரித்துச்சிரித்துப் பேச வேண்டும். (4) கடைகளுக்குப் போக வேண்டுமானால் தானே போய்வர வேண்டும். (5) மனைவிக்கு உதவியாக வேலைகள் எதுவும் செய்து கொடுக்க வேண்டும். காலையில் 8 மணியில் இருந்து மாலை 4 மணி வரை எழுதிக் கொண்டே இருப்பதால் மூளை மட்டும் அதிக வேலை செய்யும். கொஞ்சமாவது உடற்பயிற்சி வேண்டாமா?

ஃ மூளையும் முயற்சியும் இருந்தால் நிச்சயம் முன்னுக்கு வந்துவிடலாம். ஸர் வின்ஸ்டன் சர்ச்சில் அதிகம் படித்தவரல்ல. கூலி வேலை செய்தவர். பிரிட்டனின் பிரதமராக 1941ல் பதவி ஏற்றார். ஆப்ரஹாம் லிங்கன் சொந்தமாகப் படித்து வக்கீலானார். தமிழ்வாணன் ஒரு S.S..L.C. படித்தவர்தான். எவ்வளவோ துப்பறியும் நாவல்களும் அறிவு நூல்களும் எழுதிப் புகழ்பெற்றவர்.

ஃ உங்களுக்கு இனிப்பு நீர் (DIABETES) வியாதி இருக்கிறதா? உடனே டாக்டரை சந்தித்து இன்சுலின் (INSULIN) ஊசி போட்டுக்கொண்டு சுகமாக வாழுங்கள்.


ஃ மலேசியாவில் ஒரு காலத்தில் தங்கத்தைச் சிறிய அளவில் பூமிக்கு அடியில் இருந்து வெட்டியெடுத்தார்கள். வெட்டியெடுத்த இடம் ரவுப் (RAUB) பஹாங் மாநிலத்தில் உள்ளது. இப்பொழுது தங்கம் கிடைக்கவில்லை

பெண்கள் பேசுவதில் மட்டு மல்ல, சம்பாதிப்பதிலும் சமர்த்தான வர்கள் தாம்! இதைப் பற்றி வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கும் மூன்றுபெண்மணி களை அண்மையில் சந்தித்து அவர்களின் எண்ணத்தை அறிய முற்பட்டேன். அவர்கள் கூறியவற்றின் தொகுப்பு:



பேட்டி — மனோ

"உள்ளப்பாங்காலும், உடல் அமைப்பாலும் பெண்கள் ஆண்களை விட வேறுபட்டவங்க. ஆகவே அவங்க இயல்புக்கு ஏத்த மாதிரி யான வேலைகளைச் செய்வதில் தவறு இல்லை.



"புதுமைப் பெண்களடி பூமிக்கு கண்களடி" என்று சொல்வார்கள். இந்த நவநாகரிக பூமியில் பெண்கள் வீட்டிலேயே அடைந்து கிடக்கா மல் துணிந்து வந்து நேர்மையான முறையிலே, சம்பாதித்துக் குடும் பத்தின் சுமையைக் குறைப்பதில் ஈடுபடுவதில் நன்மைதான் நிறைய இருக்கு.

"வீணே வீட்டில் அரட்டை அடித்துப் பொழுதைக் கழிப்பதை விட வெளியில் சென்று வேலை பார்ப்பது நல்லது இல்லிங்களா? நாமே சம்பாதிப்பதால் நமக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ள மற்றவர்கள் கையை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது" என்று புன்னகை தவழ கருத் துரைத்தார் கோலாலம்பூர் சன் டெக்ஸ்கார்டனைச் சேர்ந்த குமாரி ஏ. ஜெயலட்சுமி.

"ஆணுக இருந்தாலும் சரி, பெண்ணுக இருந்தாலும் எல்லோ ருக்குமே இப்ப ரொம்ப கஷ்ட மான நிலைமையாகத் தான் இருக் குங்க! இதற்கெல்லாம் காரணம் வரவு குறைவாகவும் செலவு அதிக மாகவும் ஆகிவிட்டது தான்! இந்த நிலையிலே பெண்கள் இப்படி யிலேயே இருந்துட்டா எப்படிங்க?



எங்க வீட்டிலே நானும் என் அக்காவும் ரப்பர் மரம் வெட்டிச் சம்பாதிக்கிறோம். எனக்கு மாதத் துக்கு கிட்டத்தட்ட $280 சம்பளம் கிடைக்குது. என் தங்கச்சி வெளிக் காட்டு வேலைக்குப் போகுது. சும்மா வீட்டிலிருந்தால் எப்படிங்க பணம் வரும்? வேலை செய்யணும்— குடும்பத்தை நல்லவிதமா கவனிச் சுக்கணும். சேமிக்கவும் பழகணும்" என்று பளிச்செனத் தனது எண் ணத்தை வெளிப்படுத்தினர் மலாக்கா, டேவான் தோட்டத்தைச் சேர்ந்த குமாரி மு. புஷ்பம். இவர் டேவான் தமிழ் இளைஞர் மணிமன் றத்தின் மகளிர் பகுதி தலைவியுமா வார்.



"இப்ப பாருங்க. விலைவாசி களெல்லாம் உச்சி வெயில் மாதிரி சூடா ஏறிப் போயிடுச்சி! இந்த நிலையிலே சின்னக் குடும்பத்தை வைத்துச் சமாளிக்கிறதே பெரிய பாடு! பெரிய குடும்பத்திலே இருக் கிறவங்க பாடு அப்பப்பா...சொல்ல வேணுங்களா! குடும்ப பாரத்தை ஆண்கள் மட்டும் சுமக்கிறதை விட அதனைப் பெண்களும் சிறிது சுமந்து, அந்தப் பாரத்தைக் குறைப் பதற்கு— பெண்களும் வேலைக்குப் போய் சம்பாதிப்பது தான் சிறந்த வழி.

"வீட்டில் சும்மா இருப்பதால் என்ன கிடைக்கப் போகிறது? வீட் டிலிருந்து சோம்பேறியாக ஆவதை விட வேலைக்குப் போனால் சுறு சுறுப்பாகவும் இருக்கும். குடும்ப சிரமத்தைக் குறைக்க சம்பாதிக்க வும் வழி கிடைக்கும்" என்று கருத்துரைத்தார் தலைநகரில் ஒரு பேப்பர் கம்பெனியில் பணிபுரியும் குமாரி எம். தேவிபிள்ளை

கோய் புத்திரி

தேவையானவை:

முழு தேங்காய் 1. பூளோர் 1 கப். முட்டை 1, டவுன் பாண் டான் இலைகள், எண்ணெய் 3 மேஜை கரண்டி, உப்பு 1 தேக் கரண்டி, கோதுமை மாவு 2 கப், பச்சைக் கலர்.

செய்யும் முறை:

முதலில் தேங்காயைத் துருவி, பிறகு தேங்காய்ப் பூவில் 2 கப். தண்ணீர் விட்டு முதல் பாலும், 2 கப் தண்ணீர் விட்டு இரண்டாம் பாலும் எடுத்துக் கொள்ள வேண்டும். பூளோரைச் சுத்தம் செய்து 10 நிமிடம் ஊற வைத்த பின் உப்புப் போட்டு 2-ஆம் பாலை யும் சேர்த்துச்சிறிது டவுன் பாண் டான் இலையையும் போட்டு வேக வைக்கவும். சீனியையும், முட்டையையும் சேர்த்துக் கரை யும் வரை அடித்து, பின் முதல் பால், கோதுமை மாவு, பச்சைக் கலர் இவற்றையும் சேர்த்துக் குழைய எடுத்துக் கொள்ளவும். பூளோர் வெந்திருக்குமானல் இறக்கி ஒரு கட்டில் எண்ணெய் தடவி பூளோரை இறுக்கமாக வும், கட்டியாகவும் தட்டிக் கலவையில் ஊற்றி மறுபடியும் ஆவியில் வேக விடவும். வெந்த தும் மணம் வரும். பின் இறக்கி ஆறியவுடன் கத்தியில் எண் ணெய் தடவி வெட்டியெடுத்துச் சாப்பிடலாம்.

அ. மாலதி நாயர்,
ஆயர் பூத்தே தோட்டம்,

தொடர்கதை

உண்மைகள்

சா. ஆ. அன்பானந்தன்

1. வெள்ளம்

நாளை என்பது பிரசவமாகிக்கொண்டிருந்த அந்த நள்ளிராப் போது. நான் தங்கியிருந்த மூன்றாவது மாடியிலிருந்து சாளரத்தின் வழியே வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன்.

பால்நிலா காய்ந்துகொண்டிருந்தது. பாற்குடம் கவிழ்ந்துவிட, தரையில் பால் பாய்ந்தோடுவதுபோல் நிலாப்பானை கவிழ்ந்து அதன் ஒளி வெள்ளம் தரையில் பாய்ந்தோடுகின்றதோ என்று வியந்து நிற்கிற அளவுக்கு பார்க்கும் இடமெங்கும் வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது.

ஆம். 1971இல் கோலாலம்பூரில் வெள்ளம் ஏறியிருந்த அந்தக் காட்சிதான் அது.

பால்நிலா மண்ணகத்தைப் பாலித்திருந்த பொருத்தம் அந்த நாட்களிலேதான் முழுமையாக நிகழ்ந்ததோ என்னவோ?

வானத்திலே ஒளிவெள்ளம். பூமியிலே நீர் வெள்ளம். என் கண்களிலே கண்ணீர்வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது.

ஆற்ற முடியாத மனிதனுக்குச் செய்யமுடிந்த ஒரே காரியம் அழுவதுதான்.

என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கி உலகத்தில் ஒரு மனிதனாக உலவவிட்ட அன்னைத் தெய்வத்தைக் காப்பாற்றும் ஆற்றல் என்னிடமில்லாதிருந்ததால் நான் அழத்தான் முடிந்தது.

எல்லார்க்கும்தான் அன்னை வாய்த்துள்ளாள். எனக்கும்தான் வாய்த்தாள். காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது பழமொழி. ஆனால் ஒவ்வொரு பிள்ளைக்கும் தன் தாயே உயர்ந்த தாய். இதிலே நான் வித்தியாசப்பட விரும்பவில்லை.

“டேய்! போடா! எங்கம்மாதான் நல்லவங்க!” மாரிமுத்து இப்படிச் சொன்னான்.

> “ஆற்ற முடியாத மனிதனுக்குச் செய்யமுடிந்த ஒரே காரியம் அழுவதுதான்!”

“சும்மா பீத்தாதேடா! எங்கம்மா தான் ரொம்ப நல்லவங்க!” என்று நான் அடித்துச் சொன்னேன்.

“சரிதான் போடா! உங்கம்மா என்னடா உங்கம்மா! உங்க அம்மாவுக்கும் அம்மாவவிட எங்கம்மாதான்டா ஒசத்தி” என்ற மாரிமுத்துவின் இந்தப் பேச்சை என்னால் கொஞ்சங்கூடப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எங்கம்மாவை அணு அளவுகூட எவரும் குறைத்துப் பேசுவதை என் மனம் ஒப்புக்கொள்வதில்லை. ஆத்திரம் கட்டு மீறியது. அவ்வளவுதான்.

“டேய் மாரிமுத்து! எங்க அம்மாவையா நல்லவங்க இல்லேன்னு சொன்னே! உன்ன என்ன செய்யிறேன் பாரு” என்று கூறிய நான் கீழே கிடந்த கல்லை எடுத்து அவன் தலையை நோக்கி வீசி விட்டேன்.

கல்லுக்கு நியாயம் அநியாயம் தெரியுமா என்ன! அது நேரே பாய்ந்து அவன் தலையில் பொட்டென்று பட்டு விழுந்தது.

“ஐயோ! அம்மா” என்று அலறிய மாரிமுத்து வலி பொறுக்காமல் கத்திவிட்டான்! கொஞ்ச நேரத்தில் அவன் தலையிலிருந்து அவன் சின்ன விரல்களுக்கிடையே இரத்தம்வெளிப்பட்டது. இதைக் கண்டதும் நான் அங்கேயா நிற்பேன். ஒரே ஓட்டம். என் அம்மாவிடம் வந்து தான் நின்றேன்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தலையில் கட்டுப்போட்ட நிலையில் மாரிமுத்துவும் அவன் அம்மா பூங்காவனமும், அவன் அப்பா சுப்பையாவும் என் அம்மாவைத் தேடி வந்து விட்டார்கள்.

நான் நல்ல பிள்ளைபோல அம்மாவின் கைலிக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு வெளியே கொஞ்சம் போல தலையை நீட்டினேன்.

“டேய் ஐயாவு! வெளியே வாடா! உங்கம்மா பின்னாலேயா ஒளிஞ்சுகிட்டே! உன்ன என்ன செய்யறேன் பாரு!” என்று சொல்லிக்கொண்டே என் தலையை நோக்கிக் கையை நீட்டினார் சுப்பையா! அதற்குமேல் நான் மட்டும் சும்மா இருப்பேனா!

“அ ம் மா...” என்று வாயைப் பிளக்கத் தொடங்கிவிட்டேன்!

அம்மாவுக்கு எதுவும் புரியவில்லை.

“ஏண்ணே! என்ன பண்ணினான் ஐயாவு! மாரிமுத்து தலையிலே என்ன கட்டு!” அம்மா கேட்டாள்.

“என்னான்னா கேட்கிறே! முருகம்மா! நல்லா கேட்டுக்க! என் மருமவன் இருக்கிறானே, மருமவன்! அவன்தான் உன் அழகான புள்ள ஐயாவு. என் புள்ள மண்டைய கல்லால அடிச்சு உடைச்சுட்டு ஓடிவந்து இந்தப் பூனையும் பாலக் குடிக்குமாங்கிற மாதிரி உன் பின்னால வந்து ஒண்டிக்கிட்டான்!” சுப்பையா இப்படிச் சொன்னதும் என்னைத் திருப்பி வளைச்சிப் பிடித்த என் அம்மா.

“ஏண்டா! மாரிமுத்துவ அடிச்சே!” என்று கேட்டாள்!

“அப்புறம் ஏன் அவன் “உங்கம்மா நல்ல அம்மா இல்ல எங்கம்மாதான் நல்லவங்கன்னு” சொன்னான்!”

அம்மா கேட்ட கேள்விக்கு அழுதுகொண்டே சொன்னேன்.

“அட என் ராசா! அம்மாவ நல்லவங்க இல்லன்னு சொன்னதுக்காகவா கல்லால அடிச்சே?” என்னை அப்படியே வாரி அணைத்துக்கொண்ட அம்மாவின் கடைக்கண்களில் நீர் திரண்டது.

"என்ன அண்ணி, இது நாயம்! உன் மவன் மட்டுந்தான் அம்மா மேலே பாசமுள்ளவனு! என் புள்ளைக்கு மட்டும் என் மேல பாசம் கிடையாதா?" அத்தை பூங்காவனத்தின் பேச்சில் கொஞ்சம் கோபம் கலந்திருந்தது.

"கோவிச்சுக்காதே அண்ணி! உன் மருமவன்தானே! அறியாம செஞ்சிட்டான்! நான் கண்டிக்கிறேன்! அப்படியும் உங்களுக்கு மனசாருதுன்னு இந்தா உன் கிட்டையேவிடறேன். நீ என்ன செய்ய விரும்புறியோ செஞ்சுக்க!" என்றவாறு என்னை இறக்கி அத்தையின் முன்னுல் அம்மா விட்டாள்.

நான் நீரை ஆருக ஓடவிட்டபடி அத்தை முகத்தைப் பார்த்தேன்! அத்தையும் ஒரு தாய் தானே!

"டேய் அய்யாவு! உன் அம்மா உனக்குப் பெரிசு! என் மவனுக்கு அவ.. அம்மாதான் பெரிசு! அதுக்காக அடிக்கலாமா!"

அத்தை கேட்டாள். உடனே நான், "இம்! இல்லே அத்தே! மாரிமுத்துதான்! உங்கம்மாவுக்கும் அம்மாவவிட எங்கம்மாதான் நல்லவங்கன்னு சொன்னு எனக்குக் கோபம் வராதா?" என்று விறைத்து நின்றேன்!

"ஏய்! பூங்காவனம்! நீ வாயயேய விட்டுடாதே! உன்னையும் எதையாச்சும் எடுத்து அடிச்சுடப் போருன்!" என்ருர் சுப்பையா.

எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

சரி! சரி! விடு! ரெண்டு பேரும் நல்ல பிள்ளைங்கதான்! அவங்க அவங்க அம்மா அவங்களுக்கு ஓசத்திதான்! நம்ப பையன் ஏன் அப்படி சொன்னுன்... இந்த நாயம் தீர்க்க முடியாததா இருக்கு! ஒரு பக்கம் சந்தோசம்! மறுபக்கம் கல்லால அடிச்சுட்டானேன்னு வருத்தம்தான் இருக்கு! என்ன பண்றது, குழந்தைங்க!"

சுப்பையா சமாதானம் பேசினுர்.

"அய்யாவு! எதுன்னுலும் எங்ககிட்டே சொல்லு! அடிச்சுக்கப்படாது! பாரு, மாரிமுத்து மண்டையை நீ உடைச்சதுல அவன் தலையில ரத்தம் வந்தது. அவனுக்கு எவ்வளவு வலிக்கும்! அப்படியெல்லாம் முரட்டுத்தனம் கூடாது! தெரியுதா!" என்று புத்தி சொன்னுள் என் அம்மா!

"ஆமா! உங்கம்மா சொன்னத கேட்டு நல்லபடியா நடந்துக்க! இல்லே உனக்குப் பொண்ணும் கொடுக்க மாட்டேன். மூக்க அறுத்து முச்சந்தியில் நிப்பாட்டிடுவேன்! தெரியுதா?" அத்தை பூங்காவனம் என் கைகளைப் பிடித்து எச்சரித்தாள்.

நானும் "சம்மதம்" என்று தலையாட்டினேன்!

"பார்த்தியா! தலைய ஆட்டுருன்! சீக்கிரம் புறப்படு! பொண்ண இப்பவே கட்டிக்குடுன்னு கேட்டுடப் போருன்" என்ருர் சுப்பையா! மறுபடியும் எல்லாரும் சிரித்துவிட்டனர்! ஏன் மாரிமுத்துவும சிரித்து விட்டான்! நானும் சிரித்து விட்டேன்.

ஒருவழியாக எல்லாரும் திரும்பினர். அவர்கள் போனதும் "அட ராசா! அம்மா மேல உனக்கு எவ்வளவு பிரியம்!" என்று என்னை இறுக அணைத்து முத்தம் கொடுத்தாள் அம்மா. அம்மாவுக்கு என்மேல் எவ்வளவு பிரியம்!



எப்பொழுதோ நடந்த சம்பவம் இது! எனக்கு வயசு ஏறத்தாழ ஒன்பது இருக்கும். அப்போது நடந்த இந்தச் சம்பவம் இப்போது என் நினைவுகளில் ஓடியது. அன்னையின் அன்பின் மதிப்பு நன்ருகத் தெரிந்தது. ஆனல் செந்தூலில் ஆற்ருேரம் அமைந்திருந்த கம்போங் சுங்கையில் தான் எங்கள் வீடு இருந்தது. செந்தூல் இரண்டாவது மைலில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. அதை ஒட்டி செந்தூல் பாசாருக்கு ஜாலான் செந்தூல் போய்க்கொண்டிருந்தது. அந்த வழியே சுமார் இரண்டு சங்கிலி தூரம் நடந்தால் ஒரு வளைவு. அங்கிருந்து வலதுபுறம் ஒரு குறுகிய வழி போகிறது. அது கள்ளுக் கடைக்கும் கள்ளுக்கடை கம்பத்துக்கும் போகிறது.

அந்த வழியே போகாமல் நேரே செல்லவேண்டும்.

இடதுபுறம் மூன்று மாடிக் கடைவீடுகள் இருக்கின்றன. வலதுபுறம் பண்டாராயா வீட்டு வரிசைகள் உள்ளன.

அந்த இடத்தில் வலதுபுறம் பண்டாராயா வீட்டு வரிசைகளுக்கிடையில் ஒரு செம்மண் சாலை போகிறது. ஒன்றரை சங்கிலி தூரம் போனல் ஒரு கொடிப்பாதை ஆற்ருேரம் இறங்கும். அதிலே இறங்கி நடந்தால் பத்தாவசாக இருக்கும் வீடுதான் எங்கள் வீடு.

முன்னல் இரண்டு தென்னை மரம். பின்னல் மூன்று தென்னை மரம். வீட்டு முன்புறம் பூச்செடிகள், ஒரு பலாமரம், ஒரு வேப்ப மரம், ஒரு நிழல் கொடுக்கும் மரவள்ளி மரம் ஆகியவை இருக்கின்றன. அவை யாவும் என் அம்மாவின் அடையாளங்கள்தாம். வீடு தரையிலிருந்து நான்கு அடிகள் உயர்த்திக் கட்டப்பட்டிருந்தது.

வீடு ஆற்ருேரம் இருப்பதால் பெய்யும் ஒவ்வொரு மேல் மழைக்கும் வெள்ளம் கரையை மீறி எங்கள் வீடெல்லாம் ஏறிவிடும்.

சில நேரம் வழியோடு திரும்பும், சில நேரம் வீட்டின் அடிவரை வரும். சில நேரம் வீட்டுப் பலகையைத் தொட்டுக் கொண்டிருக்கும். எப்பொழுதாவது ஆசை மிகுந்தால் பலகைக்கு மேலும் ஒரு மூன்று அங்குலம் வரை வெள்ளம் ஏறிவிடும். வெள்ளம் ஏறிவிட்டாலோ அதோடு பாம்போடு பலவும் ஏறிவிடும்.



தேசிய நில நிதிக் கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டு தீபாவளித் திருநாளை ஒட்டித் தனது பதினெட்டு தோட்டங்களின் மக்களுக்குப் பரிசளிப்புச் செய்தது.

தோட்டத்துப் பெண்மணிகளுக்குப் படடுப் புடவைகளும், ஆண்களுக்கு வேட்டி துண்டுகளும் வழங்கப்பட்டன. இப்பரிசுகளைக் கூட்டுறவுத் தந்தை மாண்புமிகு துன் வீ. தி. சம்பந்தன் வழங்கினுர்.

பரிசு வழங்கும் ஆரம்ப வைபவம் பிளாட்டா ரிவர் தோட்டத்தில் நடைபெற்றது. ஓய்வு பெற்றவர்களும், சீன, மலாய்ச் சகோதரர்களும்கூட துணிகள் பெற்றனர்.

பட விளக்கம்: கூட்டுறவுத் தந்தை சுங்கை சிப்புட் தோட்டத்தில் பட்டுப் புடவைகள் வழங்குகிருர்.

இப்போது ஏறிய வெள்ளமோ, அந்த அளவுகளையெல்லாம் கடந்துகொண்டிருந்ததால் பக்கவாத நோயால் பாதிப்புற்ற என் அம்மாவை நாற்காலியில் உட்கார வைத்து இரண்டு சட்டங்களை நாற்காலி கால்களுக்கிடையே சொருகி நால்வர் நெஞ்சளவு வெள்ளத்தில் தூக்கிக் கொண்டு வெளியே மேட்டுக்குக் கொண்டு வந்தோம். நேரே அம்மாவைத் தூக்கிக்கொண்டு நான் சார்ந்திருக்கும் இளைஞர் மன்றத்திற்குப் பின்னல் குடியிருந்த கவிஞர் நிறைமணி வீட்டுக்குக்கொண்டு வந்து விட்டோம்.

மழை, விடாமல் பெய்து கொண்டே இருந்ததால் வெள்ளமும் தன்பாட்டுக்கு ஏறிக் கொண்டே இருக்கவே எடுக்க முடிந்த பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டு நாங்களும் மேட்டுப் புறத்துக்கு வந்து சேர்ந்து விட்டோம்!

இரண்டு நாள் சென்று வீட்டைப் பார்த்தபோது நீர் மட்டம் மாடி வீட்டின் கூரை வரை ஏறியிருந்தது தெரிந்தது. வீட்டுச் சென்றிருந்த பொருட்களெல்லாம் சேறு மண்டிக் கிடந்தன. ஏன், கோலாலம்பூரே வெள்ளத்தில் தானே அந்த நாட்களில் ஆழ்ந்திருந்தது.

ஏறிய வெள்ளம் மூன்று நாட்களில் வற்றிவிட்டது. ஆனல் என்றுமே வற்ருத துயர வெள்ளத்தை எங்கள் உள்ளங்களில் ஏற்றிவிட்டு என் அன்னைத் தெய்வம் கண்களை மூடிக் கொண்டது.

(வளரும்)

வாணிஸ்ரீயின் 'வருங்காலக் கணவர்'

இன்று தமிழ்ப்பட உலகிலே உள்ள சிறந்த குணச்சித்திர நடிகைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

அவர்களில் வாணிஸ்ரீ குறிப்பிடத்தக்கவராவார். வாணிஸ்ரீயிடம் "புதிய சமுதாய"த்திற்காகப் பத்துக் கேள்விகளைக் கேட்டு வைத்திருந்தோம். அவற்றுக்குநறுக்குத்தெறித்தாற்போல அவர் அளித்த பதில்கள் வருமாறு:

கேள்வி: தெலுங்குப் படங்களில் "அவார்டு" வாங்கும் உங்களுக்குத்தமிழ்ப்படங்களில் ஏன் கிடைப்பதில்லை?

பதில்: அவார்டு என்பது கிடைக்கும் பாத்திரங்களைப் பொறுத்து இருக்கிறதே தவிர மொழியைப் பொறுத்தது அல்ல. தமிழ்ப் படத்திலும் சிறந்த நடிப்புக்காக சென்னை சினிமா ரசிகர்கள் சங்கம் இரண்டு முறை பரிசுகள் வழங்கியிருக்கிறது!

கே: உடம்பை அளவுடன் வைத்திருக்கிறீர்களே, எப்படி?

ப: சாப்பிடும் உணவு, உடற்பயிற்சி, பழக்க வழக்கங்கள் இதைத் தவிர வேறு எதுவும் இல்லை!

கே: நீங்கள் உயர்வாக மதிப்பது யாரை?

ப: பிறரது திறமையை மதித்துப் போற்றுகின்ற பண்பாளரை நான் மதிக்கிறேன்.

கே: வளர்ந்து வரும் புதுமுக நடிகைகளுக்கு நீங்கள் ...ும் யோசனை...?

ப: உடலைக் கட்டாக வைத்திருப்பதில் கவனம் செலுத்துங்கள்!

கே: உங்களுக்குப் பிடித்த ...ப்பு நடிகர் யார்?

ப: சினிமாவில் யார் ஜோக் அடித்தாலும் சிரித்துவிடுவேன். ஆனால் ஸ்டுடியோக்களில் ஜோக் அடித்து எல்லோரையும் சிரிக்க வைத்துவிடும் ஸ்ரீகாந்த்தான் எனக்குப் பிடித்த நடிகர்!

கே: உங்களுக்கு வரும் கணவர் எப்படி இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

ப: முருகன், கிருஷ்ணன் போல் இல்லாமல் ராமன் மாதிரி இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்!

கே: "புண்ணியபூமி" படத்தில் சிவாஜிகணேசனின் தாயாக நடிக்க எப்படிச் சம்மதித்தீர்கள்?

ப: எனக்கு மகனாக நடிக்க அவர் சம்மதித்திருக்கிறாரே, அதுதான் ஆச்சரியப்படவேண்டிய விஷயம்!

ப: நடிகைகள் திருமணத்திற்குப் பின்பும் நடித்தால் மண வாழ்க்கை சந்தோஷமாக இருக்குமா?

கே: இது அவரவர்களுக்கு வரும் கணவரைப் பொறுத்து இருக்கிறது.

கே: நடிகர்கள் வயதானாலும் நடிக்கமுடிகிறது! நடிகைகளால் அப்படி முடியவில்லையே?

ப: நடிகைகளுக்குத் திருமணமானால் குழந்தைகள் பிறந்துவிடுகின்றன. இதனால் வயது அதிகமாகாவிட்டாலும் வயதான தோற்றம் வந்துவிடுகிறது. இந்தத் தொல்லை நடிகர்களுக்கு இல்லையே!


கே: உங்கள் வாழ்க்கையிலேயே நிறைவேறாதது எது?

ப: எத்தனையோ இருக்கின்றன! அவற்றில் ஒன்றைமட்டும் கூறுகின்றேன். உலகத்தை எல்லாம் சுற்றிப் பார்க்க விரும்புகின்றேன்! ஆனால் படப்பிடிப்புகளுக்கே நேரம் போதாதபோது வெளிநாடுகளுக்குச் செல்ல எப்படி நேரம் கிடைக்கும்?



ஜக்கையாவின் கவனம் வாணிஸ்ரீயின் மீது இருக்கிறது. இந்தக் காட்சியைப் பார்க்கும் பெண்களின் கவனம் வாணிஸ்ரீ கட்டியிருக்கும் சேலையின் மீதுதான் பதியும்!

திரை: வாழ்க்கை அலைகள்



பட விமர்சனம்

பஞ்சு சாஸ்திரி, பதிபக்தி மிகுந்த அவர் மனைவி காமாட்சி, அழகும், அடக்கமும் மிகுந்த மகள் அம்புஜம்- இந்த மூன்று கதாபாத்திரங்களைப் பின்னணியாக அமைத்து அவர்கள் குடும்பத்தில் ஏற்படும் சிறுசிறு சம்பவங்கள், பூசல்கள் உணர்ச்சிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உயிரோட்டமான குடும்பக் கதையை "அதிர்ஷ்டம் அழைக்கிறது" எனத் தலைப்பிட்டு உருவாக்கி வெளியிட்டுள்ளார்கள் ஜே. எம். புரொடக்ஷன்சார்.

இந்து மதத்தைச் சேர்ந்த வாலிபன் கிறிஸ்துவப் பெண்ணை மணமுடிப்பதும், இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஒருவர் சாஸ்திரி மனைவியின் இறுதிச்சடங்கிற்கு உதவி புரிவதையும் இக்கதையோடு பொருத்தமாகவே இணைத்திருக்கிறார்கள். இந்து—கிறிஸ்துவம்-இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களையும் சமயம் பார்த்துக் கதாசிரியர் இப்படக்கதையோடு இணைத்திருப்பதும் அதே வேளையில் யார் மனதும் புண்படாதவாறு உரையாடல்களை அமைத்திருப்பதும் பாராட்டுக்குரியவை. அந்தப் பெருமையைக் கவிஞர் வாலி தட்டிக்கொண்டு போய்விடுகிறார். சைக்கிளின் ஒவ்வொரு பாகங்களையும் மனித வாழ்க்கைக்கு உதாரணம் காட்டி இருப்பதிலும் வசனகர்த்தாவின் பேனா நன்றாக வேலை செய்திருக்கிறது.

"கலியுகக்கண்ணன்" திரையில் இணைந்து வெற்றிகரமான நடிப்பை வழங்கிய தேங்காய் சீனிவாசனும் சௌகார் ஜானகியும்தான் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் வருகிறார்கள். இவர்களது நடிப்பு மனதை நெகிழ வைக்கிறது.

சாஸ்திரியின் மகள் அம்புஜமாக ஸ்ரீவித்யா வருகிறார். குறும்பு-காதல் - பெருந்தன்மை - தியாகம் ஆகிய உணர்ச்சிகளை ஸ்ரீவித்யா சுலபமாக வெளிப்படுத்தியிருக்கிறார். அதற்கு அவருடைய கண்களும் மிகவும் துணை புரிகின்றன.

வழக்கமான வில்லன், வழக்கமான நகைச்சுவை ஜோடி, டிஸ் டிஸ் குத்துக்கள் போன்ற அறுவை சங்கதிகள் இப்படத்தில் இல்லை. ஓரளவு சிரிக்க வைப்பதற்காக மகேந்திரன் வருகிறார். மாயா பலூன் காட்சி நல்ல வேடிக்கை.

முத்துராமன், விஜயகுமார், சுந்தரராஜன், ஜெயசுதா, பண்டரிபாய் போன்றவர்களும் நடித்திருக்கிறார்கள். காய்கறி வியாபாரி அப்துல் காதராக பாலாஜி வருகிறார். அவர் படத்தின் இறுதியில் "அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம்" என்பதை உணர்ச்சிகரமாக விளக்குகிறார்.

ஒரு காட்சியில் பின்னணிப் பாடகர் ஜேசுதாசும் பாடகி சுவர்ணாவும் தோன்றி ஒரு "ஹிட்" பாடலைப் பாடுகிறார்கள். வி. குமாரின் இசையமைப்பில் "என்ன தவம் செய்தேன்", "அர்த்தமுள்ள இந்து மதம் என்ன சொன்னது" போன்ற பாடல்கள் கவருகின்றன.

ஏ. ஜகந்நாதனின் டைரக்ஷனில் குடும்பத்துடன் கண்டு மகிழும் வண்ணம் அமைந்துள்ள இந்தப் புதுப்படத்தை, மிகவிரைவில் மலேசியாவில் முஹிபா பிலிம் டிஸ்ரிபியூட்டர்ஸ் திரையிடவிருக்கிறார்கள்.

"ராஸ்மன்"



ஆட்டுக் குட்டியைப் பிடிக்காமல்
பெரிய மீனை அல்லவா பிடித்து விட்டார் அலமேலு!
"ஆட்டுக்கார அலமேலு" படத்தில் ஸ்ரீப்பிரியா

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

29-1-78 சித்திரவதை எழுத்து: தலைநகர் என். எஸ். கிருஷ்ணன்.

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

28-1-78 புது உறவு (மலாக்கா) பி. எம். பாலகிருஷ்ணன் எழுதியது.

சிறுகதை

(ஞாயிறு தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

29-1-78 முடிவுகள் – எழுத்து: ராஜகுமாரன் இளங்கோ.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

28-1-78 கெடா–ராஜம் கண்ணி மலை எழுதிய செவிட்டு மச்சான்.

ரங்காயான் மேரா நிகழ்ச்சித் தொகுப்பு:

- ஞாயிறுதோறும்: காலை 9மணிக்கு இளைஞர் உலகம், காலை 9.30 மணிக்கு நேயர் விருப்பம், 10மணிக்குப் பூச்சரம் (இலக்கியத் தொகுப்பு) பிற்பகல் 12.45க்குக் கலைமன்றம், 2 மணிக்குக் கலப்படம்.

  இரவு 9.15க்கு விளையாட்டு அரங்கம்.
- திங்கள்தோறும்: காலை 7.13க்குக் காலைக் கதம்பம், மாலை 6.31க்கு நமது விருந்தனர், இரவு மணி 7.15க்கு நல்ல குடும்பம், இரவு 8.45க்கு அந்தி மலர்.
- வெள்ளிக்கிழமைதோறும்: இரவு மணி 10க்கு 'பழம் பாடல் நேயர் விருப்பம். (பழைய படங்களிலிருந்து நேயர்கள் விரும்பிக் கேட்கும் பாடல்களின் அரைமணிநேரத் தொகுப்பு)
- சனிக்கிழமைதோறும்: இரவு: மணி 8.10க்கு நெஞ்சின் அலைகள். (தயாரிப்பு: பார்த்திபன்)

மின்னோட்டம்

தொலைக்காட்சி

26-1-78 வியாழன் மாலை மணி 5.32க்கு

வாணி ராணி. வாணிஸ்ரீ இரு வேடங்களில் தோன்றி நடித்திருக்கும் இப்படத்தில் சிவாஜி கணேசன். முத்துராமன் போன்றவர்களும் நடித்துள்ளனர். இசை: கே.வி. மகாதேவன்.

29-1-78 ஞாயிறு மாலை மணி 4க்கு சீனப் படம்.



9-2-78 வியாழன் மாலை மணி 5.32க்கு வஞ்சிக்கோட்டை வாலிபன். ஜெமினி கணேசன், வைஜயந்திமாலா, பத்மினி, வீரப்பா போன்றவர்களின் சிறந்த நடிப்புடன் விறுவிறுப்பான பத்மினி–வைஜயந்தி நடனப் போட்டியும் இப்படத்தில் இடம்பெற்றுள்ளது.



தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கடைசி நேர மாற்றங்கள் செய்யப்படலாம்.

கண்ணோட்டம்

மலேசிய வானொலியில் ரங்காயான் மேரா ஒலி அலைகள் சரிவரக் கேட்பதில்லை; பல தடவை தடைப்பட்டுத்தொல்லைகளையே கொடுக்கிறது. சில நேரங்களில் பலவித ஓசைகள் வேறு கேட்கின்றன. நாங்கள் எதைத்தான் கேட்பது? தயவு செய்து இக்குறையினை ரங்காயான் மேரா பகுதித் தலைவர் கவனித்து உடனடி பரிகாரம் காண வேண்டுகிறேன். இது எங்கள் வானொலியில் கோளாறு என்று தலைவர் நினைக்கலாம், அது தவறு. ஏன் என்றால் எங்கள் பகுதியில் மற்ற நண்பர்களின் வானொலியும் இதேபோல்தான் செய்கிறது.

–எம். ராஜ்குமார்

சிம்பாங் பெக்கோ, மலாக்கா

சென்ற வாரம் சனிக்கிழமை (7-1-78) பிற்பகல் 1.15க்கு வானொலியில் மத்திம அலையில் ரங்காயன் மேரா நிகழ்ச்சிகளைக் கேட்பதற்காக மீட்டரைத் திருப்பியபோது சீன மொழியில் சில நிமிடங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டுத் திடுக்கிட்டேன். பிறகு திடீரெனத் தமிழ் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இப்படித் தூங்கி வழியும் சில நிகழ்ச்சி மாற்றப் பொறுப்பாளர்கள் கொஞ்சம் விழித்தெழுந்தால் நல்லது!

–ஆர். மனோகரி,

தலைநகர்.

தாயாக வாழ்கிறள்

ச. சுந்தராம்பாள்

மூடியிருந்த கண்களை லேசாகத் திறக்கின்றேன். இதுவரை அணையிட்டிருந்த கண்ணீர், மடைதிறந்தாற்போல் பொலபொலவெனக் கொட்டியது. இறைவா!" என் இதயத்தின் வேதனைகள் அனைத்தும் நான் தினமும் மனமுருகி வணங்கும் முருகனின் திருநாமத்தோடு வெடித்துச் சிதறியதோ! என் நெஞ்சின் மீது கைகளை வைத்து அழுத்திப் பிடித்துக்கொள்கின்றேன்.

கல்யாணம்! கல்யாணம்! கல்யாணம்! ஐயோ! என் தலையே வெடித்து விடும் போல் இருக்கிறதே! யார் வாயைத் திறந்தாலும் இதே பல்லவிதானு! அதை நானு வேண்டாமென்கிறேன்.

ஆனுல்...நான் வேண்டாம் வேண்டுமென்று சொன்ன காலமும் உண்டு. அதை ஏன் அப்போது சொன்னேன்? அதை இந்த மல்லிகாவும் பாலுவும் மறந்துவிட்டார்களா? மறந்துதான் விட்டார்கள். ஏனென்ருல் இப்போது பள்ளி படிப்பெல்லாம் முடிந்து ஆளுக்கொரு வேலையும் தேடிக் கொண்டதோடு ஆளுக்கொரு துணையையும் தேடிக்கொண்டு கல்யாணத்திற்குத் தயாராகி நிற்கிருர்கள் அல்லவா! வரப்போகும் வாழ்க்கையை அனுபவிக்கத்துடிப்பவர்களுக்கு கடந்து போன வாழ்க்கையை நினைத்துப்பார்க்க நேரம் இல்லை போலும்.

மல்லிகாவும் பாலுவும் என்னைப் பார்க்கும் பார்வை... அப்பப்பா! பார்வையா அது? "இந்த சனியனுலே நாம காத்து கிட்டு இல்ல இருக்க வேண்டி இருக்கு" - இதையல்லவா ஒவ்வொரு பார்வையாலும் அம்பு கொண்டு என் இதயத்தைத் தாக்குகிருர்கள் ஆனுல் நான் மட்டும் என் உரிய வயதிலேயே கல்யாணம் பண்ணி புருஷன் வீடு போயிருந்தால்... இவர்களுக்கு இந்த உத்தியோக வாழ்க்கை கிடைத்திருக்குமா? அல்லது இந்தப் பெண்ணும் மாப்பிள்ளையும்தான் கிடைத்திருப்பார்களா? இல்லை நான் தான் எவனுவது வந்து என்னைப் பெண் கேட்க மாட்டானு... எனக்கும் கல்யாணமுன்னு ஒன்னு நடக்காதா என்று தவித்து நிற்கும் நிலைதான் வந்திருக்குமா? இந்நிலை ஏன் வந்தது?

அப்பா...ஆம் அப்பாவால் தானே. அவர் மட்டும் பொறுப்புடன் குடும்பத்தைக் கவனித்திருந்தால்...குடும்பம்! அது தனக்கு இருக்கிறதா என்று கூட அன்று நினைத்துப் பார்க்க நேரம் கிடைத்திருக்குமா. அவருக்கு? குடியும் சூதாட்டமும் தானே அவரது குடும்பங்கள்! இந்த "குடும்ப" வாழ்க்கையில் சிரமியும் கணவனின் நிலை காண சகியாமல்தான் அம்மா உயிர் அப்போதே போய்விட்டதோ!

அன்று அம்மா சொன்ன அந்தக் கடைசி வார்த்தைகள்... "சித்தா, இனி நான் பிழைக்க மாட்டேம்மா. நான் சாகறதப் பத்தி கவலைப்படலே. மூணு பிள்ளைகளையும் பொறுப்பில்லாத மனுசங்கிட்ட விட்டுட்டுப் போறேனேன்னுதான் கலங்கிப் போறேன். அந்தப் பாழாப் போன குடியிலேயும் சூதாட்டத்திலேயும் அழிகிற அவரு நிச்சயமா உங்களயெல்லாம் பொறுப்பா கவனிச்சுக்குவாருனற நம்பிக்கை எனக்கு இல்ல அதனுல நீதான் உன் தம்பியையும் தங்கச்சியையும் கவனமா பார்த்துக்கணும். அதுங்களுக்கு ஒரு நல்ல வழியை காட்டிட்டு பிறகு உன் விருப்பம் போல் உன் வாழ்க்கையை அமைச்சுக்கோ..."

அப்போ எனக்கு பன்னெண்டு வயசுன்னுலும் அம்மா சொன்னதை என் லட்சியமா எடுத்துக்கிட்டு என் மனசிலே புதைச்சி வைத்துக்கொண்டேன்.

அப்பா காலையிலே நல்லா தான் எழுந்து வேலைக்குப் போவார். ஆனு திரும்பும் போது தன்னை மறந்த நிலையில்தான் வருவார். மூணு பிள்ளைங்க இருக்காங்களே... அவங்க சாப்பிட்டாங்களா, தூங்கினுங்களா, பள்ளிக்குப் போனுங்களா என்கிற கவலையெல்லாம் மறந்த நிலையில் வீடு திரும்பும் போது தாயில்லா குழந்தைகளாக விபரம் அறியா பருவத்திலிருந்த மல்லிகாவும் பாலுவும் அப்பாவின் அரவணைப்பை அறிவார்களா?

நான அல்லவா தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவர்களை அரவணைத்துக் காத்தேன்.

என் படிப்பை விட்டேன். நாங்க இருந்த கம்பத்தில் பணக்கார சீனர் ஒருவர் வீட்டில் வேலைக்காரியாக நுழைந்தேன். மல்லிகாவையும் பாலுவையும் என் கண்களாகப் பாவித்து தாயில்லாக் குறை தெரியாமல் வளர்த்தேன். அவர்களைப் பள்ளியில் பதிவு செய்து படிக்க அனுப்பியவளும் நான்தான். அப்பப்பா...! அந்த சின்ன வயசில் அவர்களுக்காக நான் எவ்வளவு கஷ்டங்களையும் தொல்லைகளையும் அனுபவித்தேன்.

எனக்கு கல்யாண வயசும் வந்தது. பருவத் தோட்டத்தில் நுகரா மலராக மணம் வீசிக்கொண்டிருந்த எனக்கு எத்தனையோ வரன்கள் வந்தன. அந்த பருவகால நினைவுகள் என் நினைவில் மோதி அவ்வப்போது என்னை சபலத்துக்குள்ளாக்கியதும் உண்டு. அம்மாவின் அந்தக் கடைசி ஆசை...!

என்னை நிதானப்படுத்திக் கொண்டேன். வந்த வரன்களை உதறித் தள்ளினேன். என் லட்சியத்தை மேலும் உறுதிப் படுத்திக்கொண்டேன். ஒருமுறை, "பாலுவுக்கு பரீட்சைக்கு பணம் கட்டவேண்டும். இருக்கும் பணம் அதற்குப் போதாது. கொஞ்சம் பணம் கொடுங்கள்" என்று அப்பாவிடம்கேட்டேன். வெத்து நாளில் கேட்கவில்லை; அவர் சம்பளத்தன்று பார்த்துக்கேட்டேன். தலையாட்டி விட்டுப் போனுர். திரும்பும் போது நாலைந்து பேர்கள் தூக்கிக்கொண்டு வந்து போட்டார்கள். பணம்? குடித்தது போக



திருமதி ச. சுந்தராம்பாள்

மீதி சூதாட்டத்தில் போய் விட்டது. என் எஜமானிடம் கடன் வாங்கிப் பரிட்சைக்குப் பணம் கட்டினேன்.

என் கனவு நனவாகியது. இருவரும் பரிட்சையில் தேறி, நல்ல வேலையிலும் அமர்ந்து விட்டனர். அமர்ந்த இடங்களிலே தங்கள் தங்கள் வாழ்க்கைத் துணைகளையும் தேடிக் கொண்டனர்.

இந்நிலையில் ஒரு திருப்பம். அப்பா குடிப்பதை நிறுத்தி விட்டார். பிள்ளைகளுக்காக இல்லை. ஒரு நாள் நெஞ்சு வலியால் துடிதுடிக்கப்படி டாக்டரிடம் போனபோது "தான் தொடர்ந்து குடித்துக் கொண்டிருந்தால் தன்னுயிரை எமன் விரைவில் குடித்துவிடுவான்" என்ற டாக்டரின் வார்த்தைகளில் உள்ளம் நடுங்கி தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர் குடிப்பதில்லை.

தன் நிலை தெளிந்து நிதானமாக நிற்க முடிந்தபோது தான் அப்பாவுக்கு என் கல்யாணம் பற்றி ஞாபகம் வந்தது! ஞாபகம் வந்த போது என் கல்யாண வயதும் தாண்டி இருந்தது. பலரிடம் சொல்லி வைத்தார். தானும் அதற்காக அலைந்து கொண்டிருந்தார். வரன்களும் வந்தன. வயதைக் கேட்டு திரும்ப வராமல் போனவர்கள்தான் அதிகம்.

இருபது வயது பெண்ணை வைத்துக் கொண்டு மாப்பிள்ளைக்காக அலைந்து கொண்டிருக்கும் பலரின் மத்தியில் முப்பத்தைந்து வயதான எனக்கு சுலபத்தில் மாப்பிள்ளை கிடைத்து விடுவானா என்ன? அப்படிக் கிடைத்தாலும் இரண்டாந் தாரமோ மூனாந் தாரமோ... அல்லது குறையுள்ள ஒருவனுக்கு என் பலவீனம் சாதகமாக அமைய வேண்டும். எது வந்தாலும் ஏற்றுக்கொள்ள என்னை நான் தயார்படுத்திக் கொண்டேன்.

ஆனால் இந்நிலை எனக்கு வர யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் என் உள்ளத்தைக் குத்திக் கிளறுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே. தாங்கள் வாழ்ந்ததை, வளர்ந்ததை உத்தியோகமும் சொகுசான வாழ்க்கையும் வந்தவுடன் மறந்துவிட்டார்களே. இதுவரை மைல் கல்லாக இருந்த நான் இப்போது தடைக்கல்லாக மாறிவிட்டேனோ?

என் கடந்த கால வாழ்க்கையின் கட்டங்களை என் மனமேடையில் திரையிட்டுப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு நேற்று மாலை நடந்த அந்த நிகழ்ச்சி...! திரையிட முடியாது தகித்துப் போகிறேன்.

"டார்லிங்...! இப்போ "டிரிங்ஸ்" கொண்டு வந்தாளே அவ யாரு? வேலைக்காரியா?"

"அப்படித்தான்னு வைச்சிக்கியேன்".

"அப்படித்தான்னு...?"

"அவ தான் என் அக்கா, கழுதை வயசாச்சு. இன்னும் வீட்டிலேயே உட்கார்ந்திருக்கு. அவளால் தான் டார்லிங் நமக்கு இன்னும் கல்யாணம் நடக்காம இருக்கு."

"ஓ. அதான் இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும் போகட்டுன்னு தள்ளி போட்டுக்கிட்டு வர்ரீங்களா, ஏன் அவ இருந்தா இருக்கட்டுமே. நாம பண்ணிக்க வேண்டியதுதானே".

"நான் அப்படித்தான் அப்பாகிட்டே எத்தனையோ முறை சொல்லிப் பார்த்துட்டேன். அவரு ஒரேயடியா முடியாதுன்னு கண்டிப்பா சொல்லிட்டாரு. இது தொலையிற வரைக்கும் நம்ம உறவு பேச்சோடு மட்டும்தான் டார்லிங்".

முதன் முதலாக தன் காதலியை வீட்டிற்கு அழைத்து பாலு அவன் அறையில் பேசிக் கொண்டிருந்தது என் காதுகளில் நன்றாகவே விழுந்தது. ஆயிரம் ஊசிகள் கொண்டு என் இதயத்தைக் குத்தி ரணமாக்கின அவன் வார்த்தைகள்.

இளமை இன்பங்களை அனுபவிக்கத் துடிக்கிறான் பாலு. ஆனால் என் இளமைக் கால உணர்வுகளை அடக்கிக்கொண்டு அவனை என் இலட்சிய மகனாக வளர்த்து ஆளாக்கினேனே! நானும் அதற்கு அடிமையாகி இருந்தால், இன்று இவன் நிலைமை என்ன? அந்தச் சொகுசுகாரிதான் கிடைத்திருப்பாளா?

அமெரிக்கக் கோடீஸ்வரர் கார்னீகி, பெண்கள் கல்லூரி ஒன்றில் சொற்பொழிவாற்றச் சென்றிருந்தார். தன்முன்னே அமர்ந்திருந்த பெண்களைக் கவனித்தார். அத்தனைப் பேரும் இளம் பெண்கள்; அழகுத் தோற்றமுடன் அவர்கள் காட்சி அளித்தார்கள்.

அவர்களைப் பார்த்துக் கார்னீகி, "நீங்கள் எல்லோரும் மணப்பெண்களைப் போல் தோற்றம் அளிக்கிறீர்கள் உங்களில் யாரேனும் திருமணம் செய்து கொள்ள விரும்புவீர்களாயின் எனக்கு அறிவியுங்கள். அதற்கான உதவியை நான் செய்கிறேன்" எனத் தெரிவித்தார்.

அவர் இவ்வாறு கூறியது தான் தாமதம். அடுத்த நாள் கல்லூரிப் பெண்களிடமிருந்து கட்டுக்கட்டாகக் கடிதங்கள் வரத் தொடங்கின. அவற்றில் ஒவ்வொரு பெண்ணும் தான் காதல் கொண்டுள்ள இளைஞன் பெயரைத் தெரிவித்து, அதற்கு உதவியைக் கோரியிருந்தனர்.

கார்னீகி ஒவ்வொருவருக்கும் திருமண அன்பளிப்பு உதவியாக 500 டாலருக்கான காசோலையை அனுப்பி வைத்தார். மணமான பெண் ஒருத்தி தனக்குத் திருமணம் ஆகிவிட்டதாயும் கார்னீகியின் உதவி கிடைக்குமெனத் தெரிந்திருந்தால் தனது மணத்தைக் காலம் தள்ளி வைத்திருக்கக் கூடும் என்றும் தெரிவித்து இருந்தாள்.

கார்னீகி அவளை ஏமாற்றத்துக்குட் படுத்தவில்லை. அவளுக்கும் 500 டாலருக்கு ஒரு காசோலை அனுப்பி வைத்தார்.

—ந. பாலகிருஷ்ணன்
சுங்கை சோ தோட்டம்,
சிலாங்கூர்.





பாலு மட்டுமா...? இந்த மல்லிகாவும் அப்படித்தானே நடந்து கொள்கிறாள். நான் இருப்பதைக்கூட பொருட்படுத்தாமல் தன் காதலனின் படத்தை வைத்துக்கொண்டு பார்ப்பதும் பெருமூச்சி விடுவதும் சொல்லாமல் சொல்கிறாளே!

நான் தடையாகவா நிற்கிறேன் தாராளமாக அவர்களின் திருமணத்தை முடித்து வைக்கவும் தயாராக இருக்கிறேன். ஆனால் அப்பாதான் ஒரேயடியாக மறுத்துவிட்டார். காலங்கடந்து வந்த அக்கறை!

நான் இன்னும் என்ன தான் செய்வேன். அந்த முருகனிடம் நான் தினமும் வரங்கேட்டு நிற்கிறேன்.

என் கடந்த காலத்தை என் மனத்திரையில் பார்த்ததாலோ என்னவோ தெரியவில்லை. மனம் சற்று அமைதி கொள்கிறதே! இதுவரை மனமும் உடலும் கனக்கப் படுத்திருந்த நான், எழுந்து ஹாலுக்கு வருவதற்கு எத்தனித்தபோது சிறிது காலமாக என்னை எதிரியைப் போல் பாவித்து நடந்து கொள்ளும் மல்லிகா இன்று ஏனோ ஆசையோடு என்னிடம் வந்து "அக்கா, உன்னை பெண் கேட்டு வந்திருக்காங்க..." என்றாள். அவளுடைய வார்த்தைகளில் தொனித்த ஆர்வம் என்னை விரைவாகத் தலை முழுகிவிட வேண்டும் என்பதுபோல் பட்டது.

நான் மௌனமாக இந்தச் சம்பந்தமாவது நிலைக்கட்டும் என்று பரார்த்திக் கொண்டு தேநீர்த் தட்டை ஏந்தியவாறு ஹாலுக்குச் செல்கிறேன்.

தேநீர்க் கோப்பையை எடுத்து ஆளுக்கொன்றாக வழங்கிய போது என் கண்கள் மெதுவாக அமர்ந்திருப்பவர்களை ஏறெடுத்தன.

நெஞ்சில் ஒரே அதிர்வு!

இவரா மாப்பிள்ளை...?

திறந்த வாயிலிருந்து எழும் "ஜொல்லை"ச் சட்டை செய்யாமல் கோணலான பார்வையை எங்கோ நிலை நிறுத்த முயற்சி செய்து கொண்டிருக்கும் அவரைப் பார்த்ததும் இதயம் காற்றிழந்த பலூனாகச் சுருங்கிக் கொள்கிறது.

நான் சட்டென்று உள்ளே சென்று விடுகிறேன்.

வந்தவர்கள் விடைபெற்றுச் சென்றவுடன் மீண்டும் நான் ஹாலுக்கு வருகிறேன்.

தம்பி பாலு என் முகத்தைப் பார்க்கிறான். "மாப்பிள்ளை வீட்டார் நல்ல மனுசங்க போலயிருக்கு" என்ற அவனுடைய குரல் என் காதுகளில் விழுமுன்னே நான் அவனுடைய முகத்திலிருந்த பார்வையை அகற்றிக் கொள்கிறேன்.

தங்கை மல்லிகா, "அவங்க என்னப்பா சொல்லிட்டுப் போனாங்க...?" என்று அப்பாவை ஊடுவுகிறாள்.

"அவங்களுக்குப் பூரண சம்மதமாம்..." என்று கூறிய அப்பா சற்று நிறுத்தித் தொண்டையைச் செருமிக் கொள்கிறார்.

"அவங்க மட்டும் சம்மதிச்சிட்டா ஆயிடுமா தீக்கா சுக்கு மாதிரி மாப்பிள்ளையை வச்சிக்கிட்டுப் பொண்ணுபார்க்க வந்துட்டாங்க" என்று கூறியவர், "பாலு...பேனாவை எடுத்துகிட்டு வா. பொண்ணு கொடுக்க முடியாதுன்னு ஒரே வரியில எழுதி நாளைக்கே அனுப்பிடுவோம். என் பொண்ணுக்கென்ன மாப்பிள்ளையா கிடைக்காமப் போயிடுவான்" என்றார்.

அவரது வார்த்தைகள் தம்பிக்கும் தங்கைக்கும் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்க வேண்டும். நான் குனிந்திருந்த தலையை நிமிர்த்தி அவர்களிருவரின் முகங்களையும் நிதானமாகப் பார்த்துவிட்டு அப்பாவைப் பார்க்கிறேன்.

"அப்பா!" என் குரல் கரகரக்கிறது.

அப்பா தலைதிருப்பி என்னை பார்க்கிறார்.

"நான் அந்த மாப்பிள்ளையை கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்று கூறிவிட்டு பாலுவையும் மல்லிகாவையும் தீர்க்கமாகப் பார்க்கிறேன். அவர்களின் தலைகள் தாமாகவே வளைந்துகொள்கின்றன. ஒரு பெண் ஆணோடு மனைவியாக மட்டும்தான் வாழ முடியுமா?

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.

2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.


8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.

9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.

10. இறுதிநாள் 10-2-1978.

11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-
"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
Kuala Lumpur.
P. O. Box. 2066

தமிழறிவுப் போட்டி ~ 11



இறுதி நாள் 10.2.1978

பெயர். ______________________

அடையாள அட்டை எண். ______________________

முகவரி ______________________

____

____
கையொப்பம்.


இடமிருந்து வலம்:-

1. காக்கும் கடவுளின் நிறம் கொண்ட ஐம்பூதங்களில் ஒன்று.
2. இந்தப் பிராணியின் பெயருக்குள் மற்றொரு பிராணி ஒளிந்துள்ளது.
3. முதுமை ஏற ஏற இது குறையும்.
5. மற்றொன்றின் துணையின்றி இதனால் வாழ முடியாது.
6. இது இல்லாத மனிதனும் உண்டோ?
7. மூவேந்தர்களில் ஒருவர்.

மேலிருந்து கீழ்:-

1. ஒரு மரம்.
2. இவரையும் கடவுளாக நினைத்து வழிபடுவோர் உண்டு.
4. இருபதாம் நூற்றுண்டின் அராஜகர்கள் கைவசம் இருக்கும் ஆயுதம்.
5. பெரும்பாலும் இரவில்தான் இது வெளியே வரும்.

போட்டி 10



முடிவு

தமிழறிவுப் போட்டி 10க்கு 5,225 கூப்பன்கள் வந்தன. அவற்றுள் ஒரே ஒரு கூப்பன் மட்டுமே சரியான விடையைக் கொண்டிருந்தது.

சரியான விடையை எழுதிப் பரிசுத் தொகை $100ஐப் பெறுபவர்:

ஜி. மகாலிங்கம்,
23, ஜாலான் பெசார்,
பத்துகாஜா, பேராக்.

இவர் இப்போட்டியில் இரண்டாம் முறையாகப் பரிசு பெறுகிறார். ஏற்கனவே தமிழறிவுப் போட்டி 7இல் பரிசு பெற்ற நால்வரில் இவரும் ஒருவர்.

பத்துமலை காவடிச்சிந்து

சங்கு சண்முகம்

காடுமலை மேடுகடல் அதிர—நின்று
கானமயில் ஆடமழை போலிறகு சிதற

நீடுமலை கோடிசனங் கூடி—பக்தி
பாடுமலை பார்வதியின் சின்னமகன் தேடி

ஆடுமலை பத்துமலை வேல்வேல்!—எங்கள்
ஆறுமுகன் தங்கரதம் நாடுமலை வேல்வேல்!

சூடுமலர் சோரமணி குலுங்க—கோடி
சேயிழையர் காவடிகள் ஆடவினை ஒடுங்க

பாடுகின்றோர் பாடல்வானை இடிக்கும்—எங்கள்
பத்துமலை என்றதுமே பக்தர்மனந் துடிக்கும்

தேடுகின்றோர் தேடிவரும் வாசல்!—எட்டுத்
திக்கிருந்தும் பக்தர்வந்து கூடுகின்ற வாசல்!

ஆடுகின்றோர் ஆடிவரும்வாசல்—ஆசை
அத்தனையும் வென்றமகன் பற்றறுக்கும்வாசல்

ஓடுகின்றோர் ஓடிவரும் வாசல்! — ஓம்ஓம்
ஓங்கார ஓசையிலே ஒன்றிவிடும் வாசல்!

கூடுகின்றோர் கூடிவரும் வாசல்!—நெஞ்சில்
கூட்டலுங் கழித்தலையும் கூட்டுகின்றவாசல்

வாடுகின்றோர் வாடிவரும் வாசல்!—இங்கு
வந்தவுடன் கந்தனருள் முந்திநிற்கும்வாசல்!

கார்மோத கல்மலையும் தேயும்—பக்தர்
கால்மோதிக் கண்ணாடி யாகபடி மாறும்!
தேர்மோதத் தேனடைதேன் சொரியும்—பாயும்
தேன்சிட்டு மோதமணி தாளோசை புரியும்!
சீர்மேவும் பத்துமலை வாவி—தன்னில்
சேல்மோதும் மயில்கூவும் மரக்கிளையில்
தாவி!
கூர்மோத வேலவன்கை வேலே—ஒரு
கோடான கோடிபகை போகுமந்த நாளே!
தோண்டடினல் பீறியெழும் ஊற்று—உன்
சேவடியைப் பற்றியபின் போயொழியும்
கூற்று
தாண்டி வினையாண்டசிவ ஞண்டி—அப்பன்
தான்பெற்ற ஆண்டிஅப்போ
கல்லுமலையாண்டி!
வேண்டிவரும் ஆண்டிமலை ஆண்டி—மரத்
தாண்டிமலை யாண்டி சந்நியாசிமலை யாண்டி
தூண்டிஎன உன்னிடக்கை வேலால்—என்னை
தொட்டணைத்து வாழ்த்துதியோ
உன்தண்டைக் காலால்!

என்னுளும் ஏறுமயில் ஏறும்—உன்னை
எண்ணாத பேர்களது ஏழ்பிறவி நாறும்!

பொன்வேண்டேன் பெண்வேண்டேன்
வேண்டேன்—கோடி
பொருள் வேண்டேன் புகழ்வேண்டேன்
மண்வேண்டேன் வேண்டேன்!

கண்வேண்டேன் கையிரண்டும் வேண்டேன்—இரு
கால்வேண்டேன் பூவுலகில் எச்சுகமும்
வேண்டேன்!

உன்பேரில் நானுருக வேண்டி—இந்த
உயிர்வேண்டேன் உன்னையன்றி வேறுதுணை
வேண்டேன்!
மாமலை இறங்குமன மிலையோ — இந்த
மகன்ஓலம் அழுகுரல்கள் காதில்விழ
வில்லையோ!


கோவணந் தரித்தகந்த வேளே — எங்கள்
கூக்குரலும் தீக்கனலும் மலைமீறவில்லையோ
நொடிநூறு மைல்பாயும் மயிலே—இன்று
நீபறந்து வாராத தேனென்ன ஓயிலே!

நொடிகோடி அடிபாயும் அரவே—போய்
நீதூது சொல்எங்கள் கந்தனுக்குமறவேள்!

ஆண்டிமகன் ஆண்டியவன் ஆண்டி—பெரும்
ஆறுமலை சோலைமலை பாலைகளைத் தாண்டி

வேண்டிவந்தேன் ஆண்டிமகன் ஆண்டி—நெஞ்சம்
வேல்தலைபோல் நின்றுருகி உன்னருளைத்
தூண்டி
ஆண்டிஆண்டி ஆண்டிஎன்று ஆட—நெஞ்சம்
ஆவேசமாகஉடல் அக்கினியும் கூட

ஆண்டிமகன் ஆண்டியிவன் ஆண்டி—அந்த
பாண்டிமலை ஆண்டிதண்ணி
பத்துமலை ஆண்டி!
தண்டபாணி கோயுலுறை கொணட—ஜோகூர்
சைவமணி மங்கையம்மை தந்தகனிஉண்ட
தண்டைமணி கொஞ்சவரும் பாலா—செந்தூல்
தானிருந்து பக்தர்களைக் காத்துவரும்வேலா
செங்கலசக் கொங்கைமட வள்ளி—தங்கத்
தெய்வானை கண்ணிரண்டும் பூத்திருக்கும்
அல்லி!
திங்களொரு முறைமலரும் நிலவு—மங்கை
தெய்வானை கண்ணிருந்து நீசிறிதுவிலகு!
எங்களிரு தோள்களின்மேல் ஏறு—துன்பம்
இருநூறு கூறுக்கி தீக்குழியில் சேரு!




குன்றமெலாம் வீடான போதும் தன்னைக்
கொண்டாடு வார்!உள்ளக் குன்றம் மேவும்
பண்டார மாய்வந்த பழனி யப்பன்
பரவிவரு வார்க்குதவும் இனிய வெற்பன்
உண்டான குறையனைத்தும் தீர்த்து வைக்கும்
ஒப்பில்லா அருட்பரவை யான வையன்
கண்டாக இனிக்கின்ற காட்சி நல்கக்
கருதிவந்த மலைபத்து மலைய தாமே!

கடலுக்குக் கரைகண்ட மாந்தர்; கொண்ட
கருணைக்குக் கரைகாண முடியா வண்ணம்
உடலுக்கும் உயிருக்கும். பக்தி மிக்க
உளத்துக்கும் பெருங்காவ லாகி.வாழ்க்கைத்
தொடருக்குத் துணையாகி, வந்து சேரும்
துன்பத்தில் மருந்தாகிச், சூரை வெல்லும்
அடலுக்குப் பெயர்போன அகில வைப்பை
அனுப்பொழுதும் மறவாரை மறவான் வேலே!

பொன்னார்ந்த திருமேனி பவளச் செவ்வாய்
பொலிவார்ந்த தடந்தோளும், வேலும் கொண்டு
மின்னார்ந்த விடைமடவார் மருங்கு சூழ
வியனார்ந்த கலாபத்தின் மீதி லேறிக்
கண்ணார்ந்த காட்சிதரும் கனக நெஞ்சக்
கருணாக ரக்குழவி கனிந்து நோக்கும்
பண்ணார்ந்த பத்துமலை அண்டர் கோனைப்
பரவிடுவார் பருகிடுவார். இன்பத் தேனே

பொய்ப்பூசை பலசெய்து தனைத்தான் ஏய்க்கும்
புன்குணத்துக் கண்மனத்தோர் வதியும் மன்றில்
மெய்ப்பூசை பலசெய்து நெகிழ நெஞ்சம்
மென்மலரால் அர்ச்சிப்போர் தம்மைக் காக்கும்
மைப்பூசும் வாட்தடங்கண் மதன வல்லி
மானுக்குத் துணையாகும் பெருமா னான
தைப்பூசத் திருநாளின் தலைவன் இன்பத்
தாள்பணியத் தாள்பணியும் உலக மாமே!



தாள் பணியும் உலகம்

இரா. பாண்டியன்



தமிழ்ப் போதனை முறை

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், தமிழ் எழுத்துக்களையும் கற்றுத் தருவதற்கு ஆங்கிலக்கல்விமான்கள் தம் தாய் மொழிப் போதனை முறையையும், தம் மதி நுட்பத்தையும் பயன்படுத்தி இன்று தமிழ் மொழியைமெல்ல மெல்லச் சாகடிக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கோடு நடைமுறையில் தமிழ் போதிக்கப் படும் நடைமுறையை அமுலாக்கினர். அம்முறையினை "பழையன கழிதலும். புதியன புகுதலும்" என்ற முது வாக்கைத் தவறாகப்பயன்படுத்திக்கொண்ட நம்மின அறிவறிந்தோர் பலரும் பல கல்வி அதிகாரிகளும் எதிர்ப்போ, திருத்தமோ தராமல் அட்டியின்றி அப்படியே ஏற்றுக்கொண்டனர். இன்று வரை அம்முறை நடைமுறையிலும் இருந்து வருகின்றது. இத்தகு பரிதாப நிலை, நம்மின அறிவறிந்தோர் பலரினதும் பல கல்வி அதிகாரிகளினதும், தாய் மொழிப் பற்றின்மையையே காட்டி நிற்கின்றது. அத்துடன் அன்னவர் தமிழ் எழுத்து, தமிழ் மொழியின் வளர்ச்சி என்பனவற்றுக்குப் போட்ட முட்டுக்கட்டை

இன்றைய ஆசிரியர்களில் பெரும்பாலோர் ஓரிரு போதனை முறைகளைத் தழுவியே தமிழ் எழுத்துக்களைக் கற்பித்து வருகின்றனர். இதனால் மாணவர்களின் எழுத்தறிவு பெரும்பாலும் நிறைவுற்று நிற்கவில்லை. "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற தத்துவத்தைப் பெரும்பாலும் நினைவிற் கொள்ளாது அநேக ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் எனப் பெற்றோர்களில் பலர் சாடி நிற்பதைக் காண முடிகிறது. இதற்கு ஆசிரியர்களைச் சொல்விக் குற்றமில்லை.


இத்தியாதி மூலகாரணங்கள் மலிந்து கிடக்கையில் இன்று பணிபுரிபவர் பலர் மேல் உச்சரிப்புப் பிழை, எழுத்துப் பிழை குறித்துக் குற்றமோ பழியோ சுமத்துவது கடவுளுக்கே அடுக்காத கீழ்த்தரச் செயல் என்று கூறுவது பொறுத்தமல்லவா?

இந்நிலையை முழுமையாக அறிந்துணர்ந்துங்கூட இன்று வரை எவரும் முன்வந்து எம் முயற்சியையுங் கொள்ளவில்லை என்பதை நினைத்து வேதனை படாமலிருக்க முடியவில்லை மேலும் இம்முயற்சியில் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கையும் என் போன்றோர்க்கில்லை.

எனவே, இந்நிலையைத் திருத்தியமைக்க ம. இ. கா., மணிமன்றம், ம. தி. க. கல்விக் குழுக்களும், மற்றும் தமிழ்க் கல்வி சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் முன்வந்து செயல்பட வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொன். சோமசுந்தரம்,
தமிழாசிரியர்.

வாசகர் வட்டம்



வாசகர் வட்டம்? என்னும் புதிய பகுதி துவங்க இருக்கின்றது.

நமது நாடு - சமூகம் - அரசியல் - பொருளாதாரம் - மொழி - கலை - இலக்கியம் முதலியவற்றில் தாங்கள் காணும் குறை நிறைகளை வாசகர்கள் இப்பகுதியில் மனந்திறந்து எழுதலாம். குறைகளைத் தீர்ப்பதற்குரிய ஆலோசனைகளையும் எழுதலாம். தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்படும் பிரச்சினைகளையும் எழுதலாம்.

தனிப்பட்ட முறையில் எவரையும் தாக்காமல் வாசகர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறவேண்டும். அத்துடன் எழுதப்படும் கருத்துக்கள் சுவையாகவும் நறுக்குத் தெறித்தாற்போலவும் மற்ற வாசகர்களுக்குப் பயன்தரக் கூடியதாகவும் அமைய வேண்டும். நூறு சொற்களுக்குள் அவை இருக்கவேண்டியது இன்றியமையாதது.

வாசகர்கள் தெரிவிக்கும் குற்றம் குறைகளை அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி பதிலை பெற்றுப் பிரசுரிக்க, முடிந்த மட்டும் முயற்சி செய்யப்படும்.

கடித உறையின்மேல் இடப் பக்க மூலையில் "வாசகர் வட்டம்" என்று குறிப்பிட்டுக் கீழ்க்காணும் முகவரிக்கு வாசகர்கள் அனுப்ப வேண்டும்.



ஆசிரியர்,
புதிய சமுதாயம்
அஞ்சல் பெட்டி: 2066,
கோலாலம்பூர்.

ஈப்போ தைப்பூசம்

முதலாம் உலக மகாயுத்தம் மூள்வதற்கு முன்னதாக ஒருநாள் பாரிட் திரு. முனிசாமி உடையார் அவர்களிடம் வேலை பார்த்து வந்த கல் உடைக்கும் தொழிலாளி திரு. மாரிமுத்து என்பவர், தம் தொழிலின் நிமித்தம் குனோங் சிரோ அடிவாரத்தில் நடமாடிக் கொண்டிருக்கும்போது, "இங்கே வா, இங்கே வா" என்று யாரோ அழைப்பது போன்ற குரல் கேட்டு, திகைப்படைந்து நிற்கையில் மீண்டும் அதே போன்ற குரலொலி மலைப் பகுதியிலிருந்து வருவதைக் கண்டு மேலும் திகைப்படைந்து தம்முடைய முதலாளியாகிய முனுசாமி உடையாரிடம் போய்த் தகவலறிவித்தார். முதலில் அசட்டை செய்திட்ட முனுசாமி உடையார் அதனைப் பார்த்துவிட வேண்டும் என்ற முடிவிற்கு வந்தவராய்த் தம்முடைய தொழிலாளர்கள் பலருடன் மலைப் பகுதியை ஆராய்ந்து அலசிப் பார்க்கத் தொடங்கினர். அப்போது, கும்மென்ற இருட்டுடன் கூடிய குகை தென்பட்டது. தீப்பந்தங்களைத் தயாரித்துக் கொண்டு உள்ளே ஊடுருவிச் சென்று பார்த்தார்கள். கமகம என்று சாம்பிராணி வாசனையும் கற்பூரம், ஊதுபத்தி வாசனைகளும் சேர்ந்து மணக்க அனைவரும் தங்களை அறியாமலேயே பக்தி வசப்பட்டு, மிக்க பயபக்தியுடன் மேற்கொண்டும் அங்குள்ள இரகசியத்தைக் கண்டுபிடிக்க முனைந்தார்கள். அப்போது, திருமுருகன் சாயல் போன்ற அமைப்பு ஒன்றினை, கல்லிலே கண்டு அதிசயித்தனர். அதனைத் தொடர்ந்து அக்குகை தூய்மைப் படுத்தப்பட்டு, திருமுருகன் குடிகொண்டுள்ள இடமாகக் கருதப்பட்டு, வழிபாட்டிற்குரிய ஒன்றாக மாற்றி அமைக்கப்பெற்றது. இதனைத் தொடர்ந்து, கல்லுமலை ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில், குனோங் சிரோவில் அமைவதாயிற்று.

ஈப்போ, குனோங் சிரோவில் அமைந்துள்ள கல்லுமலை ஸ்ரீ சுப்பிரமணியர் குகாலயம் மக்களின் வணக்கத்துக்குரிய இடமாக மாற்றி அமைக்கப் பட்டவுடன், ஈப்போ, சுங்கை பாரி ரோட்டில் அமைந்து விளங்கிய ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்துக்கும், கல்லுமலை ஸ்ரீ சுப்பிரமணியர் குகாலயத்திற்கும் தொடர்பு ஏற்படலாயிற்று. இரு ஆலயங்களையும் பராமரிக்கும் பொறுப்பு, திருமிகு. வி. செங்கல்வராயன் அவர்களையே சார்ந்ததாயிற்று. அது முதல், தைப்பூசக் காவடிக் காணிக்கைகள் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவிலிலிருந்து கல்லுமலை ஸ்ரீ சுப்பிரமணியர் கோயிலுக்குச் செலுத்தும்படியான நடைமுறை ஏற்பட்டது.

1926-ஆம் ஆண்டில் நடைபெற்ற தைப்பூச உற்சவத்தின் போது குனோங் சிரோ சரிவில் இருந்த பெரும் பாறை ஒன்று உடைந்து விழுந்ததில் இருவர் மரணமடைந்தனர். இவ்வுயிர் இழப்பையும் விபத்தையும் கருத்தில் கொண்டு அரசு குகாலயத்தை அப்புறப்படுத்திக் கொள்ளும்படியாக ஆணையிட்டு, குனோங் சிரோ பகுதி, மக்கள் நடமாட்டத்துக்கு ஆபத்தான இடம் எனவும் பிரகடனம் செய்தது. அரசு ஆணையைத் தட்ட முடியாமல், அந்த ஆணைக்கு இணங்க வேண்டியதாயிற்று. அரசு கோயிலை மாற்றி அமைக்க, பழைய அறுப்புக் கொட்டகை அமைந்துள்ள இடத்தில் நிலம் வழங்கியது. செங்கல்வராயன் மேசனுர் அந்த இடத்தில் ஆலயத்தை மாற்றி அமைக்க இசையாமல் இப்போதுள்ள இடத்தில் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தை அமைத்தார். அது முதல் இப்போதுள்ள கோயில் வணக்கத்துக்குரியதாக விளங்கிறது.

1930-ஆம் ஆண்டு வரை குகாலயமாக விளங்கிய கல்லுமலைக் கந்தன் ஆலயம், 1932ஆம் ஆண்டில் சாந்துக்கலவையால் சிற்ப வேலைப்பாடுடைய கர்ப்பக் கோபுரத்துடனும், தகரத்தாலான கூரையுடன் கூடிய மண்டபத்துடனும் அமைக்கப் பெற்றது. 1932 இறுதியில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த அமைப்பினைத்தொடர்ந்து அவ்வப்போது பல்வேறு பராமரிப்பு, செம்மையாகுதல் வேலைகள் நடைபெற்று வந்தன என்றாலும், பெருமளவிலான மாற்றங்கள் எதனையும் செயலாற்ற இயலாமல் இருந்தது. ஆனாலும் தைப்பூச உற்சவம் மிக ஆடம்பரமான வகையிலும் கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டது. கல்லுமலை கந்தப்பெருமான் இந்திய இந்துக்கள் அல்லாத பிற இன மக்களையும் தம்முடைய அருட்டிறத்தால் ஈர்த்துக் கொண்டு, காவடி முதலிய காணிக்கைகளை மனதார பக்தி சிரத்தையுடன் செலுத்தும் பக்தர்களாக ஆட்கொண்டார்.

இரத ஊர்வலத்துடன் தைப்பூசத்திருவிழா நடைபெற வேண்டும் என்ற எண்ணம் மேலிட்ட போது, அழகிய வேலைபாடுகளுடன் கூடியதும், இந்தியாவில் செய்யப்பட்டதுமான ரதம் ஒன்று 1934-ஆம் ஆண்டு வாக்கில் கோயில் உடைமை ஆக்கப்பட்டது.

தைப்பூசத்திருவிழா மூன்று நாள் விழாவாக நடைபெறுகிறது. முதலாம் நாள் ஸ்ரீமுருகப்பிரான் அனைத்து அலங்காரங்களுடன் சுங்கைபாரி வழியிலுள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோயிலிலிருந்து நகர் வலமாக, மேளதாள முழக்கத்துடன், மெய்யன்பர்கள் புடைசூழ கல்லுமலையைச் சென்றடைதல், இரண்டாம் நாள் காணக் கண் ஆயிரம் வேண்டும் எனத் தக்க வகையில் வண்ண வண்ண அழகுக் காவடிகளும் மயில் காவடிகளும், பால் காவடிகளும், இரதக் காவடிகளும் பல்வேறு திசைகளிலிருந்து பக்தர்கள் வசதிகளின் படி வந்தாலும், சுங்கைபாரி ரோட்டிலுள்ள தாய்க் கோயிலான ஸ்ரீ மகா மாரியம்மன் கோயிலிலிருந்து பெரும்பாலான காவடிகள் திருமுருகன் சன்னிதி நாடிச் செல்லுதல், மூன்றாம் நாள் கல்லுமலை திருக்கோயிலிலிருந்து ஸ்ரீ சுப்பிரமணியர் அனைத்து அலங்காரங்களுடன் தாய்த்திருகோயிலான ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோயிலுக்கு நகர் வலமாக வந்தடைதல் ஆகிய நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைபெறுகிறது.


-நா. ஆறுமுகம்
கௌரவச் செயலாளர்,
இந்து தேவஸ்தான
பரிபாலன சபா, ஈப்போ.

பாகவதருக்குப் பொன்னாடை

இன்று நாம் தரமான இசையை உள்ளூர் இசைஞர்களின் வழி மலேசிய வானொலியின் சிவப்பு ஒலி அலைவரிசையில் கேட்க முடிகிறதென்றால் அதன் அடிப்படைக் காரண கர்த்தாவாகிய திரு. எஸ். சி. நாகசாமி பாகவதரை நினைவில் கொள்ளாமல் இருக்கமுடியாது.

1948-இல் இன்று இருப்பது போல் வாத்தியக் குழுக்கள் நிறைந்து இயங்கவில்லை. மலேசிய வானொலியில் ஆர். டி. எம். சிவரஞ்சினி என்ற பெயரில் இயங்கிவரும் இசைக்குழுவைப்போல் வானொலியில் ஓர் இசைக்குழுவும் இருந்ததில்லை. அது மட்டுமல்லாது, இன்று மலிந்து கிடக்கும் பாடக பாடகியர்களைப் போல் பாடுவதற்குக் கலைஞர்கள் ல்லாமல் இருந்த நிலையும் இருந்தது. அப்படியே பாட வந்த ஒருசிலரும் பயன்படுத்திய பக்கவாத்தியங்கள், மிருதங்கம். வயலின், ஹார்மோனியம் இவைதாம். இப்படிப்பட்ட இசைக் கருவிகளைக் கையாண்ட கலைஞர்கள் பாவரும் தமிழ் நாட்டோடு தொடர்பு உடையவர்களாதலால் பலரும் பிறந்த நாட்டைச் சென்றடைந்து விட்டார்கள். அதுமட்டுமல்லாது, இசைத்தட்டுகளும் வானொலி நிலையத்தில் அதிகமில்லாததால் கேட்ட பாட்டையே திரும்பத் திரும்பக் கேட்கவேண்டிய சூழ்நிலையும் ரசிகர்களுடைய அதிருப்தியை வானொலி நிலையத்தார் சம்பாதிக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலையும் உருவாகிக்கொண்டிருந்தன.

அப்போது வானொலி நிலையம் "ஜாலான் யங்"கில் அதாவது தங்லிங் மருத்துவமனையருகில் இயங்கிக்கொண்டிருந்தது. அப்போது பகுதிநேர இசைக் கலைஞராக இருந்த திரு. நாகசாமி பாகவதர் அன்று வானொலியில் இந்தியப் பகுதித் தலைவராக இருந்த திரு. தாமசிடம் சென்று "இசைத்துறை சூன்யத்தை மாற்றுவதற்கு உள்நாட்டு இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கத் தனி இசைக்குழுவை அமைத்துப் பயிற்சியளித்தால் சிறப்பான எதிர்காலத்தை தோற்றுவிக்கலாம்" என்றார். திரு. தாமஸ் அவர்களும் நிலைமையை உணர்ந்து இதற்குப் பொருத்தமானவர் பாகவதர்தான் என்று நினைத்து அவரிடமே இசைக் குழுவை நிறுவும் பொறுப்பை ஒப்புவித்தார். இதன் பயனாக "தென்னிந்திய அமெச்சூர்ஸ்" என்ற பெயரில் வாத்தியக்குழு அமைந்தது.



ஓரளவு இசைக் கருவிகளைக் கையாளக்கூடிய கலைஞர்களைத் தேடிப்பிடித்து அவர்களுக்குப் பயிற்சி அளித்துவந்தார். இசையையே தனது உயர்ந்த லட்சியமாகக் கருதிய பாகவதர் தனது உழைப்பிற்கு எந்தவித ஊதியத்தையும் எதிர்பாராது தரமான உள்நாட்டு இசைக்கலைஞர்களை உருவாக்குவதே நோக்கமாகக் கொண்டு உழைத்தார். இதன் பயனாகவே பிற்காலத்தில் "வாத்திய சம்மேளனம்", "இசைக் கொத்து" போன்ற தரமான நிகழ்ச்சிகளை உருவாக்க முடிந்தது.

சிறுவயதில் தமிழகத்தில் டி. கே. எஸ். நாடகக் குழுவில் சேர்ந்து நடித்த அனுபவம் இருந்ததால், சரித்திர, இலக்கியக் கதைகளுக்கு ஏற்ப இசையமைத்து வாரமொருமுறையாக வானொலியில் இசை நாடகங்களை அறிமுகப் படுத்திய பெருமை பாகவதரையே சாரும்.

"கலையின் போக்கைக் காலத்திற்கேற்றாற்போல் மாற்றியமைக்கும் திறமை வேண்டும். அப்போதுதான் ரசிகர்கள் கலையை ரசிக்க முடியும். வெறும் இசை ஆசிரியராகப் பணிபுரிந்திருப்பேனாகில் காலம் எப்போதோ என்னை ஒதுக்கிவிட்டுப் போயிருக்கும். பலதரப்பட்ட இசை நிகழ்ச்சிகளை மக்களின் ரசனைக்கேற்ப வானொலி வாயிலாகப் படைத்ததினால்தான் பொதுவில் நான் மதிப்பும் ஆதரவும் பெறமுடிந்தது" என்று சொல்லும் பாகவதர், உள்நாட்டு இசைத்துறை வளர்ச்சியைப் பற்றிக் கேட்டபோது சொல்லிய தகவல்கள் சிந்தனையைத் தூண்டாமல் இருக்கவில்லை.

"உள்நாட்டுக்கலைஞர்கள் பெரும்பாலும் "கார்பன்" காப்பி போல மற்ற நாட்டுக்காரர்கள் பாடியது போலவும், நடித்தது போலவும், இசைத்தது போலவும் செய்ய முயற்சி செய்கிறார்களே தவிர, தமக்கென ஒரு தனித் திறமையை வளர்த்தார்களில்லை. ஆரம்பநிலைக்குப் பிறரைப்பார்த்து இசைப்பது, பாடுவது, நடிப்பது எல்லாம் ஒரு பயிற்சி அல்லது ஆர்வத்தை மேம்படுத்துவதற்கு உதவுமே தவிர, அதுவே ஒரு வித்துவத் தன்மைக்கு ஏற்ற பயிற்சியாக அமையாது. இசைத்துறையைப் பொறுத்தமட்டில் கற்பனைசக்தி மிக மிக அவசியம். அதைக்

கொண்டுதான் இசையை அபிவிருத்தி செய்ய முடியும்.

"மேடை நிகழ்ச்சிகளில் புகழ்படைத்த பாடகர்கள் என்று அறிமுகப் படுத்துகிறார்கள். கூடவே பட்டங்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள். இதை எல்லாம் பார்க்கும்போது, இவர்கள் எந்த ரகத்தைச் சேர்ந்த கலைஞர்கள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

தயவு செய்து கொஞ்சமேனும் அடிப்படை சங்கீதத்தை கற்றுக் கொள்ளுங்கள். இது உங்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும். திரைப் பாடகர்களைப் பின்பற்றிப் பாடுபவர்கள், திரைப்பாடகர்கள் புகழ் இருக்கும் மட்டும்தான் இவர்கள் ஜொலிக்க முடியும். அவர்கள் புகழ் மங்கினால் இவர்களும் இயல்பாகவே காணாமல் போய்விடுவார்கள். தனித் திறமைக்கு இருக்கும் பெருமை போலிக்கு இருப்பதில்லை. நம் நாட்டுக் கலைஞர்கள் அசலாக இருக்கவேண்டும், நகலாக இருக்கக்கூடாது. புதிய பாடகர்களுக்கும் இசைக்கருவிகளைக் கையாள்பவர்களுக்கும் இவற்றைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

"நம் நாட்டில் கலை வளர வேண்டுமென்றால் முதலில் கலைஞனின் நிலை உயரவேண்டும். வெறும் ஆர்வமிகுதியால் ஏற்படும் கலை உணர்வுகள் அந்த ஆர்வம் குன்றுகிறபோது மறையத் தொடங்கிவிடுகிறது. இந்நிலை போக்க வெறும் பொழுதுபோக்குக் கலைஞர்களாக இருக்கும் நம் கலைஞர்கள் தொழில் கலைஞர்களாக மாறவேண்டும். இதற்கு அரசாங்கம் ஆவன செய்வது அவசியம். உதாரணத்துக்கு என்னையே எடுத்துக் கொண்டால் நான் ஆரம்பகாலத்தில் பன்னிரண்டு வருடம் வானொலியில் பகுதிநேரக் கலைஞனாக இருந்து காலத்தைப் போக்கினேன். பிறகு இன்று வரை குத்தகை அடிப்படையிலான நிரந்தரமில்லாத முழுநேரக் கலைஞனாக வேலை செய்கிறேன். ஆக, என்னுடைய உத்தியோகம் நிரந்தரமானதல்ல. நான் மட்டுமல்ல, வானொலியில் பணியாற்றும் பல நல்ல கலைஞர்களும் இந்த அடிப்படையில்தான் காலந்தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். கலைத்திறனை மதித்து, அதற்கான ஊக்குவிப்பை மக்கள் தரவேண்டும். வெளிநாட்டுக் கலைஞர்களுக்குத் தரப்படுகின்ற உற்சாகமான வரவேற்பு, விருந்துபசரிப்பு, பொருளன்பளிப்பு, கவிதாஞ்சலி, பட்டமளிப்பு, உள்நாட்டுக் கலைஞனுக்கு, நம்மோடு வாழ்ந்துகொண்டிருப்பவனுக்கு வாய்க்காதது மிகவும் வேதனையான செய்திதான் என்று சொல்வதிலே தப்பிருக்க முடியாது. மண் வளமாக இருந்தால்தான் பயிர் செழித்து வளர முடியும்..."

திரு. நாகசாமி பாகவதரின் இந்த அனுபவபூர்வமான கருத்துக்களை நம் கலைஞர்களும் ரசிகர்களும் சிந்திப்பது நல்ல பயனை உண்டுபண்ணும் என்பது நமது நம்பிக்கை.

பாகவதர் நல்ல கலகுடும்பத்தைச் சேர்ந்தவர். திரைப் பாடகர் எஸ். சி. கிருஷ்ணன் இவருடைய தம்பி என்பது குறிப்பிடத்தக்கது. முதிர்ந்த இசை ஞானம் உள்ள பாகவதருக்கு வருகிற 29.1.78இல் தலைநகர் கலாமண்டபத்தில் நடைபெறும் தியாகராஜ உற்சவத்தில் பொன்னாடை போர்த்திப் பட்டமளித்துக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளைச் "சங்கீதாலயா" செய்வதறிந்து நாம் மகிழ்ச்சி கொள்வதோடு, அவர் பல்லாண்டு வாழ்ந்து இசைத் துறைவளர்ச்சிக்குத் தொடர்ந்து தொண்டாற்ற மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோமாக.

-சோ. பரஞ்சோதி

அவியல்



● மேலே படத்தில் காணப்படும் மணமகள் வேறு யாருமல்ல. ஹாலிவுட் கவர்ச்சி நடிகையான எலிசபெத் டெய்லரின் தாயார் சாரா டெய்லர்தான் அவர். அவரின் வயது 74. படத்தில் காணப்படும் 40 வயதுடைய பியாவ் ஜெம்ஸை சாரா டெய்லர் விரைவில் திருமணம் செய்து கொள்ளவிருக்கிறார். மணமகன் மணமகளைவிட நாற்பது வயது இளையவர். அதுமட்டுமல்ல, எலிசபெத் டெய்லரை விடவும் நான்கு வயது இளையவர் இந்த மணமகன்!

● செவிடர்களின் குறையைத் தீர்க்க புதியதொரு சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இயந்திரக் காதுதான் அது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் பிரியான் மூர் இதனைக்கண்டு பிடித்துள்ளார். இந்தவகைக் காதுகள் இதுவரை ஆறு பேருக்கு பரீட்சார்த்த முறையில் பொருத்தப்பட்டுள்ளன.

● பெரிய அளவிலான தக்காளிப் பழங்களைத் தயாரிக்கும் முறையை ரஷிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பயிரிடுவதற்கு முன் விசேஷமானதொரு மின்சாரக் கதிரியக்கத்தில் தக்காளி விதைகளைக் காட்டுவதன் மூலம் இது சாத்தியப் படுகிறது. இம்முறையில் ஒரு பவுண்டு வரையிலான எடையுடைய தக்காளிகளை உருவாக்க முடியும் என அவ்விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

● கடந்த ஆண்டில் கோலாலம்பூர் மாநகரில் போதைப் பொருள் சம்பந்தமாக சுமார் 5,200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 38பேர் "புலாவ் ஜெராஜாக்" என்னும் தீவுக்கு தண்டனைக் கைதிகளாக அனுப்பப்பட்டுள்ளனர்.

பால்மரக் காட்டினிலே

அகிலன்

21. முத்துவும் பாலனும்

"ஏம்பா முத்து, வடக்கு மேட்டுலே வேலைக்கு அனுப்பி உன் கையைக் காலை ஒடிக்கிருங்களே, கிராணியைப் பார்த்து நீ ஒரு பேச்சு சொல்லப்படாதா? இல்லே உங்கப்பாரும் நானும் பார்த்துப் பேசட்டுமா?" என்று தன் மகனை உற்றுப் பார்த்தவாறே கேட்டாள் வேலம்மா.

அதிகாலைப் போதில் அவரவர் வேலைக்கு அவரவர் பரபரப்போடு புறப்பட்டுக் கொண்டிருந்த வேளை அது. வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்த முத்துவின் தோற்றத்தில் இப்போது ஒரு வாரமாய்த் தளர்ச்சியைக் கண்டு தாயுள்ளம் மறுகியது. முத்து வாய் திறந்து யாரோடும் கலகலப்பாகப் பேசமாட்டான். மாடு போல் உழைப்பான். அடுத்தவர்களுக்கு ஏதாவது உதவி தேவையென்ருல், அவர்கள் கேட்காமலே தான் அதை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வான். யாருக்காவது துன்பம் வந்தால் அதைத் தன் துன்பமாகச் சுமக்க முயல்வான்.

முன்பு அவன் காமாட்சியைக் கல்யாணம் செய்து கொள்ள இசைந்ததுகூட இப்படித்தான். அண்ணன் முருகனை நம்பிக் காமாட்சியும் ஏமாந்தாள்; அவள் பெற்றோரும் ஏமாந்தார்கள். அவர்கள் எல்லாருக்கும் ஆறுதலாக இருக்கும் என்று நம்பியே அவன் தன் மாமனின் மூத்த மகள் காமாட்சியை மணந்து கொள்ள முன் வந்தான். தோட்டத்து நிர்வாகத்தின் குறுக்கீட்டால் அந்தக் கல்யாணமும் தடைப்பட்டு விட்டது. "சாபாவிலே இப்போ மாமா குடும்பம் எப்படி இருக்குதோ? காமாட்சி என்ன செய்ருளோ?" என்று எப்போதாவது நினைத்துக் கொள்வான் முத்து.

தாயாரின் கேள்விகளுக்குப் பின்னே இருந்த கவலை முத்துவுக்குத் தெரியாமல் இல்லை. அதைத் தெரிந்து கொள்ளாதவன்போல், "யாரும் யாரையும் போய்ப் பார்க்க வேண்டாம்; நானும் பார்க்கப் போறதில்லே. வடக்கு மேட்டு வேலை எனக்கு ஒண்ணும் கஷ்டமாயில்லே" என்ருன்.

"உடம்பு இதுக்குள்ளே துரும்பாய்ப் போய்ச்சே முத்து? எப்படி இருந்த புள்ளே எப்படி இளைச்சுப் போயிட்டே? பெத்த வயிறு என்ன பாடுபடுதுன்னு உனக்குத் தெரியுமா?"

"வயித்துப் பொழைப்புக்குன்னு உழைக்கப் போனு இதுக்கெல்லாம் கவலைப்படக்கூடாது. இந்த வேலையிலே கொஞ்ச நாள் பழகிப் போனு எல்லாம் சரியாப் போகும்."

"காலமெல்லாம் வடக்கு மேடே கதின்னு இருக்கப் போறியா?"

"இருந்தா என்ன கெட்டுப் போச்சு. பொம்பிளைப் புள்ளைங்களையே அங்கே அனுப்ப ஆரம்பிச்சிட்டாங்க. என்ருலே தானு முடியாது?" என்று கேட்டுவிட்டு "சரி, சரி. பாத்திரத்திலே கொஞ்சம் நிறையச் சோத்தைப் போட்டுவை. அந்தச் சின்னச்சாமி போட தங்கச்சி செல்லத்தை அவங்க அண்ணி பட்டினி போட்டே கொன்னுடுவா போலே இருக்கு" என்ருன் முத்து.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே தேநீர் பருகிக்கொண்டிருந்த பாலனுக்குத் தன் தம்பியைப் பற்றிய நினைவு பெருமையையும் மகிழ்ச்சியையும் அளித்தது. முத்துவுக்குப் படிப்பு ஏறவில்லையென்ருலும் அவன்தான் அந்த வீட்டில் கடுமையாக உழைப்பவன். ஓய்வு நேரத்தில் வீட்டுக்குத் தேவையான விறகைச் சேகரித்துக் கட்டைகளைப் பிளந்து போடுவான். தாயாருக்கும் தங்கைக்கும் உதவியாகத் தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவான். அவனுக்குச் சமையல் கூடச் செய்யத் தெரியும். காசையும் நேரத்தையும் உடம்பையும் கெடுத்துக் கொள்ளும் எந்தக் கெட்ட பழக்கமும் அவனிடம் கிடையாது. அவனுடைய உடற்கட்டில் நினைவிழந்து அவனிடம் ஏமாந்த தோட்டத்துப் பெண்கள் சிலர் அவனுக்கு வைத்த்பெயர் "சாமியார்!" இதுவும் பாலனின் காதுகளில் விழாமல் இல்லை.

சாப்பாட்டுப் பாத்திரம், பால் சேகரிக்கும் வாளி, உலர்ந்த பாலை உரித்துப் போட்டுக் கொள்ளும் குடுவை, மரம் வெட்டும் வளைந்த கத்தி முதலியவற்றேடு பெயர் கொடுக்கும் மஸ்டர் களத்தை நோக்கிப் புறப்பட்டான் முத்து. வெண்கலச் சிலைபோல் முன்பு காணப்பட்ட அவன் உடற்கட்டு இப்போது தளர்ந்திருந்ததைக் கண்டு பாலனும் தனக்குள் சிறிது கலக்கமடைந்தான். வெளிப்புறத் தோற்றத்தில் அந்த வெண்கலச் சிலையின் கட்டுத் தளர்ந்திருந்தாலும் அதற்குள்ளே கட்டுக் குலையாத ஓர் உரம் படைத்த நெஞ்சு துடிப்பதைப் பாலனுல் காண முடிந்தது. தங்கள் குடும்பத்துக்கு அவனே தலையான சொத்து என்ற நினைவால் ஒரு கணம் பூரித்துப் போனுன் பாலன்.

வடக்கு மேட்டுக்குப் பால்மரம் வெட்டப் போகும் தண்டனையை முத்து பெற்றதற்குக் கூட அவனுடைய சொந்த விஷயம் ஒன்றும் காரணம் அல்ல. பால் வெட்டி முடிந்தவுடன் நிறுத்துப்பார்த்துக் கணக்கெடுக்கும் கூடாரத்தில் ஒரு சிறிய நிகழ்ச்சி நடந்தது. பால் கிராணி, பக்கிரிசாமி நிறுவைக் கணக்கை நோட்டில் எழுதிக்கொண்டிருந்தான். கங்காணி கோவிந்தன் பாலை நிறுத்துக் கணக்கைச் சொல்லி விட்டு அதைப் பெரிய வாளியில் கொட்டியபடி இருந்தான். முத்துவுக்கு முன்னுல் நின்ற மாரியப்பனின் முறை வந்தபோது, மாரியப்பன் சேகரித்த பாலின் அளவுக்கும் கங்காணி பால்கிராணியிடம் சொன்ன அளவுக்கும் வித்தியாசம் இருந்தது. குறைத்துச் சொன்ன கங்காணி அவசரம் அவசரமாக அந்தப் பாலைப் பெரிய வாளியில் கொட்டியும் விட்டான். இதைப் பால்சேகரித்த மாரியப்பன் கவனிக்கவில்லையென்ருலும் முத்து கவனித்து விட்டான்.

"என்யா, கணக்கைக் குறைச்சுச் சொல்றே? நிறை குறைஞ்சா மாரியப்பனேட கூலி குறையாது? நிதானமாப் பார்த்துக் கணக்குச் சொல்லப்படாது? ஒண்ணுக்கு முக்காலாச் சொல்றது என்ன நியாயம்னு கேக்கறேன்?"

கங்காணி கோவிந்தனும் பால் கிராணி பக்கிரிசாமியும் ஒருவரை ஒருவர் அர்த்தத்தோடு பார்த்துக் கொண்டார்கள். கங்காணி தெரியாமல் செய்துவிட்ட பிழையல்ல இது. பால்கிராணிக்கும் மாரியப்பனுக்கும் ஏதோ மனத்தாங்கல் இருந்ததால், கிராணியின் பேச்சைக் கேட்டுத்தான் கோவிந்தன் இப்படிச் செய்திருக்கிருன் என்பது முத்துவுக்கு விளங்கிவிட்டது.

"சரியா அளந்துதான் நான் கணக்குக் குடுத்தேன். நீபோட்டுக்கு உன் வாயை மூடிக்கிட்டுப் போ! உனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லே!" என்ருன் கங்காணி.

பால்கிராணி பக்கிரிசாமி குறுக்கிட்டு, 'மாரியப்பனுக்கு உடுக்கடிக்காமலே, சாம்பிராணி போடாமலே சாமி வரும். நீ வேறே உடுக்கடிச்சு, சாம்பிராணி போட்டு, தூபம் காட்டிவிட்டிடா?" என்று முத்துவைப் பார்த்து முறைத்தான்.

முத்துவுக்கும் பால்கிராணிக்கும் பேச்சு முற்றியது. மாரியப்பனும் முத்துவும் ஒரு கட்சி, கங்காணியும் கிராணியும் மற்றொரு கட்சி என்ற நிலைக்கு வளர்ந்தது. சொற்களில் சூடு பறந்தது. "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்று சொல்வார்களே, அதுபோல் "சாமியார்" முத்து, "முரடன்" முத்துவாகி விட்டான். மறுநாளே அவனுக்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது.

விக்டரி எஸ்டேட்டின் அங்கமானுஇய வடக்கு மேட்டுக்கு மாற்றல் உத்தரவு வந்து சேர்ந்தது.

முத்துவைப் பற்றிய நினைவுகளை அசை போட்டுக்கொண்டே தன் பள்ளிக்கூடத்தை நோக்கிச் சைக்கிளை மிதித்தான் பாலன். சைக்கிளின் பின்புறம் கமலம் இருந்தாள். பள்ளிக்கூடம் நெருங்கிக் கொண்டிருந்தது. பாலனின் மனம் முத்துவை மறந்துவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குத் தாவியது. அங்கேயும் சில நாட்களாக அவனுக்குப் பிரச்னைகள் முளைவிடத் தொடங்கி இருந்தன. அவனுடைய தலைமை ஆசிரியர் சண்முகம் முன்போல் அவனிடம் சுமுகமாக நடந்துகொள்வதில்லை. வேண்டாத விவகாரங்களை அவன் இழுத்துப் போட்டுக் கொள்வதாக அவனிடம் நேரடியாகவே அவர் குறைபட்டுக்கொண்டார். பாலனால் தமக்கோ தம் வேலைக்கோ தொல்லை வந்துவிடக் கூடாதே

என்ற அச்சம் அவர் பேச்சில் தலைநீட்டுவதைப் பாலன் கண்டுகொண்டான். அதே சமயம் பாலன் போக்கை உறுதியோடு தடுத்து நிறுத்தவும் முடியவில்லை.

பாலன் செய்தது இவ்வளவுதான்.

மாலை நேரத்தில் பள்ளிக்கூடம் விட்டவுடன் தன் தங்கை கமலத்தை மற்ற பிள்ளைகளோடு வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அவன் மட்டும் அங்கே தங்கினான். ஆறும் வகுப்பைத் தோட்டப் பள்ளியில் படித்து முடித்துவிட்டு, அடுத்த ஆண்டு சிரம்பானுக்குப் போய் ஆங்கிலப் பள்ளியில் மேல்வகுப்பைத் தொடர விரும்பிய மாணவர்களை மட்டும் தன்னோடு நிறுத்திக் கொண்டான். தோட்டப்பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு "ரிமூவ்" வகுப்பில் சேர்ந்த பிள்ளைகளில் பலருக்கு அந்த "ரிமூவ்" வகுப்பே ஒரு கண்டமாக இருந்தது. பத்துப் பேர் அங்கே போனால் அதில் ஒன்பது பேர் படித்துத் தேற முடியவில்லை. முற்றும் தமிழில் படித்த பிள்ளைகளுக்கு எல்லாமே அங்கு ஆங்கில மயமாகவோ மலாய் மயமாகவோ இருந்தது. கண்களைக்கட்டிக் காட்டில் விடப்பட்ட நிலைதான். பாதியில் படிப்பை விட்டவர்சிலர்; மோதிப் பார்த்துத் தோல்வி கண்டவர் இன்னும் சிலர்.

ஊர்விட்டு ஊர் போய்ப் படிக்க வேண்டும்; அவர்கள் சக்திக்கு மேல் பணம் செலவழிக்க வேண்டும். பெரும் பகுதி நேரத்தைப் பஸ்ஸுக்குக் காத்திருப்பதிலும் பஸ் பயணத்திலும் விரயம் செய்யவேண்டும். இவ்வளவு தடைகளையும் கடந்து சென்ற பிறகும்கூட அந்த "ரிமூவ்" வகுப்பு, சிறிதுகூட ஈவு இரக்கமின்றிப் பல தோட்டத்துப் பிள்ளைகளை மேற்படிப்பிலிருந்தே "ரிமூவ்" செய்து விடுகிறது! தோட்டப் பிள்ளைகளின் உயர்ந்த பட்சத் தலையெழுத்துத் தோட்டத்துப் பள்ளியின் ஆறும் வகுப்புத்தானா? அதற்குமேல் அவர்கள் தலை எடுக்கவே கூடாதா? முடியாதா? பாலனின் ஏக்கம் இது.

பாலனிடம் பாடம் சொல்லிக் கொள்ளப் பதினைந்து பிள்ளைகள் முன் வந்தார்கள். அவர்களுக்கு அவன் ஆங்கிலம் கற்றுத் தந்ததோடு ஓரளவு "ரிமூவ்" வகுப்புப் பாடங்களையும் அறிமுகம் செய்து வைத்தான். மாலைப் பள்ளி விட்ட பிறகு, ஒரு மணி நேரமோ இரண்டு மணி நேரமோ மேலும் அவர்களை அங்கே தங்கச் செய்து பாடம் நடத்துவான். வீட்டுப் பாடங்களும் கொடுப்பான். அவர்கள் எழுதும் விடைத் தாள்களைத் தன் வீட்டுக்கு எடுத்து வந்து அங்கே திருத்துவான். ஞாயிற்றுக்கிழமைகளில் அந்தப் பிள்ளைகளின் பெற்றோரைச் சந்தித்துப் பேசி வருவதுண்டு.

வழக்கம்போல் அன்றைக்கும் பள்ளிக்கூடம் கலைந்தது. பதினைந்து பிள்ளைகள் மட்டிலும் அங்கே பாலனை எதிர்பார்த்து ஆறும் வகுப்பறையில் காத்திருந்தார்கள். அவர்களை நாடி வந்துகொண்டிருந்த பாலனைத் தலைமை ஆசிரியர் சண்முகம் தம்மிடம் அழைத்தார். அவர் மேசைக்கெதிரில் கிடந்த நாற்காலியில் போய் உட்கார்ந்தான் பாலன்.

"நீங்க சொல்றதோட பின் விளைவு என்ன ஆகும்கிறதை நீங்க யோசனை செய்தீங்களா?" என்று கேட்டார் சண்முகம்.



இந்தப் பதினைஞ்சு பிள்ளைகளிலே, குறைஞ்சது பத்துப் பிள்ளைகள் "ரிமூவ்" வகுப்பைத் தாண்டி மேலே போனாலும், அவங்களாலே எதிர்காலத்திலே பத்துக் குடும்பங்களாவது நல்லாயிருக்கும். மனிதனை உருவாக்குகிற தொழில் நம்மோட ஆசிரியத் தொழில். என்னைக் கேட்டால், இந்தத் தோட்டத் தொழிலாளர்களோட எதிர்காலமே ஒரு வகையிலே நம்மைப் போலத் தோட்டத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் கையிலேதான் இருக்குன்னு சொல்வேன். தோட்டப் பள்ளிங்கிற இந்த நாற்றங்கால்களிலே நாம அவங்களை நல்ல பயிரா வளர்த்திட்டா, அவங்க தங்களோட எதிர்காலத்தை நல்லாக் கவனிச்சுக்குவாங்க இதுதான் நான் எதிர்பார்க்கிற பின் விளைவு" என்றான் பாலன்.

"நான் சொல்ற பின் விளைவு இது இல்லே!" என்றார் சண்முகம். "நாம ரெண்டு பேரும் போய்ப் பெரிய கிராணிகிட்டே ரெண்டு விஷயத்துக்கு அனுமதி கேட்டோம். மாலை நேர வகுப்பு இங்கே நடத்தவும், பெற்றோர் சங்கம் கூட்டவும் அனுமதி கேட்டோம். நமக்கு இன்னம் அனுமதி கிடைக்கலே. அதுக்குள்ள நீங்களே இங்கே வகுப்பைத் தொடங்கிட்டீங்க. என்னைக் கேட்டுத்தான் தொடங்கினீங்க. என்னாலே உங்களுக்கு அனுமதி மறுக்க முடியலே. நீங்க செய்யறது நியாயம்னு நான் ஒத்துக்கறேன். ஆனால், இப்ப என் தலைக்கும் சேர்த்துக் கல் வந்து விழும்போலத் தோணுது."

"நான் இப்ப என்ன செய்யணும்னு சொல்றீங்க."

"ஒண்ணு, இனிமேல் நீங்க மாலை வகுப்பை நடத்தக்கூடாது. இல்லே. ஏதாச்சும் மேலே இருந்து கேள்வி வந்தா, என்னோட அனுமதி இல்லாமல் நீங்க நடத்தறதா ஒத்துக்கணும்; நியாயத்தைச் செய்யறதுக்குக்கூட உரிமையில்லாத நிலையிலே நாம வாழ்கிறோங்கிறதை நீங்க நினைச்சுப் பார்க்கணும்."

நினைத்துப் பார்த்தான் பாலன். தலைமையாசிரியரின் தர்மசங்கடமான நிலை அவனுக்குப் புரிந்தது.



சிறுவர்களுக்கான கதைகள் கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், விடுகதைகள், முதலியவை மாணவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. கதையும் கட்டுரையும் புல்ஸ்கேப் தாளில் ஒரு பக்கத்திற்கு மேற் போகாவண்ணம் இருத்தல் வேண்டும்.

அதற்காகத் தன்னால் தொடங்கப்பட்ட பணியைக் கைவிடவும் அவனுக்கு விருப்பமில்லை. சின்னஞ்சிறு கொட்டில் போன்ற அவனுடைய லயன் வீட்டில் வகுப்பை நடத்த முடியாது. ஏற்கனவே அதில் எட்டுப் பேர்கள்; மரத்தடிகளில் வைத்துக் கொண்டாலும், இதே அனுமதிப் பிரச்னை வராமல் இருக்காது. எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துவிட்டு, "உங்க அனுமதியில்லாமல் நான் இங்கே வகுப்பு நடத்தறதாகவே நீங்க சொல்லிவிடலாம்" என்றான் பாலன்.

"வீணா நீங்க உங்களைப் பலி கொடுக்கத் துணிஞ்சிட்டீங்க" என்றார் சண்முகம்.

"அப்படி ஒண்ணும் வரும்னு நான் நினைக்கலே. அப்படியே வந்திட்டால்கூட, சில நல்ல காரியத்துக்காகச் சில பேராவது தங்களைப் பலி கொடுக்கிறது தப்பில்லேன்னு எனக்குத் தோணுது."

"நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். இந்தப் பள்ளிக்கூடத்திலேருந்து ஒரு நல்ல ஆசிரியரை இழக்க நான் விரும்பலே, பிறகு உங்க இஷ்டம்."

சண்முகம் பள்ளியை விட்டுப் புறப்பட்டுவிட்டார். பாலன் தன் வகுப்புக்கு வந்து பாடத்தை உற்சாகத்தோடு நடத்த முயன்றான். அவனால் அது முடியவில்லை. தலைமையாசிரியர் கடைசியாக விடுத்த எச்சரிக்கை அவனைக் குழப்பத் தொடங்கியது. "என்னையே இதுக்காகப் பள்ளிக்கூடத்திலேருந்து விலக்கிட்டாங்கன்னா பிறகு எப்படி என்னாலே இந்தப் பிள்ளைகளைக் கவனிக்க முடியும்? என்ன வேலை செய்து நான் வாழ்க்கையை அடுத்தாப்பிலே நடத்தறது?"

சிறிது நேரம் தடுமாறினான் பாலன். பிள்ளைகளிடம் கூட, "இனிமே உங்களுக்கு இந்த மாலை வகுப்பு வேண்டாம்; வீட்டிலேயே கவனமாகப் படிச்சுக்குங்க" என்று சொல்லி விடலாமா எனத் தோன்றியது. ஆனால் தொடங்குவதற்கு முன்பே இப்படியெல்லாம் நடக்கக் கூடுமென்று அவன் எதிர்பார்க்காமல் இல்லை. வருவது வரட்டும் என்றுதான் தொடங்கினான். எதிர்பார்த்ததுதான் வந்திருக்கிறது. வருவது வரட்டும், முன் வைத்த காலைப் பின்வைக்க வேண்டாம்.

ஒரு மணி நேரத்துக்குள் வகுப்பை அன்று நடத்தி முடித்துவிட்டு நாற்காலியில் தனியே சாய்ந்திருந்தான் பாலன். பின் விளைவுகள் பற்றிச் சற்று ஆழமாகவே அவன் சிந்திக்க வேண்டியிருந்தது. மூன்றாம் பேருக்குத் தெரியாமல் தான் தூக்கி எறியப்படுவதை அவன் விரும்பவில்லை, அவனுடைய போராட்டத்தின் நோக்கம் மற்றவர்களுக்குப் புரிந்தாக வேண்டும்.

இந்தச் சமயத்தில் அவனை வீட்டில் தேடிவிட்டு அவனுடைய நண்பர்கள் சிலர் பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள். தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த அவனுடைய இளம் நண்பர்கள் அவர்கள் லயன் வீடுகளுக்கு மின் வசதி, சுகாதார வசதி, நூலகம் போன்ற கோரிக்கைகளை அவர்கள் தோட்ட நிர்வாகிகளின் முன் வைத்தார்களாம். நேரடியாக "முடியாது" என்று சொல்லாமல், வழக்கம் போல் அந்தக் கோரிக்கைகளைப் பெரிய துரையின் முன் வைப்பதாகச் சொன்னார்களாம்.

"அப்புறம் நம்ப கோரிக்கைகளைப் பெரிய துரையோட குப்பைக் கூடையிலேதான் தேடிப் பார்க்கணும்!" என்றான் ஒருவன்.

பாலன் தன்னுடைய கல்வித் துறைப் போராட்டம் பற்றியும் அவர்கள் காதில் போட்டு வைத்தான். ஒருவேளை தான் வேலையிலிருந்தே விலக்கப்படக்கூடும் என்பதையும் தெரிவித்தான். வந்தவர்கள் அனைவருமே இதை கேட்டுப் பேரதிர்ச்சி அடைந்தனர்.

"உனக்கு எந்தக் கெடுதலும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எங்களோட கடமை. ஏன்னா, நீ காசு பணத்துக்காக இங்கே "பிரைவேட்" சொல்லித் தரலே: நம்ப புள்ளைங்க கடைத்தேறணும்னு நீ பாடுபடறே. இந்தக் கவலையை நீ எங்கிட்டே விட்டுடு!" என்றான் ஒருவன். மற்றவர்களும் அவனைப் பின்பற்றியே தங்கள் உணர்ச்சிகளைக் கொட்டினர்.

அப்போது அங்கே மோட்டார் சைக்கிள் சத்தம் நெருங்கிக்கொண்டிருந்தது. வாசலில் வந்து வண்டியை நிறுத்தினார் "டிரஸ்ஸர்" மாதவன். "மன்மதக் குஞ்சு வந்திருக்கு" என்று கேலியான குரலில் கிசுகிசுத்தான் ஓர் இளைஞன்.

"என்ன இது, பள்ளிக்கூடத்திலே தொழிற் சங்கக் கூட்டம் நடக்கிறாப்பிலே இருக்கே?" என்று ஏதும் தெரியாதவர் போல் கேட்டுக் கொண்டு வந்தவர் எகத்தாளமாகப் பாலனைப் பார்ப்பவர் போல் பார்த்துவிட்டு "ஓ! உங்களோட சங்கத்தை நடத்தற உண்மையான தலைவரைத் தேடிக்கிட்டு இங்கே வந்திருக்கீங்களா?" என்று அடுத்த கேள்வியையும் தொடுத்தார்.

இளைஞர்கள் அனைவருக்கும் கோபம் உள்ளுக்குள் குமுறிக் கொண்டு வந்தாலும், அவர்களில் யாருக்கும் அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள துணிவில்லை. "உண்மையாவே நீங்கதான் இப்பப் பெரியதுரை!" என்று மனத்துக்குள் குமுறினான் ஒருவன். ஆனால் எல்லாருமே அவருக்கு மரியாதை தெரிவிக்கும் முறையில் மௌனமாக எழுந்து நின்றனர் அவரை எதிர்த்துக்கொண்டு அங்கே யாரும் பிழைத்திட முடியாது.

"சரி, நான் வர்றேன்!" என்றவர், "பாலா, பள்ளிக்கூடத்தைப் போய் இப்படித் தொழிற்சங்கமா நீ மாத்தலாமா?" என்று கேட்டுக் கொண்டே வெளியேறினார். அவருடைய மோட்டார் சைக்கிளின் உறுமல் அங்கிருந்த அனைவர் உள்ளத்திலுமே அச்சத்தைப் பரப்பியது.

(தொடரும்)

இலக்கிய அரங்கம்

கண்ணீர்ப் பூக்கள்

போரும் சமாதானமும் மனித வாழ்க்கையின் இரண்டு பக்கங்களாகி விட்டன. போர் இருக்கும் வரை சமாதானம் இருக்கும். சமாதானம் இருக்கும் வரை போர் இருக்கும். மனித குல வரலாற்றை ஆராய்ந்தால், முறைகள் மாறியுள்ளனவே தவிரப் போரில்லாக் காலம் இல்லை. எல்லாக் காலங்களிலும் எல்லா மொழிகளிலும் போரைப் பற்றி எவ்வளவோ கவிதைகளும், கட்டுரைகளும், கதைகளும் வெளிவந்துள்ளன. அறிவியல் முன்னேற்றம், எண்ண முடியாத அளவுக்கு வளர்ந்துவிட்ட இக்காலத்தில், ஒரு கவிஞர் அதைப் புதிய கோணத்தில் பார்க்கிறார். தம் கற்பனை வளத்தில் படம் போட்டுப் போரைப் பற்றிய இந்த உண்மையை அவர் உணர்த்துகிறார். அவ்வுணர்த்தலுக்கு "வியட்நாம் போர் முடிந்தது" என்ற செய்தி கருவியாகிறது.

"வியட்நாம் அலைவரிசையில்
நீங்கள் கேட்டுவந்த
வேதனைப் பாடல்களின்
ஒலிபரப்பு
இத்துடன் முடிகிறது.
மீண்டும்
வேறு அலைவரிசையில்
இதே பாடல்கள்
தொடரும் வரை
நேயர்களுக்கு வணக்கம் கூறி
விடை பெறுவது......"



என வரும் வடிவத்துடன், "சமாதானம்" என்ற தலைப்புச் சேரும்போது உள்ளடக்கம் அழுத்தமாகிறது; இயல்பான, மிகையில்லாத சொற்களோடு கூடிய வடிவமும் முழுமை பெறுகிறது. யாப்புக்குக் கட்டுப்பட்ட வடிவம் இதில் இல்லாதிருக்கலாம். ஆனால், உள்ளடக்கம், கற்பனை, உணர்ச்சி, உணர்த்தல் முதலிய கவிதைப் பண்புகள் இதில் மிகச் சிறப்பாக உள்ளன. புதுக்கவிதை என்று உரியவர்கள் இதனைக் கூறுகிறார்கள். உரைக்காலம், உரைச்சித்திரம், சொற்கோலம், வசன கவிதை, இலகு கவிதை என்று வேறு சிலர் கூறுகிறார்கள். பெயர் எதுவானால் என்ன? இலக்கியப் பண்புகள் சிறந்து நின்றால் போற்றி அனுபவிப்பதில் குறை என்ன?

போரைப் பற்றி மட்டுமல்லாமல், எதையும் புதிய நோக்கில் நிகழ்கால அரசியல், அறிவியல், பொருளியல், புவியியல், சமூகவியல் பார்வையுடன் உருவக உவமை நலங்கள் செழிக்க இவ்வாறு பாடுவதில் சிறந்து நிற்கும் மு. மேத்தாவின் "கண்ணீர்ப் பூக்கள்" என்ற தொகுப்பிலேயே இப்புதுக்கவிதை உள்ளது. வழிவழியாக வரும் தமிழ்க் கவிதையின் யாப்பையும் பொருளையும் முறையாகப் படித்துத் தேறிய இவர் புதுக்கவிதைகளில் அப்படியே பழைய யாப்பு இல்லைதான்; ஆனால், யாப்பின் அடிப்படையான எதுகை, மோனை முதலியவை முற்றாக இல்லையென்று கூறிவிட முடியாது. பழைய யாப்பில் அமைந்த பாடல்கள் போலவே சில தோற்றம் தருகின்றன. "பாரதி பதித்த சுவடு" முதலிய சில கவிதைகள் இவ்வாறு அமைந்தவை. இக்கவிதைகளில் பொருளடக்கம் பழைய பாதையில் செல்வதுபோல, யாப்பும் பழைய பாதையிலேயே செல்கிறது. இத்தகைய சில கவிதைகளும் இத்தொகுதியில் இருக்கத்தான் செய்கின்றன.

எனினும், எதையும் தமக்கே உரிய தனித்த பார்வையுடன் பார்த்து, ஒன்றிரண்டு சொற்களிலேயே உருவக அழுத்தத்துடனும் உணர்ச்சிச் சாயல்களுடனும் உணர்த்தும் புதுக்கவிதைகளே பெரும்பான்மையானவை. தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி, கலைந்த கனவுகள், செருப்புடன் ஒரு பேட்டி ஆகிய மூன்று புதுக்கவிதைகளும் இத்தொகுதிக்கே முடிமணிகளாகத் திகழ்கின்றன எனலாம்.

"தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி" என்ற புதுக்கவிதையின் மூலம் கவிஞர் மேத்தா கொட்டியிருக்கும் உணர்ச்சிகளும், எழுப்பியிருக்கும் சிந்தனைகளும், சோதித்துப் பார்த்திருக்கும் வார்த்தைச் சேர்க்கைகளும் அற்புதமானவை. கடந்த கால் நூற்றாண்டில் காந்தியடிகளைப் பற்றி இத்தகைய ஒரு கவிதை பிறந்திருக்குமா என்பது சந்தேகத்திற்கு உரியதுதான்.

"உன்னுடைய படங்கள்
ஊர்வலம் போகின்றன
நீயேன்
தலைகுனிந்தபடி
நடுத்தெருவில்
நிற்கிறாய்!"

என்று சாதாரண உணர்ச்சி நிலையில் கவிதை தொடங்குகிறது. தொடர்ந்து,

"தேசப் படத்திலுள்ள
கோடுகள்
விடுதலைக்குப் போராடிய
வீரத் தியாகிகளின்
விலா எலும்புக் கூடுகள்
அழிக்க முடியாத
கல்லெறி படாத
அந்த நினைவுச் சின்னத்தின்
மூலமே
அவர்களுக்கு நாங்கள்
அஞ்சலி செலுத்தி விடுகிறோம்"

என்று விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி

கண்ணீர்க் கடலில்
கலங்கள் மூழ்கிய பிறகு
அடைக்கலம் தேடிய
ஆபுத்திரனே!
அமுத சுரபியைத்தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம்!

....

சேரிகளில் மட்டுமே நீ
யாத்திரை செய்வாய்
என்பதைத்
தெரிந்து கொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
தேசத்தையே
சேரியாக மாற்றிவிட்டார்கள்"

என்று காந்தியடிகளையொட்டி. அவர் வளர்த்துச் செல்லும் உணர்ச்சி வேகம் மிக எளிதாக வாசகர்களை எட்டக் கூடியது. அவருடைய வார்த்தைகளிலேயே கூறினால் இக்கவிதையை "வார்த்தைத் தவம்" என்றே கூறிவிடலாம்.

இதே போல் அமைந்த மற்றொரு புதுக்கவிதை "செருப்புடன் ஒரு பேட்டி" ஆகும். "பிரமுகர் வீட்டுச் செருப்புக்குக் கூடப் பேட்டியளிக்கும் தகுதிகள் உண்டு" என்ற குறிப்புடன் தொடங்கும் இப்புதுக்கவிதை சுவையான ஒரு பேட்டியை வழங்குகிறது. "உங்கள் இனத்தைப் பற்றி நீயே ஏதேனும் உரைக்க முடியுமா?" என்பது முதல் கேள்வி.


"உழைப்பதற் காகவே விலைக்கு வாங்கப்படும்
அடிமைகள் நாங்கள்! மனிதரின்
பாதங்களுக்குப் பயண வாகனங்கள்"

-டாக்டர் இரா. தண்டாயுதம்-

என்று செருப்பு அதற்குப் பதில் தருகிறது. பேட்டி தொடர்கிறது. "பழசாகிப் போனுலுதனும் காரணம் காட்டி உங்களை நாங்கள் ஒதுக்கி விடும் போது..." என்பது இடையில் ஒரு கேள்வி.

"உங்களால் ஒதுக்கப்பட்டவர்
எங்களை
உபயோகித்துக் கொள்வர்!"

—இது செருப்பின் பதில். எவ்வளவு ஆழ்ந்த பொருள்? "தீவிரமாக எதைப் பற்றியாவது நீங்கள் சிந்திப்பதுண்டா?" என்று இறுதிக் கேள்வி கேட்கப்படுகிறது.



"உண்டு.
சில தேசங்களையும்
சில ஆட்சிகளையும்
பார்க்கும் போது
மீண்டும் நாங்களே
சிம்மாசனம்
ஏறி விடலாமா
என்று
யோசிப்பதுண்டு!"

என்று செருப்பு தன் பேட்டியை முடித்துக் கொள்கிறது. வடிவம் புதியதானுலும், உணர்த்தலில் ஒரு புதிய அழுத்தத்தை இப்புதுக்கவிதையில் பார்க்கிறோம்.

சாதாரண பொருள்களும் கூட மு. மேத்தாவின் கற்பனை வளத்தால் அழகு பெற்று விடுகின்றன. "ஒரு கடிதம் அனுதையாகிவிட்டது." என்றொரு கவிதை. முகவரி சரியில்லாததால், அனுப்பிய முகவரியும் இல்லாததால் பல இடங்கள் சுற்றி, அஞ்சலக . ஆராய்ச்சிக்குப் சென்று விடுகிறது. உடைத்துப் பார்க்கின்றனர். அதில் ஒருத்தி தன் காதலனுக்கு "ஒரு வாரத்தில் சந்திக்காவிட்டால், கல்லறையில் தன்னைச் சந்திக்கலாம்" என்று, எழுதியிருக்கிருள். "ஒரு கடிதம் அனுதையாகி விட்ட" கவிதை முடிகிறது. இம்முறையில் அமைந்த மற்றொன்று "என் முதற் காதல்!"

"முகவரி
சரியாக எழுதப்படாத
ஒரு கடிதம்
எங்கெங்கோ சென்று
முட்டிமோதி அலைந்துவிட்டு
என்னிடமே திரும்பிவிட்டது"

என்ற வரிகள், தலைப்புடன் சேர்ந்து ஒரு காதல் தோல்வியனுபவத்தையே சோகரேகைகளுடன் உணர்த்தி விடுகின்றன.

மு. மேத்தாவின் கண்ணீர்ப் பூக்களில் பல வளமான மண்ணில் மலர்ந்தவை; சில வளமில்லாத மண்ணில் - மழையும் பெய்யாத காலத்தில் - மலர்ந்தவை. எனினும் மலர்கள் என்பதில் குறையில்லை. இம்மலர்களை என்ன பெயர் சொல்லி வேண்டுமானுலும் அழைக்கட்டும். மலர் மலர் தானே? முல்லையை வேறு எப்பெயரால் அழைத்தாலும். அது தன் இயல்பிலிருந்து மாறுபட்டு விடுவதில்லை,

---

தண்ணீர் வைத்தியம்

உங்கள் இடுப்பைச் சுற்றி இருக்கும் ஊளைச் சதையை அகற்ற வேண்டுமா? குளிர்ந்த நீரை இடுப்பிலிருந்து கால்வரை மேலும் கீழுமாகப் பாய்ச்சுங்கள்.

தலைவலியாக இருந்தால் வெறுங்காலுடன் .குளிர்ந்த நீரில் நடந்து பாருங்கள். தலைவலி பறந்து விடும்.

"நவீன மருந்துகள், வைத்திய முறைகளை விட இவைபோன்ற இயற்கையான மருத்துவ முறைகள் சிரமமில்லாதவை; நல்ல பலனையும் தருபவை". என்கின்றனர் மேல் நாட்டு மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

பிரிட்டனிலும்,ஜெர்மனியிலும் "ஹைட்ரோ தெரபி" எனப்படும் தண்ணீர் வைத்தியத்தை ஆய்ந்து வரும் மருத்துவர்கள் கண்டுபிடித்த சில வைத்திய முறைகளும், சிலர் எழுதிய "தண்ணீர் வைத்தியம்" பற்றிய நூற்குறிப்புக்களும் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

வெறுங்காலுடன் ஈரமான புல் தரையில் பதினைந்திலிருந்து நாற்பத்தைந்து நிமிடம் வரை நடப்பதும், ஈரமான கற்களின் மேல் மூன்றிலிருந்து பதினைந்து நிமிடம் வரை நடப்பதும்,குளிர்ந்த நீர்ப்படுகையில் கணுக்காலிலிருந்து ஆரம்பித்து முழங்கால் வரை நடப்பதும் உடலாரோக்கியத்திற்கு நல்லதென "ஃபாதர் க்னிப்" என்பவர் தமது "எனது தண்ணீர் வைத்தியம்" என்ற நூலில் குறிப்பிடுகிருர்.

பிரான்ஸில் தண்ணீர் வைத்திய முறைப்படி பெண்கள் தங்கள் உடலின் வேண்டாத கொழுப்புச் சதைகளைக் குறைத்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு நாள் காலையில் இடுப்பைச் சுற்றிலும், காலைச் சுற்றிலும், நான்கு முறை குளிர்ந்த நீரைப் பாய்ச்சியபின் அவர்களது உடல் துணிகளால் இறுக்கமாகச் சுற்றப்படுகிறது. அதன்பின் வெப்பமான படுக்கையில் ஒரு மணி நேரம் அவர்களைப் படுக்க வைப்பதன் மூலம் மருத்துவர்கள் இச்சிகிச்சையில் வெற்றி கண்டுள்ளனர்.

கால்களைக் குளிர்ந்த நீரில் குளிப்பாட்டுவதால் நல்ல, சுகமான தூக்கத்தைப் பெறலாம்.





இரத்த அழுத்த நோய்க்கான சிகிச்சை, பாதங்களையும், கரங்களையும், இடுப்பின் கீழ்ப் பகுதியையும் குளிர்ந்த நீரில் முப்பது நிமிடங்கள் வைத்திருப்பதாகும். அந்தக் குளிர்ந்த நீரின் வெப்பத்தை மூன்று டிகிரி சென்டி கிரேட்டிலிருந்து ஐந்தரை டிகிரி சென்டிகிரேட் வரை அதிகரிக்க வேண்டும். பின் அந்த நோயாளி படுக்கையில் படுத்தபடி. ஒருமணி நேரமோ இரண்டு மணி நேரமோ ஓய்வெடுக்க வேண்டும்.

ஜனவரி 26 முதல்
பிப்ரவரி 10 வரை

15 நாள் பலன்

கும்பம் (ஜன 20 — பிப் 18)

உறவினர்களைப் பற்றிய கசப்பான உண்மைகள் தெரிய வரும். தொழில் முயற்சி வெற்றி நடைபோடும். பெரியோர்களின் ஆலோசனையைச் செவிமடுப்பது நல்லது. உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. 6,7-ஆம் தேதிகளில் செய்யும் வேலைகள் நன்மை தரும்.

மீனம் (பிப் 9- மார்ச்சு 20)

செய்தொழில் சங்கடங்கள் ஏற்படலாம். பொதுக் காரியங்கள் மகிழ்ச்சியைத் தரும். அரைகுறையாக நிற்கும் வேலைகள் முழுமை பெற வாய்ப்பு உண்டு. கூட்டுத் தொழில் முயற்சிகள் பலன் தரும். வாகனப் போக்குவரத்தைத் தவிர்ப்பது நல்லது. சக ஊழியர்களிடம் பாதிக்கலாம்.

மேஷம் (மார்ச்சு 21 - எப். 20)

பொருளாதாரப் பேச்சு வார்த்தைகள் நன்மை தரும். இது தவிர மற்ற முயற்சி எதுவாயினும் அதனை ஒத்தி வைப்பது நல்லது. நண்பர்களுக்குப் பண உதவி செய்ய நேரலாம். செய்தொழிலில் மேன்மை கிட்டும் பெரியோர்களின் உதவி கிடைக்கும். கவலை தரும்படி கடித மூலம் தகவல் வர வாய்ப்புண்டு.



நண்பர்: "எனக்குப் பசியே எடுப்பதில்லை!"

மற்றொருவர்: "ஏன்?"

நண்பர்: "பசி எடுக்க நான் விடுவதில்லை"

ரிஷபம் (ஏப் 21 - மே 20)

சமூகத் தலைவர்கள் போன்றவர்களிடம் முடிந்தவரைக்கும் கலந்து பழகுங்கள். புகழும் பொருளும் பெருகும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. தொலைதூரத்திலிருந்து வரும் உறவினர்களால் பணம் கிடைக்க வாய்ப்புண்டு. குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்படலாம். பொறுமை அவசியம்.

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

வழக்கமான பணிகள் தடையின்றி கிடைக்கும். எனினும் பண விஷயத்தில் விஷப் பரீட்சை வேண்டாம். எதிலும் கையெழுத்திடுவதில் கவனம் தேவை. சிலருக்கு வீடு வண்டி போன்ற சொத்துக்கள் சேரும். எழுத்தாளர்களுக்கு கற்பனை யோக காலம். எழுத்துக்கள் பாராட்டையும் பரிசையும் பெறும்.

கடகம் (ஜூன் 21- ஜூலை 20)

காதல் விவகாரங்கள் வெற்றி தரும். குடும்பஸ்தர்களுக்கு வீட்டில் தலையிடி ஏற்படலாம். 26,27-ஆம் நாட்களில் எதில் ஈடுபட்டாலும் நன்மை ஏற்படும். பொருள் வரவுக்கு வழியுண்டு. உணர்ச்சி வசப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். பெரியோர்களின் ஆதரவு கிட்டும்.

சிம்மம் (ஜூலை 21 - ஆக.21)

வியாபாரம் சம்பந்தப்பட்ட பெரிய மனிதர்களிடம் கலந்து பழகும் சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் தங்கள் யோசனைக்கு நல்ல வரவேற்பு கிட்டும். திருமணமாகாதவர்களுக்குத் திருமண முயற்சிகள் சித்திக்கும். வீண் வாக்குவாதங்களைத் தவிருங்கள்.

கன்னி (ஆக 22 - செப் 22)

26, 27-ஆம் தேதிகள் புதிய திட்டங்களைத் துவக்குவதற்கு நல்ல நாட்கள். மற்ற நாட்களில் குடும்பத்தில் சிக்கல்கள் தோன்றலாம். எதிலும் தடங்கல் ஏற்படும் சாத்தியமுண்டு. உடலாரோக்கியத்தில் கவனம் தேவை பெரியோர்களிடம் மட்டுமல்ல யாரிடமும் மிகவும் நிதானமாக உரையாடுங்கள்.

துலாம் (செப் 23-அக் 22)

எதிர்பார்த்தபடி நண்பர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிட்டும். பொருளாதாரத்தில் தற்காலிகமான சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு. தொலைதூரத்திலிருந்து ஏமாற்றம் தரும் செய்தியை எதிர்நோக்க வேண்டியிருக்கும். உங்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய சம்பவங்கள் நிகழலாம். பொறுமையாக இருந்து சமாளியுங்கள்.

விருச்சிகம் (அக் 23-நவ 22)

உள்ளூர்ப் பயணங்கள் லாபகரமானதாக அமையும். பெரியோர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே கிடைக்கும். செய்தொழிலோ, வியாபாரத்திலோ மேன்மை உண்டாகும். சில பிரச்சினைகளில் முடிவு காண அவசரம் வேண்டாம். பொறுத்திருங்கள். முடிவு உங்களுக்கு சாதகமாகவே அமையும்.

தனுசு (நவ 23 - டிச. 20)

காதில் விழுந்தவையெல்லாம் உண்மை என்று நம்பிவிட வேண்டாம். வியாபாரத்தொடர்புக்கு ஏற்ற சமயம் இது என்றாலும் செலவும் ஏற்படும். 31ஆம் தேதி முக்கியச் செய்தி வரும். பந்தயம், ரேஸ் போன்றவற்றில் ஈடுபாடுடையவர்களுக்குப் பாதகமே விளையும்.

மகரம் (டிச 21- ஜன 19)

நண்பர்களிடமிருந்து முக்கிய அல்லது வியக்கத்தக்க செய்திகள் கிடைக்கும். 29ஆம் தேதி கூட்டுத் தொழில், வெளியூர்ப்பயணம் போன்றவற்றுக்குத் திட்டமிட நல்ல நாள். நண்பர்களும், உறவினர்களும் உங்களுக்குத் தலைவலியைக் கொடுப்பார்கள். செய்தொழிலில் கவனம் தேவை. அதில் தகராறுகள் ஏற்படும் சாத்தியம் உண்டு.

-துரைசை நகுலன்

ம-இ-கா- கலாச்சாரவிழா



சூரியபிரபா-நிர்மலாதேவி நடனம் ஆடுகின்றனர்

நமது ம. இ. கா. வின் கவனம் அரசியலில் மட்டுமல்லாது இந்தியக் கலாசாரத்தின் பக்கமும் திரும்பியுள்ளது என்பதை அண்மையில் தலைநகர் நகர மண்டபத்தில் நடந்தேறிய ம. இ. கா. கலாச்சார விழா நிரூபித்தது.

தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் முதன் முறையாக இக்கலாசாரக் குழுவினர் அறிவித்த தமிழ் நூல்களுக்கான போட்டியில் முதல் பரிசான $1,001ஐ நா. ஆ. செங்குட்டுவனின் நூலும், இரண்டாம் பரிசான $501ஐ கவிஞர் முரசு நெடுமாறன் நூலும் பெற்றன.

கடந்த ஜனவரி 13,14,15 தேதிகளில் நடந்த இவ்விழாவினை ம. இ. கா. வின் தேசியத் தலைவர் மாண்புமிகு டான்ஸ்ரீ டத்தோ மாணிக்கவாசகம் தொடக்கி வைக்க, ம. இ. கா. வின் தேசியத்துணைத் தலைவர் மாண்புமிகு எஸ். சாமிவேலு முடித்து வைத்தார்.

முடித்து வைத்துப் பேசுகையில், திரு. சாமிவேலு, நாடெங்கிலுமிருந்து பல கலைஞர்கள் படைத்த நிகழ்ச்சிகளுள் ம. இ. கா. சாமி ரோட் கிளையினர் படைத்த கோலாட்டத்தையே சிறந்ததாகத் தாம் நினைப்பதாகக் கூறி, அக் கோலாட்டத்தில் பங்கு பெற்ற பெண்களுக்கு ஆளுக்கொரு சேலை பரிசளிப்பதாக அறிவித்தார்.

மேலும் அந்தந்த மாநிலக் கலாசாரக் குழுவினர்க்குத் தலா ஐம்பது வெள்ளி வீதம் வழங்குவதாகவும், தொழிலாளர் மேம்பாட்டுக் கூட்டுறவுக் கழகத்தின் சார்பில் ஆண்டுக்கொரு கவிஞர் வரிசையில் முதன் முறையாகக் கவிஞர் காரைக்கிழாருக்கு $1,001 வழங்குவதாகவும் அறிவித்தார்.

மணற்கேணி

இவ்வாண்டு எஸ். ஆர். பி., எஸ். பி. எம். / எம். சி. இ., எஸ். டி. பி. / எச். எஸ். சி. தேர்வு எழுதவிருக்கும் மாணவ மாணவியர். மலேசிய மொழியில் சிறப்பான தேர்ச்சிபெறும் பொருட்டு மணற்கேணி என்னும் பகுதி 25-2-1978 இதழிலிருந்து துவங்குகிறது.

குறிப்பாக மேற்குறித்த தேர்வுகளின் மலேசிய மொழிப் பாடம் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கும், பொதுவாக மலேசிய மொழி தொடர்பான எல்லா விதக் கேள்விகளுக்கும் இப்பகுதியில் பதில் அளிக்கப்படும்.

மாணவர்கள் தங்கள் கேள்விகளைத் தமிழிலோ, மலேசிய மொழியிலோ எழுதியனுப்பலாம். உறையின் இடப்பக்க மூலையில் மணற்கேணி எனக் குறிப்பிட்டுக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆசிரியர்,
புதிய சமுதாயம்,
அஞ்சல் பெட்டி எண்: 2066,
கோலாலம்பூர்.

பழையதும் புதியதும்

அன்று நான் புதிய சமுதாயத்தின் புதிய இதழை வாங்குவதற்காக ஒரு இந்தியரின் கடைக்குள் நுழைந்தேன். "புதிய சமுதாயம் வந்திருக்காங்க" என்று கேட்டேன். "இன்னும் வரல" என்ற அவர் ஏற்கனவே தன்னிடம் உள்ள ஓர் இதழை எடுத்துக் காட்டி "பழைய சமுதாயம் இருக்கு வாங்கிக்கிறீங்களா?" என்று நகைச் சுவையுடன் கேட்டார். அதற்கு நான் எனக்குப் "பழைய சமுதாயம்" வேண்டாம். "புதிய சமுதாயம்" தான் வேண்டும் என்று சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

—கே. கோவிந்தன்,
சங்காட் லாரா, தைப்பிங்.



நகைச்சுவை மன்னனின் சகாப்தம்

லண்டனில் ஓர் ஏழைக் குடும்பத்தில் நாடக நடிகர்களுக்கு மகனாகப் பிறந்த அந்தப் பையன், பிற்காலத்தில் தன் நகைச்சுவையால் உலகத்தையே வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த கோடீஸ்வர நடிகன், சார்லி சாப்ளின் ஆவான்.

ஒரு தொப்பி; குட்டையான தடித்த மீசை; தொள தொளப்பான உடைகள்; காலுக்குப் பெரிய அளவிலான சப்பாத்துக்கள்; கையில் ஒரு மூங்கில் பிரம்பு. இவற்றைக் கூறினாலே ஒருவரது நினைவுக்கு வரும் உருவம் நிச்சயமாக சார்லி சாப்ளினாகத் தான் இருக்கும்

"மக்களை மகிழ்விப்பதையே எல்லாவற்றுக்கும் மேலாக நான் விரும்புகிறேன்" என்று சார்லி சாப்ளின் ஒருமுறை கூறினார். அவர் விரும்பியதைத் திரைப்படங்களின் வழி வெற்றிகரமாகச் சாதிக்கவும் செய்தார்

உலகப் புகழ்பெற்ற இந்த நகைச்சுவை மன்னனின் சரித்திரம் 1889-ஆம் ஆண்டில் தொடங்குகிறது. அந்த ஆண்டில் ஏப்ரல் 16-ஆம் நாள்தான் சார்ல்ஸ் ஸ்பென்சர் சாப்ளின் லண்டனில் ஏழைகள் வாழும் அழுக்கடைந்த ஒரு சதுக்கத்தில் பிறந்தார். லிலி ஹார்லி என்ற நாடக மேடைக்குரிய புனை பெயர் கொண்ட சார்லி சாப்ளினின் தந்தையார் ஒரு நாடக நடிகர். தாயாரும் ஒரு நடிகை. கலைக் குடும்பத்தில் பிறந்த சாப்ளினிடத்தில் கலையும் கூடவே பிறந்ததில் ஆச்சரியமில்லையே!

சார்லி சாப்ளினின் தந்தை ஒரு மோசமான குடிகாரர். இதனால்தானோ என்னவோ சாப்ளின் பிறந்தவுடனேயே அவருடைய பெற்றோர்களுக்குள் விவாகரத்து ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் சாப்ளினின் தாயார் ஹான்னா, தன் சொந்தக் காலில் நிற்கக்கூடிய தகுதியைப் பெற்றிருந்தார். சாப்ளினையும், சாப்ளினை விட நான்கு வயது மூத்தவரான அவருடைய அண்ணனையும் ஹான்னாதான் நாடகங்களில் நடித்துக் காப்பாற்றினார்.

நாளாக நாளாக நாடகங்களில் நடிக்க, ஹான்னாவிற்கு அவரது குரல் பெரும் இடையூறாக இருந்தது. அதுவே சார்லி சாப்ளின் மேடையேறுவதற்கும் காரணமாய் அமைந்தது.

முதல் மேடையேற்றம்

அந்த நிகழ்ச்சியை சார்லி சாப்ளினே ஒருமுறை இப்படி விவரித்தார்: "அப்போது எனக்கு வயது ஐந்துதான். அம்மா நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தார். நான் மேடை ஓரமாக இருந்தேன். சட்டென்று அம்மாவின் குரலில் கொய்வு ஏற்பட்டுத் தொடர்ந்து ரசிகர்கள் கேட்க முடியாத அளவுக்குக் குரல் கம்மிவிட்டது. ரசிகர்கள் ஊளையிடத் தொடங்கி விட்டார்கள். அம்மாவுக்கு மிகவும் அவமானமாகி மேடையை விட்டே வெளியேறும் கட்டாயம் ஏற்பட்டு விட்டது. அந்தக் குழப்பமான சூழ்நிலையில் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அம்மா நாடக மானேஜரோடு சண்டை போடத் துவங்கி விட்டார். அந்த நேரத்தில் என்னைக் கண்ட மானேஜர் ரசிகர்களின் கூச்சலை அடக்க என்னை மேடைக்கு அனுப்பினார். நானும் தைரியமாக ரசிகர்களின் முன் வந்து அம்மாவின் குரல் கம்மியதையும் அப்படியே செய்து காட்டினேன். ரசிகர்கள் மத்தியில் ஒரே சிரிப்பு! கும்மாளம்! பலத்த கைதட்டல்கள்!"

அதுதான் சார்லி சாப்ளினின் முதல் மேடையேற்றம். அதன்பின் அவருக்கு வேறு வாய்ப்புக்களும் கிடைக்கவில்லை. ஹான்னாவின் செல்வமும் நாளடைவில் கரைந்தது. வேறு வழியின்றி அவர் தமது இரண்டு புதல்வர்களோடு ஓர் ஏழைகள் விடுதியில் சேர்ந்தார். தொடர்ந்து சார்லி சாப்ளினின் வாழ்க்கை பல ஏழை விடுதிகளில் கழிந்தது. பல வேலைகளுக்கு இடையில் விடாப்பிடியாக நாடகத் திரையரங்குகளில் வாய்ப்புக் கேட்டு அலைந்து வந்தார்.

அவரது பன்னிரண்டாவது

வயதில் அவரது விடாமுயற்சிக்குத் தக்க பரிசாக நாடகம் ஒன்றில் சிறிய வேஷம் கிடைத்தது. "ஷெர்லாக் ஹோம்ஸ்" என்ற அந்த நாடகத்தில் "பில்லி" என்னும் பாத்திரத்தை ஏற்ற அவர் ரசிகர்களின் கவனத்தை முதல் நாடகத்திலேயே ஈர்த்து விட்டார்.

தொடர்ந்து கிடைத்த வாய்ப்புகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்ட அவர் எதிர்காலத்தில் ஒரு நகைச்சுவை நடிகனாக வளர ஆர்வம் கொண்டார். அவரது திறமை அவருக்கு "பிரெட் கார்னோ" கம்பெனியில் ஒரு வேலையை வாங்கித் தந்தது.

அந்தக் கம்பெனிதான் சார்லி சாப்ளினுடைய நடிப்பின் பயிற்சிப் பள்ளியாக அமைந்தது. அங்குதான் அவர் தனது தொழிலின் முக்கியப் பாடங்களையும், ரசிகர்களைச் சிரிக்க வைக்கும் முறைகளையும் தெளிவாகக் கற்றுக்கொண்டார்.

1913-இல் "மேக்சென்னட்" என்னும் நகைச்சுவைப் படத் தயாரிப்பாளர் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சார்லி சாப்ளினை வாரம் 150 அமெரிக்க வெள்ளி சம்பளத்திற்கு ஒப்பந்தம் செய்தார். தயாரிப்பாளர் சென்னட்டோடு இருந்த காலத்தில் சாப்ளின் 35 படங்களில் நடித்தார். இதில், திரைப்படத் துறையின் முதல் முழுநீள நகைச்சுவைப் படமான "டில்லிஸ் பங்சர்ட் ரோமான்ஸ்" என்னும் படமும் அடங்கும்.

இந்தச் சமயத்தில்தான் சார்லி சாப்ளின் தனக்கென ஒரு நடிப்புப் பாணியையும் தோற்றத்தையும் உருவாக்கிக் கொண்டார். தனது நடிப்புத் திறமையைக் காட்டிய அவர் பின்னர் வாரம் 1,250 அமெரிக்க வெள்ளி சம்பளத்தில் "எஸ்ஸினே" என்னும் கம்பெனியில் சேர்ந்தார்.

அதிக சம்பளம்

1915-ஆம் ஆண்டில் அவரது "தெ ட்ராம்ப்" என்ற முதல் பாராட்டுக்குரிய படம் வெளிவந்தது. முதன் முதலாகச் சோக ரசத்தை அவர் இழையோட விட்டதும் அப்படத்தில்தான். ஒரு நாடோடிக்கும் ஒரு விவசாயியின் மகளுக்கும் இடையிலான நெருக்கத்தைக் காட்டும் திரைப்படம் அது. விவசாயியின் மகளைத் திருடர்களிடம் இருந்து காப்பாற்றும் நாடோடியாக சார்லி சாப்ளின் நடித்தார்.

"எஸ்ஸினே" கம்பெனியை விட்டு விலகியதும் ஆண்டுக்கு 670,000 அமெரிக்க வெள்ளி ஊதியத்தில் "மூச்சுவல்" கம்பெனியில் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது இருபத்தாறுதான். அந்த நேரத்தில் உலகத்திலேயே அதிக ஊதியம் பெறும் நடிகராக இருந்தவரும் அவர்தான்!

பணம் நிறையச் சேரவே வாழ்க்கையிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனாலும் அவரது நடிப்பிலோ, அவரோடு ஒட்டிப்பிறந்த கலைத் திறமையிலோ மாற்றம் ஏற்படவில்லை. "நான் பணம் சம்பாதிக்கவே இத்தொழிலில் நுழைந்தேன். அதே சமயம் என்னுள்ளிருந்த கலையும் வெளிப்பட்டது" என்று அவர் ஒருமுறை கூறினார்.

அவர் பணத்துக்காக நடித்தாலும் தனது படங்களைக் கலை நயத்தோடு, ஒழுங்கான முறையில் எடுக்க, சிரத்தையோடு முயன்றார். 1917-இல் "தெ இம்மிக்ரெண்ட்" என்னும் 1,809 அடி நீளப் படத்தை எடுக்க அவர் 90,000 அடி நீளம் வரை படம் பிடித்தது இதற்கோர் உதாரணம் ஆகும்.

மூச்சுவல் கம்பெனியின் ஒப்பந்தம் முடிந்ததும் 1917-இல் அவர் "ஃபர்ஸ்ட் நேஷனல்" கம்பெனியினரால் ஒப்பந்தம் செய்யப்பட்டார். பதினெட்டு மாத காலத்தில் எட்டுப் படங்களில் நடிக்க அவருக்கு அந்தக் கம்பெனி பத்து லட்சம் அமெரிக்க வெள்ளி கொடுத்தது. அந்தக் காலத்தில் நடிகர்களால் நினைத்துக்கூட பார்க்கமுடியாத பெரிய தொகை அது.

அந்தக் கம்பெனியில் அவர் நடித்த படங்களுள் "எ டோக்ஸ் லைஃப்", "ஷோல்டர் ஆர்ம்ஸ்", "தெ கிட்" ஆகிய புகழ்பெற்ற திரைக்காவியங்களும் அடங்கும்.

இதற்கிடையில் சார்லி சாப்ளின் உலகப் புகழ் பெற்றுவிட்டார். மூலை முடுக்குகளிலெல்லாம் அவர் பெயர் ஒலிக்கத் தொடங்கியது. "இயேசுநாதரைப் பற்றித் தெரியாதவர்களுக்கெல்லாம் என்னைப் பற்றித் தெரிந்திருக்கிறது" என்று அவரே ஒருமுறை பெருமையாகக் கூறியுள்ளார்.

திருமணங்கள்

திரைப்படங்களில் நடிக்கும் சமயத்தில் பல பெண்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தும், யாருடைய வலையிலும் சிக்காமல் இருந்த சார்லி சாப்ளின் முதன் முதலாக 1918-ஆம் ஆண்டில் தனது 29-ஆவது வயதில், 15 வயதுடைய மில்ட்ரட் ஹேரிஸ் என்ற பெண்ணை மணந்தார். ஆனாலும் திருமண வாழ்க்கை நீடிக்கவில்லை. இரண்டு வருடங்களுக்குள் அவர்கள் விவாகரத்து செய்துகொண்டனர்.

> "எவன் தன் கால் சட்டையைக் கீழே படும் வண்ணம் பெருமையாக இழுத்துச் செல்கின்றானோ அவன் பக்கம் மறுமைநாளில் அல்லாஹ் (ஏறிட்டும்)பார்க்க மாட்டான்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்."
>
> –அல்ஹதீஸ்

அதன்பின் நான்கு வருடங்கள் கழித்து லோலிதா மேக்முரி என்ற 16 வயதுப்பெண்ணை மணந்தார். இவர்களுக்கு சார்ல்ஸ் ஜூனியர், சிட்னி என்ற இரு பிள்ளைகள் பிறந்தனர். ஆனாலும் 1927ஆம் ஆண்டில் இவர்களும் விவாகரத்து பெற்றனர்.

சார்லி சாப்ளினின் மூன்றாவது மனைவி பாவ்லின் லெவி என்ற நடிகை ஆவார். 1936இல் மணந்த இவர்கள் 1942இல் விவாகரத்து செய்து கொண்டனர்.

இடையே 1941இல் சார்லி சாப்ளின் 21 வயதான ஜோன் பெர்ரி என்ற நடிகையைச் சந்தித்து நட்பு கொண்டார். கொஞ்ச காலத்திற்குப் பின்னால் இந்த நடிகை, தனது குழந்தைக்கு சார்லி சாப்ளின்தான் தந்தை என்று குற்றஞ்சாட்டி வழக்குத் தொடுத்தார். சார்லி சாப்ளின் பெயர் மீண்டும் ஒருமுறை பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளில் பலமாக அடிபட்டது.

நகரத்தை விட்டு ஒதுக்குப்புறமான இடத்திற்கு, கவறான நோக்கோடு ஜோன் பெர்ரியை அழைத்துச் சென்றார் என்று சார்லி சாப்ளினை நீதிமன்றத்திற்கு இழுத்த அந்த வழக்கு, இறுதியில் தோல்வியுற்றது. சார்லி சாப்ளின் அந்தப் பெண்ணிடம் இருந்து தப்பித்தார்.

ஆனாலும் அந்தக் குழந்தையை ஆதரிக்கும் பொறுப்பை நீதிமன்ற உத்தரவுப்படி சார்லி சாப்ளின் ஏற்றுக்கொள்ள நேரிட்டது.

சார்லி சாப்ளினின் பிற

காலப் படங்கள் "யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்ஸ்" என்ற கம்பெனியின் சார்பில் எடுக்கப்பட்டன. இந்தக் கம்பெனி அவரும், மேரி பிக்ஃபோர்ட், டக்ளஸ் ஃபேர் பேங்க்ஸ், டேவிட் வார்க் ஆகிய மூன்று ஹாலிவுட் நண்பர்களும் சேர்ந்து 1919-இல் தோற்றுவித்த கம்பெனியாகும்.

இதற்குள் சாப்ளின் உலகின் தலைசிறந்த நகைச்சுவை நடிகராக, தயாரிப்பாளராக, டைரக்டராக, ஸ்டுடியோ அதிபராக வளர்ந்திருந்தார். அவரது வளர்ச்சி மதிக்கத்தக்க, போற்றத்தக்கதொரு வளர்ச்சி. காரணம் அது ஓர் ஏழையின் வளர்ச்சி.

சார்லி சாப்ளினும் அவரது படங்களும் பெற்ற புகழ் காலத்தால் அழியாதது. நியூயார்க்கிலிருந்த ஒரு தியேட்டர் 1914ஆம் ஆண்டிலிருந்து 1923ஆம் ஆண்டு வரை சார்லி சாப்ளினின் படங்களையே தொடர்ந்து திரையிட்டு வந்தது. அதிலும் அந்தத் தியேட்டர் தீப்பிடித்து எரிந்த காரணத்தினாலேயே அவரது படங்களை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இன்று திரையிடும்போதுகூட வசூலை அள்ளிக் குவிக்கும் திரைப் பொக்கிஷங்களாக அவரது படங்கள் திகழ்கின்றன. அண்மையில் மலேசியத் தலைநகரில் ஓடியன் திரையரங்கில் திரையேறிய "தெ கிட்" என்னும் அவரது படம் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் 1918இல் வெளிவந்த படம் என்பதும் இங்கே அது வெற்றி ஓட்டம் கண்டது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

முதலாம் உலகப் போரின் போது சார்லி சாப்ளின் அமெரிக்க நகரங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது அவருக்குப் பெரும் வரவேற்பு நல்கப்பட்டது. நியூயார்க்கில் 30,000 பேரும், வாஷிங்டனில் 65,000 பேரும், நியூ ஆர்லியன்ஸில் 40,000 பேரும் அவரை வரவேற்கத் திரண்டனர்.

அவரது படங்கள் அவரை விட மேலான சிறப்பையும், வரவேற்பையும் பெற்றன என்றால் மிகையாகாது. "தெ கிட்" என்ற அவரது படத்தின் முதல் நாள் திரையீட்டின் போது, லண்டன், பாரீஸ் போன்ற நகரங்களில் பொது விடுமுறை விடப்பட்டன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அவரது புகழுக்கு அணி செய்வதுபோல் 1975-ஆம் ஆண்டில் எலிசபெத் மகாராணி அவருக்கு மிக உயரிய விருதான "சர்" (Sir) என்னும் பட்டத்தை அளித்தார்.


திரைப்பட ரசிக நெஞ்சங்களில் இறுதிவரை இடம் பெற்றிருந்த சார்லிசாப்ளின் கடந்த 25-12-77 கிறிஸ்மஸ் தினத்தன்று காலை நான்கு மணிக்கு வயோதிகத்தால், அமைதியான முறையில் தமது 88வது வயதில் மரணமடைந்தார். ஸ்விட்ஸர்லாந்தில் "மானோய் டி பான்" என்ற தனது மாளிகையில் அவர் இறக்கும்போது, 51 வயதுடைய அவரது நாலாவது மனைவியும், ஒன்பது பிள்ளைகளில் எட்டுப்பேரும், பத்துப் பேரப் பிள்ளைகளும் உடனிருந்தனர்.

அவரது பூதவுடல் மறைந்து விட்டாலும், அவரின் போற்றுதலுக்குரிய திரைப்படங்கள் என்றென்றும் நிலைத்து நின்று சார்லி சாப்ளினின் புகழ்மணம் பரப்பும் என்பது உறுதி.

தொகுப்பு:

—இரா. முத்தரசன்.

அனுராமலிங்கம்



தொழிலாளர் ஆள்பலத் துறையின் துணையமைச்சர் மாண்புமிகு. கு. பத்மநாபனுடன் திரு. அனுராமலிங்கம் (இடம்) தமக்கு வழங்கப்பட்ட பிரியா விடை விருந்தில்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களில் நடித்தவர்; நாறுபதுக்கும் அதிகமான மேடை நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றிருப்பவர்; மேடை நாடகங்களில் பதினேந்துக்கும் மேற்பட்டவற்றில் கதாநாயகனாகப் பங்கேற்றவர்.

இப்படிப் பல நாடகங்களில் நடித்து நடிப்புத் துறையில் அனுபவம் பெற்றிருந்தும் நடிப்புத் துறையின் நுணுக்கங்களை இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் அடங்காத ஆசையுடன் தற்போது தமிழகத்திற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருப்பவர் திரு. அனுராமலிங்கம்.

"வாழ்வு சிறிது வளர்கலை பெரிது" என்பதற்கொப்ப எல்லையில்லாத கலைத்துறைக்கும் எல்லை கண்ட கலை விற்பன்னர்கள் வாழும் நாடு தமிழ்நாடு. அந்தக் கலை விற்பன்னர்களிடமிருந்து நடிப்பின் நுணுக்கங்களை முடிந்தவரைக்கும் தெரிந்து கொண்டு தமிழ்க்கலையை நமது மலேசிய நாட்டில் மேலும் தழைத்தோங்கச் செய்யும் பேராசையால்தான் நான் தமிழகம் செல்கிறேன். தமிழகக் கலைஞர்கள் என்னுடைய இந்த முயற்சிக்கு அளிக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் மலேசியாவில் தமிழ்க் கலை செழிப்பாக வளருவதற்குச் செய்யும் பேருதவியாகும்" என்று கூறுகிறார் அனுராமலிங்கம். தமது தமிழகப் பயணத்தின் குறிக்கோள்களில் மேடை நாடகங்களுக்குரிய ஒப்பனைப் பொருட்களையும், ஆடை ஆபரணங்களையும் வாங்கி வருவதும் ஒன்று என்கிறார் அவர்.

சினிமாவில் நடிக்கத் தகுதி பெற்ற முகவெட்டுடன், எடுப்பான தோற்றத்தையும் கணீரென்ற குரலையும் கொண்டவர்.

1959-ஆம் ஆண்டில் தமிழர் திருநாள் மேடைகளில் ஒரங்க நாடகங்களின் மூலம் நடிப்புத் துறையில் ஈடுபட்ட அனுராமலிங்கம், தைப்பிங் கலைமகள் நாடகக் குழுவில் சுமார் மூன்று ஆண்டுகள் பயிற்சி பெற்றார்.

இப்போது தமிழகத் திரையுலகில் முன்னேறி வரும் பின்னணிப் பாடகர் மலேசிய வாசுதேவன் அனுராமலிங்கத்தின் பல நாடகங்களில் பின்னணிக் குரல் கொடுத்தவர்.

நடிப்புத் துறையில் மட்டுமன்றி மேடைப் பேச்சிலும் அவர் வல்லவர். மாறுவேடப்போட்டி, நாடகப்போட்டி, பேச்சுப்போட்டி, நடிப்புப் போட்டி முதலான போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப் பரிசுகளாகப்பெற்ற சிறப்புக்குரியவர்.

மலேசியாவில் நாடகத் துறைக்கு முன்னோடியாக விளங்கிய அமரர் ஆழி அருள் தாசனுடன் நாடகத் தொடர்பு இவருக்கு உண்டு.

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவரை அனுராமலிங்கம் தனது மானசீகக் குருவாகக் கொண்டிருக்கிறார்.

அனுராமலிங்கத்தின் பயணம் வெற்றிகரமாக அமைவது, தமிழகத்தில் உள்ள கலைஞர்கள் வழங்கும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பொறுத்துள்ளது எனலாம்.


—மஞ்சரி.



'கறந்த பாலின் கனிந்த நட்பு'

கறந்த பால், தான் தனியே விடப்பட்டுவிட்டதாகவும் தனக்கொரு நண்பன் இல்லையே என்றும் வருத்தம் கொள்ளுமாம். தன்னில் சிறிது நீர் ஊற்றப்பட்டவுடன் தனக்கு ஒரு நண்பன் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் பால் தனது வருத்தத்தை விட்டு அந்த நீர் நண்பனுடன் இரண்டறக் கலந்துவிடுமாம். பின்னர் அடுப்பில் வைத்துக் காய்ச்சப்படும்போது அதில் உள்ள நீர் மட்டும் சுண்டிவிடும். அப்போது தன்னுடன் ஒன்றியிருந்த நண்பனைக் காணாது அதனைத் தேடும் பொருட்டுப் பால், பானையை விட்டு வெளியே பொங்கி வழியுமாம். தன் நண்பனைத் தேடும்போது தீ நாக்குகளால் தான் கருகி மாய்வதைக்கூட பொருட்படுத்தாமல் பொங்கி வழிந்துகொண்டே இருக்குமாம். பொங்கி வழிவதைத் தடுக்கத் தன்மேல் நீர் தெளிக்கப்படும்போது தன் நண்பனை நீர் மீண்டும் தன்னிடம் வந்து விட்டான் எனும் களிப்பில் அப்படியே அடங்கி ஒடுங்கிப் பானைக்குள் அமைதியாகி விடுமாம் பால். என்னே நட்பின் பெருமை!

—உடையப்பா தேவரின் "ஹரிச்சந்திரா" நாடகத்தில் கேட்டு எழுதியவர் மலாக்கா சங்கர்.



ஆளுர் ஜலால்
தமிழகம்

“அவர் இனி என் கணவர் இல்லை” அவளுடைய நெஞ்சில் எண்ணப்பாகாய் இந்த நினைவு இனித்தது.

விரிந்து பரந்த அந்த ஆண்மைத்தனமான மார்பில் மெல்லிய உரோமப் புதர்களை நெருடி நெருடி விளையாடிய இன்பப் பொழுதுகளெல்லாம் இதோ விவாகரத்தில் வெறும் சருகுகளாகிப் போய்விட்டன. அவள் குதூகலத்தோடு சிரிக்கிறாள்.

இரண்டாண்டு காலம் ஒவ்வொரு இரவுப் பொழுதிலும் புஷ்பித்த மனோகரப் பூக்கள் நீதிமன்றத் தீர்ப்பில் உதிர்ந்து கிடக்கின்றன. அவன் அவளைப் பார்க்கிறான். வடிகிற நீர்ச் சொட்டுக்கள் அவன் பார்வையில் சின்னச் சின்னதான வட்டப் புள்ளிகளைக் கோலமிட்டுக் காட்டுகின்றன.

காலத்தின் மிகப்பெரிய கோலம் அவன் வாழ்க்கையில் அலங்கோலமாகி நிற்கிற வேளையில் இந்தப் பார்வைக் கோலங்கள் அவனுக்குப் பெரிதாகப்படவில்லைதான். எனினும் இரண்டாண்டுகாலம் தன்னோடு இரண்டறக் கலந்துகிடந்தவளை அவன் இந்த நட்ட நடுப்பகல் பொழுதிலும் மிக உன்னிப்பாய்க் கூர்ந்து நோக்குகிறான்.

கண்ணுக்கு மைதீட்டி உதட்டுக்குச் சாயம் பூசி உடலுக்கு கவுன் மாட்டி அவள் ஒரு கைதேர்ந்த நடிகையைப்போலல்லவா நிற்கிறாள். வாழ்க்கை நாடகத்தில் அவள் ஏற்ற மனைவி எனும் பாத்திரத்தின் ஒப்பனை கலைந்தாயிற்று. இப்போது அவள் ஒரு புதிய காதலியாக உருவேற்று நிற்கிறாள். அவளுடைய பார்வை அழகான அந்தக் காதலனைத் தேடித் துளாவுகிறபோது அந்தப் பார்வை வலையில் இந்த அழகில்லாத மாஜிக் கணவனின் உருவம் லேசாக நெருடுகிறது

இவனைக் குஷ்டரோகி என்று சொல்லி விவாகரத்துப் பெற்றுவிட்ட தன்னுடைய வழக்கைப் பற்றி ஒரு சிறுகணப் பொழுது அவள் எண்ணிப் பார்க்கிறாள்.

திறமையான பொய்களும், நிறைவான பணமும் பக்கபலமாக இருந்துவிட்டால் அநியாயத்தைக் கூட நியாயமாக்கிக் காட்டிவிடலாம்தான்.

மூன்றாண்டு காலம் நடந்து பரபரப்பேற்படுத்திய வழக்கில் இன்று அவளுக்குச் சாதகமாக வழங்கப்பட்டிருக்கிற தீர்ப்பு அதற்கோர் எடுத்துக்காட்டு.

அவன் குஷ்டரோகி இல்லை என்பதற்கான மருத்துவ அத்தாட்சிப்பத்திரம் இருந்தும்கூட இந்த விவாகரத்து எப்படி அரங்கேறியது? ஒருவகையில் அவளுக்கே இது ஆச்சரியமாகத் தானிருக்கிறது.

அவன் அழகானவன் என்று சொல்லமுடியாவிட்டாலும் அவலட்சணமானவன் என்று சொல்லமுடியாது. கறுப்பானவன் என்ற ஒருகாரணம் ஒரு கணவனை வெட்டிப்பிரிக்க தடைச் சுவராகி நிற்குமா? இதோ இங்கே வந்து நிற்கிறதே!

கறுப்பாகயிருந்தது அவன் குற்றமில்லை. வெள்ளையான மனைவியை எல்லாவகையிலும் “வெள்ளையாக” நினைத்து எல்லா இடங்களுக்கும் எல்லா மனிதர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தானே, அதுதான் தவறாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் அவள் மனம் ஒரு புதிய காதலனைத் தேடியிருக்காது; இந்தக் கறுப்புத்தனம், அவளால் குஷ்டரோகி என்று துணிந்து கூறுமளவுக்குத் தெம்பைக் கொடுத்திருக்காது.

எல்லாம் முடிந்துபோன கதை; மடிந்துபோன நினைவு. இனி அவள் எப்படி யாரோடு வாழ்ந்தாலும் அதைப்பற்றிக் கேட்பதற்கோ பார்ப்பதற்கோ அருகதையில்லாத அவன் தளர்ந்த நினைவோடு நீதிமன்றத்தை விட்டு வெளியாகிறான்.

அவனைத் தொடர்ந்தே அவளும் வருகிறாள். கோத்துத் திரிந்த கைகள் இரண்டும் தனித் தனிப்பாதைகளில் முன்பின்னாக அசைகின்றன.

சோர்ந்துபோய்விட்ட அவனுடைய நடை தெம்பும் திராணியுமில்லாமல் மெல்ல மெல்லப் பாதங்களை இழுத்துக் கொண்டிருக்கிறது. கலைந்து கிடக்கிற அவனுடைய கேசங்கள் காற்றில் சுதந்திரமாய் அலைபாய்கின்றன.

வேகமாய் நடக்கிற அவளுடைய பார்வை அவனையும் அவன் கோலத்தையும் மெல்லத் துளாவுகிறது. இப்படி காற்றில்

அலைபாய்கிற அந்தக் கறுத்த மயிரிழைகளை எத்தனையோ தடவைகளில் செல்லமாய் ஒதுக்கிவிட்டு அழகுபார்த்தவள் இன்று அவனையே ஒதுக்கிவிட்டு அழகான வேறொருவனுக்காகப் போய்க் கொண்டிருக்கிறாள். இதை விதி என்பதா? விளையாட்டு என்பதா? அவனுக்கு இது விதி. அவளைப் பொறுத்த மட்டில் விளையாட்டாகத்தானே தெரிகிறது.

பிரிந்து செல்கிற முன்னுள் கணவனுக்காக அவளின் பரிவுமில்லை; பற்றுமில்லை. அவன் யாரோ, அவள் யாரோ?

இப்போதைய அவள் மனநிலையில் அவளுக்கிருக்கும் பரபரப்பெல்லாம் இன்று தீர்ப்பின் முடிவைக் கேட்க நீதிமன்றம் வருவதாகச் சொன்ன அவர் ஏன் வரவில்லை என்பதுதான்.

அவரிடம் தீர்ப்பைச் சொல்ல வேண்டும். மகிழ்ந்து பூரிக்கிற அவர் கன்னப்பொட்டில் ஒரு... ஒரு...

உதட்டைத் துடைத்துக் கொள்கிறாள்காரணமில்லாமலே. வெட்கத்தின் பூரிப்பில் மார்புக்கூடு உயர்ந்து தாழ்கிறது. அவரைச் சந்தித்த இனிமையான அந்த அந்திப் பொழுதை இப்போது அவள் எண்ணிப் பார்க்கிறாள். அந்த நினைவு மேலே முந்தபோது பின்னால் திரும்பிப் பார்க்கிறாள்.

தூரத்தில்-

அதோ வந்துகொண்டிருக்கிறானே. அவனை அவள் நன்றியோடு பார்க்கிறாள். வாட்டசாட்டமான ஒரு ஆண்பிள்ளைச் சிங்கத்தை அவளுக்கு அறிமுகம் செய்துவைத்தது அதோ வந்துகொண்டிருக்கிற அந்தச் சுண்டெலிதானே.

சரிந்து நழுவுகிற நினைவுகளைச் சரி செய்துகொண்டு மீண்டும் அவள் அந்த அந்திப் பொழுதுக்கே வந்துநின்றாள்.

சிரிப்பைச் சிந்தி பரஸ்பரம் ஒருவரையொருவர் கைலாகு கொடுத்து வளைத்துக்கொண்ட பொழுதல்லவா அது.

அவர் படித்தவர்; பட்டம் பெற்றவர்; எல்லாவற்றிற்கும் மேலாக அழகானவர். உரோமங்களேயில்லாத அந்த மார்புப் பளிங்கில் கன்னத்தை ஒட்டிப் படுக்கிறபோது – அதுதான் சுவனத்தின் உதயபூமியா? இனிக்கிற நினைவுகள் அவள் நெஞ்சில் ஸ்வெட்டர் பின்னிக்கொண்டிருக்கின்றன.

பாதச் சுவடுகள் வேகவேகமாய் நடை போடுகின்றன. அவரைப் பார்க்க வேண்டும்; தீர்ப்பைக்கேட்க ஏன் வரவில்லை என்று கேட்கவேண்டும். தீர்ப்பின் முடிவைச் சொல்லி அவர் வாயில் இனிப்பைப் போட வேண்டும். அப்புறம் ஆகவேண்டியதைப் பார்க்கவேண்டும். எண்ணங்கள் மனக்குளத்தில் அரும்புகின்றன.

சாலையின் திருப்பத்தைக் கடந்து அவர் வீட்டுக்குப் போகிற இடுவையில் நுழைகிறபோது... அங்கே என்ன பெருங்கூட்டம்?

அவள் வேகமாய்ப் போகிறாள். பரபரப்பும் படபடப்பும் அவளை இயந்திரமாய் முடுக்கிவிடுகிறது.

அவர் வீட்டில் கூட்டம். சலசலப்பான - இன்னதென்று புரிந்துகொள்ள வியலாத உணர்வின் மேலோட்டத்தில் கலகலத்து நிற்கிற கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைகிறாள்.

அவளுடைய பார்வை அங்கே நடுவீட்டில் கிடத்தப்பட்டிருக்கிற அவரைப் பார்க்கிறது. உணர்வுகள் ஸ்தம்பிக்கின்றன.

குருதிப்பூக்களில் சிவந்து கிடக்கிற அவருக்கு என்ன யிற்று? "யாராவது சொல்லுங்களேன்"வெறி பிடித்தவள்போல் கூச்சலிடுகிற அவளை மெல்ல அணைத்தவாறே ஒரு மூதாட்டி சொல்கிறாள்.

"ரொம்பச் சந்தோஷமா யாரையோ பார்க்குறதுக்காக ரொம்ப அவசரமா சைக்கிள்லெ பொறப்பட்டான். இடுவையிலெ திரும்பறப்போ ஒரு லோரி வந்து மோதி இந்தப் பிள்ளையைச் சுருட்டிட்டுப் போயிட்டதம்மா!"

மூதாட்டி வார்த்தையைச் சுருட்டி நிறுத்தியபோது அவள் அந்த அழகான ஆண்சிங்கத்தைப் பார்க்கிறாள். சிதைந்து கிடக்கிற அதன் மார்புப் பளிங்கில் குருதிக்கோலம் விரிசல் படுத்தியிருக்கிற அலங்கோலத்தைப் பார்த்து உணர்விழந்து தளர்கிறாள்.

தீர்ப்பின் முடிவைச் சொல்வதற்காக அவள் வந்தபோது அவள் வழக்கு இதோ அப்பீலுக்கு நிற்கிறது. தீர்ப்பை முறியடித்து இப்படியொரு பெருந்தீர்ப்பை அவள் தலையில் எழுதியவன் யார்? அவள் நெஞ்சில் கேள்வி வளையங்கள் கொக்கியிடுகின்றன. சுற்றி நின்று இந்தப் பரிதாபத்தைப் பார்க்கிறவர்களையெல்லாம்பார்க்கிறாள். அங்கே அவனும் நிற்கிறான். அவள் அவனைப் பார்க்கிறாள்; அவன் அவளைப் பார்க்கிறான்.

அவள் கண்ணில் நீர்ச்சொட்டுக்கள் வழிந்துகொண்டேயிருக்கின்றன.

கலைவாணர் அளித்த பரிசு

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் சகோதரர் திருமணத்தின் போது எம். கே. தியாகராஜ பாகவதரின் கச்சேரி நடைபெற்றது. கச்சேரி முடிந்த பின் அதில் பங்குகொண்ட கலைஞர்களுக்கெல்லாம் கலைவாணர் பரிசுகள் வழங்கினர்.

கடம் இசைக் கருவியை வாசித்த கலைஞருக்கு ஒரு பெரிய வெள்ளிக் கோப்பையைப் பரிசாக வழங்கினர். ஏனைய கலைஞர்களுக்கு அளவில் சிறிய பரிசுகளைக் கொடுத்துவிட்டு, இவருக்கு மட்டும் இவ்வளவு பெரிய பரிசைக் கொடுக்க என்ன காரணம் என்று வந்திருந்தவர்கள் சிந்தித்தனர்.

இதனைப் புரிந்துகொண்ட கலைவாணர் இதற்குப் பதிலளிக்கலானர். "கடம் வித்துவானுக்கு இவ்வளவு பெரிய பரிசு கொடுக்க என்ன காரணம் எனப் பலர் நினைக்கலாம்; காரணம் உண்டு. இப்போது ரயிலிலுள்ள நெருக்கமும் கூட்டமும் எல்லோருக்கும் தெரிந்தது தான். இவ்வளவு பெரிய மண்பானையை ரயிலில் நெடுந் தொலைவிலிருந்து பாதுகாப்பாகக் கொண்டு வருவது லேசான காரியமா, என்ன? நெனச்சுப் பாருங்கோ! அந்த அரிய காரியத்தைச் செய்தவருக்கு இவ்வளவு பெரிய பரிசை கொடுத்தது சரிதானே!" என்று கலைவாணர் கொடுத்த விளக்கத்தைக் கேட்டு மக்கள் கூட்டம் வயிறு குலுங்கச் சிரித்தது.

–ந. உதயபாலன்,
சுபகை சோலை தோட்டம், ரவாங்

சுங்கைப்பட்டாணியில் தைப்பூசம்





சுமந்திரன்

"வர வர வர வர வேலா இந்த வள்ளியை மணம் புரிய வா வா.."

வண்ண வண்ணக் காகித மலர்களின் ஊடேயிருந்து கண் சிமிட்டும் மின்சார பல்ப் அலங்காரங்களோடு தோளில் சுமந்திருக்கும் காவடி அசைத்திட காலில் சலங்கை கொஞ்ச தன் நேர்த்திக் கடனைச் செலுத்துதற்கு, இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க முன்னேறும் பக்தனுக்கு முன்னால் ஒரே குரலில் பாடியபடி உற்சாக மூட்டி வரும் பக்த கோடிகள்.

சீர்மேவும் எட்டுக்குடி வாழ...
வேல்... வேல்...!

இன்னொரு பக்கத்திலிருந்து ஒலிக்கும் மெய்யுருதல்...!


"தலைவெட்டி முனியாண்டி" கோவிலுக்கு அருகிலிருக்கும் கிணற்றில் குளித்து அங்கேயே பூசையை ஆரம்பித்து "அருள்" வந்தாட காவடியைச் சுமந்து ஜாலான் பட்லிஷா வழியாக ஜாலான் இபுராஹிமைக் கடந்து "பிக்கான் லாமாவை"ப் பெண்ணின் நேர் வகிடாய்ப் பிரிக்கும் ஜாலான் கோல கிட்டிவில் நுழைந்து, ஜாலான் செக்ராட் கூடுமிடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியர் தேவஸ்தானத்தில் வந்திறங்கும் காவடிகள். சென்ற ஆண்டு முதல் நெரிசல் கருதி ஜாலான் பட்லிஷாவிலிருந்து புதிதாகத் தோற்றுவித்த பாதையில் கிளை பிரிந்து கோவிலை வந்தடைகின்றன.

அதோ என்று வானத்தைக் காட்டுகின்றார் ஒருவர். வானத்திலே பறவையாய் இறக்கை விரிய வான ஊர்தி வடிவிலே ஒரு காவடி!
"ஏரோ பிளேன்" காவடி என்று பெயர். எல்லார் கண்களும் மேலே நோக்குகின்றன. வயிற்றில் கட்டிய கட்டுடன் தொங்கிக் கொண்டு ஒருவர் காட்சி தர, கீழே அவர் தொங்கும் கழியை இன்னொருவர் தாங்கி வர... சுங்கைப்பட்டாணி சுப்பிரமணியர் ஆலயமே ஸ்தம்பித்துவிடுகிறது.

இரவு எட்டு மணிக்கு முருகப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் பக்தர்களுக்குக் காட்சி தர ஊர்வலம் புறப்படும்போது ஊமையரின் உதடும் "முருகா" என அசையும்.

ஆரம்பக்காலத்திலே இங்கே தைப் பூசத்தன்று மட்டுமே காவடிகள் எடுக்கும் வழக்கமிருந்தது. கெடா மாகாணத்திலேயே சுங்கைப்பட்டாணியில் மட்டுமே தைப்பூச விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதால் நேர்ந்து கொண்ட பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே, தைப்பூச நாளில் காவடி செலுத்த இயலாதவர்களுக்கு மறுநாளில் செலுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. கோயில் நிர்வாகம். ஆனால், காவடி செலுத்தும் பக்தர்களின் கூட்டம் அளவுக்கும் அதிகமாகி விடவே, வேறு வழியின்றி தைப்பூசத்திற்கு முதல் நாளும் இங்கே காவடி செலுத்த வழி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சுங்கைப் பட்டாணியில் மூன்று நாளும் தைப்பூசத் திருவிழாதான்!



'16 வயதினிலே'

இளையராஜா

இன்றையப் பின்னணி இசையமைப்பாளரில் முன்னணியில் இருப்பவர் இளைய ராஜா. ஏற்கெனவே திரையுலகில் ஒரு ஏ. எம் ராஜா இருந்துவருவதால், இந்த ராஜாவை இளைய ராஜாவாக்கிவிட்டார் திரு. பஞ்சு அருணசலம்!

ராஜாவுக்கு அப்போது பதினறு வயதிருக்கும். அவருடைய சகோதரர் பாவலர் வரதராஜன் பல இடங்களில் மெல்லிசைக் கச்சேரி நடத்திக் கொண்டிருந்த நேரம் அது! இடையில் அவருக்கு உடல் நலம் சரியில்லாமற் போகவே அவரால் பாட முடியாமற் போற்று. அதனல் இனிமையான குரலோடு இருந்த ராஜாவைத் தன் இசை நிகழ்ச்சிகளில் பயன் படுத்திக் கொள்ளத்தொடங்கினர்.

பள்ளிக்கூடப் பக்கமே செல்லமுடியாத அளவிற்கு தென்னிந்தியா வெங்கும் பல இசை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார் ராஜா! விளைவு-பள்ளிப்படிப்பை அத்தோடு நிறுத்தவேண்டியதாயிற்று. அந்த நேரம் பார்த்து ராஜாவின் இனிமையான குரலும் போயிற்று. இனி தன்னல் பாடமுடியாது என்ற முடிவுக்கு வந்த ராஜா ஆர்மோனியம் கற்றுக்கொள்ளத் தொடங்கினர்!


ஒருநாள் சகோதரரின் இசை நிகழ்ச்சியில் ஆர்மோனியம் வாசிப்பவர் வராமற்போகவே ராஜாவையே தன் நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றுர் வரதராஜன்.

ராஜாவின் கைவிரல்கள் தாளமும் போட்டன; ஆர்மோனியத்தையும் வாசித்தன. தாளம் ராஜாவின் பயத்தில் பிறந்தது! ஆர்மோனிய இசை ராஜாவின் பயிற்சியில் பிறந்தது! ராஜா எதிர்பார்த்ததற்கு மேலாகவே உற்சாகமானவரவேற்பு அந்த நிகழ்ச்சியில் அவருக்குக் கிடைத்தது. தொடர்ந்து பல இசை நிகழ்ச்சிகளில் திறமையைக் காட்டக்கூடிய வாய்ப்பும் ராஜாவைத் தேடி வந்தது. பாராட்டுக்களும் தொடர்ந்தன. அந்த பாராட்டுக்களைக் கேட்டு பெருமிதப் படுவதற்குப்பதிலாக, "பல இசையமைப்பாளர்கள் வாசித்ததைத் திரும்ப வாசிப்பதற்கே இவ்வளவு வரவேற்பிருக்கின்றதே! இந்தப் பாடல்களுக்கு இசையமைத்தவர்கள் எப்படிப்பட்ட மேதைகளாக இருக்கவேண்டும்" இப்படிச் சிந்திக்கத் தொடங்கினர் ராஜா! இசை முழுமையாகத் தெரியாத அந்த நிலையிலேயே தானே இசையமைக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது அந்த 16வயது இளைஞருக்கு!

அந்த ஆர்வம் மேலும் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது! எனவே நாடகங்களுக்கு இசையமைப்பதில் ஆர்வம் காட்டினர் ராஜா! அவருடைய நெருங்கிய நண்பரும் "16 வயதினிலே" படத்தில் டைரக்டருமான பாரதி ராஜாவின் நாடகத்திற்கு முதலில் இசையமைத்தார்; நல்ல வரவேற்பு கிடைத்தது!

இசையமைப்பில் முன்னேற வேண்டும் என்றல் சென்னைமா நகருக்குச் செல்லவேண்டும் என்ற முடிவுக்குவந்த ராஜா தனது 16வது வயதில் வீட்டில் இசை பாடிக்கொண்டிருந்த ரேடியோவை விற்றுவிட்டு, அண்ணன் பாஸ்கருடனும் இசையமைப்பாளராக வேண்டும் என்ற ஆசையுடனும் சென்னைக்கு ரயிலேறினர்!

...இன்று தமிழ்த் திரையுலகில் சிறந்த இசையமைப்பாளர்களில் ஒருவராக ராஜா விளங்குகிறர் என்றல், அவருடைய விடாமுயற்சியும், தன் திறமையின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையுமே காரணங்களாகும்.



தாமரைப்பூ குளத்துக்கருகில் தனிமையில் இனிமை காணும் இளம் ஜோடிகள்

திரை: துர்க்காதேவி

இணை: சிவகுமார்-ஸ்ரீவித்யா

வேப்பெண்ணெய் பெரும்பாலும் இந்தியர்களின் இல்லங்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு ஔடதமாகும். பல நல்ல மருத்துவச் சிறப்புகளைப் பெற்றுள்ள வேப்பெண்ணெயில் நச்சுப்பொருள் கலந்து விட்டதினால் நாடு முழுவதும் விற்பனைக்குத் தடை விதிக்கப் பட்டிருக்கும் இவ்வேளையில் வேப்ப மரத்தையும் அதன் உபயோகச் சிறப்பினையும் எடுத்துக் கூறுவது சித்த வைத்தியர்கள் சங்கத்தின் கடமையாகும். அதற்குநல்ல நேரம் இது!

வேப்பமரம் இந்தியாவிற்கே உரியதாகத் தெரிகிறதெனினும் பர்மாவிலும் பயிரிடப்படுகிறது. இந்தியாவின் வடமேற்கு பகுதிகளில் வறட்சியான பாகங்களில் இது மிகச் செழிப்பாக வளரும்.

வேப்பமரத்திற்கு வேறு பல பெயர்கள் உண்டு. அவை அரிட்டம், துத்தை நிம்பம், பாரிபத்திரம், பிசுமந்தம், வாதாரி ஆகியவையாம். இதன் விஞ்ஞான பெயர் அசாடிராச்தா AZADIRACHTA INDICA என்பதாகும். சாதாரணமாக ஆங்கிலத்தில் மார்கோசக மரம் எனப்படும். தெலுங்கில் VEPA விபா என்றும் மலையாளத்தில் VEPPA விப்பா என்றும் கன்னடத்தில் BEVINA பெவீனு என்றும் சமஸ்கிருதத்தில் NIBBA நிப்பா என்றும் ஹிந்தியில் NIM நிம் என்றும் இது அழைக்கப்படும்.

வேப்பம் பூவை தண்ணீரில் போட்டு காய்ச்சி சிறு குழந்தைகளுக்கு ½ அவுன்ஸ் கொடுக்க வயிறு சுத்தப்படும். மிளகும் வேப்பம் பூவையும் அரைத்து குழந்தைகளுக்கு வாரத்திற்கு 1 முறை எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் தினத்தில் சுண்டைக்காய் அளவு கொடுத்தால் வயிற்றுக் கிருமிகள் நாசமடையும். இரவில் குழந்தைகள் நிம்மதியாகத் தூங்கும். பல்லைக் கடிக்காது.

ஓதரிய வேம்பை யுரைக்கிற் சுரமுடனே
வாதமறு மூலகண் மாந்தம்போம் - தீதா
யுதிருமெரி பூச்சிகுன்ம மோதா தொழியுஞ்
சிதறுமலம் மோகுமெனத் தேர்

வேப்பம் பூ

பித்தத் தெழுந்த பெருமூர்ச்சை நாத்தோடஞ்
சத்தத் தெழுவமனந் தங்கருசி - முற்றியகா
வேப்பமலர்க் கிட ்டிவையேகு நாட்சென்ற
வேப்பமல ருக்கு வெருண்டு

நாட்சென்ற வேப்பம் பூவுக்குச் சந்நி, மூர்ச்சை ஜிம்மகதோஷம், வாந்தி, அரோசகம், நீடித்த வாதம், ஏப்பம், மலக்கிருமி இவை போகும்.

மருந்து மரம்

மருத்துவமணி ஆர். கிருஷ்ணமூர்த்தி
அகஸ்திய சித்த வைத்திய நிலையம்.
நாட்டு வைத்தியர்கள் சங்கத்தலைவர்,
ஈப்போ ரோடு கார்டன், கோலாலம்பூர்.

இதனுடைய செய்கையாவன:

வெப்பமுண்டாக்கி - உஷ்ணகாரி - STIMULANT. புழுகொல்லி - கிருமிநாசினி - ANTHELMINTIE விக்கம் பரப்பி - DISCUTIENT.

வேப்பமரத்தின் பல்வேறு பாகங்களாகிய இலை, ஈர்க்கு, பூ, காய், பழம், வித்து, நெய், புண்ணாக்கு மரப்பட்டை, வேர்ப்பட்டை, கட்டை, கள், பிசின் ஆகியவை மருத்துவ ரீதியாக தனித்தனியாக உபயோகப்படுகின்றன.

சூரணம்

வேப்ப மரப்பட்டையை நிழலில் உலர்த்தி இடித்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 32 குன்றுமணி அளவு (1 வராகனெடை) வீதம் தினம் 2 வேளை சிறிது சர்க்கரை கலந்து சுரம் வருமுன் சாப்பிடுவதுண்டு. அல்லது 1 பலம் (ஏறக்குறைய 1 தயின்) பட்டையை பஞ்சுபோல் இடித்து கஷாயம் வைத்து இறுத்து 1 வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை சாப்பிடுவதுண்டு. இதனால் குளிர்சுரம் நீங்கும். சுரத்திற்குப் பின் வரும் வலியும் நீங்கும். 100 ஆண்டிற்கு மேல்பட்ட வேம்பு, பூவரசு முதலிய மரங்களிலிருந்து எடுத்த பட்டையை புரணி நீக்கிச் சமனெடையாக இடித்து சூரணம் செய்து வேளைக்குத் திரிகடிப்பிரமாணம். சிறிது சர்க்கரை கூட்டி அந்தி சந்தி உட்கொள்ள குஷ்டம் முதல் சர்வ மேக ரோகங்களும் போகும்.

வேப்பம் வித்து

"சீறுங் குறைநோயுஞ் சில்விஷமுஞ் சந்நிவகை
ஊறுஞ் சொறி சிரங்கு மூண்மூலம்-மீறிவரும்
ஏப்பம் மலக்கிருமி யெல்லா மொழித்திடவே
வேப்பம் விதையை விரும்பு"

பஞ்ச கற்பம்

வேப்பம்வித்து, கஸ்தூரி மஞ்சள், வெண்மிளகு கடுக்காய், நெல்லிப் பருப்பு இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துச் சிரசிற்கு இட்டுத் தேய்த்துச் சிறிது நேரம் சென்றபின் நீராடினால் எப்பிணிகளையும் வரவொட்டாமல் தடுக்கும். இதற்கு பஞ்ச கற்பம் எனப் பெயர்.

வேப்பிலை

"கிருமிகுட்ட மாந்தஸ் கெடுவிடஞ்சு ரங்கள்
பொருமியம சூரிகையின் புண்க-நெருமிக்க
நிம்பத் திலையிருக்க நீடுலகி னீங்காமற்
கம்பத் திலையிருக்கக் காண்"

"மந்தப் பொருமலுடன் மல்லாடும் பேதிவகை
வந்த கணுச்சூலை வன்கிருமி-தொந்தமெலாங்
கூப்பிக் கரங்குவித்துக் கொண்டோடு
மித்தரையில்
வேப்பிலையின் நற்குணத்தை விள்"

வேப்பிலையையும் மஞ்சளையும் அரைத்துக் கட்டி பருக்களுக்கு தடவி வர அழுந்திப் போகும். சீழ் கொண்டிருப்பின் உடைத்துக் கொள்ளும்.

அம்மைக் கொப்பளங்களுக்குச் சிறந்த அமிர்தமாகும். வேப்பிலைக் கொழுந்தும் அதிமதுரச்சூரணமும் சமனெடையாகக் கூட்டிச் சிறிது ஜலம் விட்டு அரைத்துப் பட்டாணிப் பிரமாணம் மாத்திரை செய்து அம்மை கண்டவர்களுக்கு தினம் 3 வேளை கொடுத்து வர அம்மையின் பூரிப்பு அடங்கும். வேப்பிலையை அம்மை கண்டவர்களிடத்தில் போட்டு வைக்க நோய், வன்மை பெறாது.

வேப்பிலையைத் தினந்தோறும் சிறிய அளவில் ஆரம்பித்து நாளுக்கு நாள் அதிகப்படுத்தி சாப்பிடுவது வழக்கம். இது "வேம்பு கற்பம்" எனப்படும். இத்தகையோர்க்கு பாம்பு கடித்தாலும் விஷம் ஏறாது.

"வாதம் போம் பித்தமிகு மாறுக்கி ரந்தியொடு
மோதுகரப் பான்சிரங்கு முன்னிசிவும்-ஓதுடலின்
நாப்ப ணுறுசுரமு நாடுசந்நி யுந்தொலையும்
வேப்ப நெய் யென்றெருகால் விள்"

வேம்பின் நெய்க்கு மகாவாதம், கிரந்தி, கரப்பான், சிரங்கு, சுரம், சன்னி இவை நீங்கும். வேப்பெண்ணெயை ஒரு கரண்டியிலிட்டு கொதிக்கவைத்து, எருக்கனிலையைக் கத்தையாகக் கட்டி ஒரு முனையை மட்டமாகத் தறித்துவிட்டு எண்ணெயில் தோய்த்துத் தாளக்கூடிய சூட்டில் கழுத்து, பிடரி முதலிய இடங்களில் ஒத்தடம் கொடுக்க நரம்பு இசிவு இவைகள் தீரும்.

டாக்டர் மொஹிதீன் ஷெரீப்கான் பகதூர் என்று ஒரு வைத்திய மேதை இருந்தார். சென்னையில் திருமல்லிக்கேணி "மிர்ஸா சாகிப் பேட்டை" என்ற இடத்தில் பிறந்து வளர்ந்து சர்வதேச புகழ்பெற்ற தொண்டைப் புரிந்து 75 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவர். இவர் மேல்நாட்டு முறைப்படி வைத்தியம் கற்றவரெனினும் தமிழ்நாட்டு மூலிகைகளிலும் நம் நாட்டு வைத்திய முறைகளிலும் நம்பிக்கை உள்ளவர்.

கி. பி. 1883-84ஆம் ஆண்டுகளில் கல்கத்தாவில் நடந்த சர்வதேசப் பொருட்காட்சிக்கு சுமார் 1000 மூலிகைப் பொருட்களை சேகரித்து இந்திய அரசாங்க அனுமதியுடன் அனுப்பி வைத்தார். அந்நூலில் அவர் வேப்பமரத்தின் பல்வேறு பாகங்களும் எப்படி வைத்தியத்திற்கு உதவுகின்றன என விளக்கியதுடன் காற்றை ஆரோக்கியமாக்கும் மாபெரும் தன்மை இதற்குண்டு என விளக்கியிருக்கிறார்.

காற்றைச் சுத்தமாக்கும் வேப்பமரம்

தென்னிந்தியாவில் சில கிராமங்கள் அவை தோன்றிய நாள்முதல் உலகில் அவ்வப்போது ஏற்படும் காலரா எனும் கொள்ளை நோயினால் தீண்டப்படாமல் தப்பி வந்துள்ளன என்றால் அது அங்கு அதிகமாக பயிரிடப்பட்ட வேப்ப மரங்களால்தான் என்று அறியவருகிறது.

காற்றை ஆரோக்கியகரமாக்கும் வேப்ப மரத்தை நமது மலேசிய அரசாங்கம் சாலை ஓரங்களில் பயிரிட ஏற்பாடு செய்யின் வாகனங்கள், தொழிற்பேட்டைகளினின்றும் எழும்பும் விஷக்காற்று சுத்தமாகும். நெருக்கடியான குடியிருப்புப் பகுதிகளில் பயிரிட்டால் மக்கள் சீதோஷ்ண வாழ்வு வாழ வழி ஏற்படும். மலேசிய இந்தியர்களிடையே பல ஆண்டுகளாக உபயோகத்திலிருந்து வரும் வேப்பெண்ணெயில் இப்பொழுது நஞ்சுக்கலப்பு உள்ளதாக சந்தேகிக்கப்பட்டு அரசாங்க அதிகாரிகளால் சோதிக்கப்படுவதோடு விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது, மேற்கண்ட பல்லாயிரம் பிணிகளை நீக்கவல்ல வேப்பமரத்தின் நெய்யை அதன் பலன் கருதி அரசாங்கம் கருணையுடன் பரிசீலித்து மருத்துவ சோதனைக்குப் பின் நல்லதென தெரிந்ததை- கலப்படமற்றதை பொதுமக்கள் உபயோகிக்க அனுமதித்தால் மிக்க அனுகூலமாக இருக்கும்.

சித்தர்கள் காலத்திலிருந்தே இம்மரம் பெயர்போனதென்பதையும் போகர் தனது முதற்காண்டமாகிய காயசித்தி பாகத்தில் இப்படி குறிப்பிட்டுள்ளார்.

போமப்பா யிதுகடந்த பின்பு நீதான்
புகழ்பெறவே நூருண்டின் வேம்பைப் பார்த்து
ஆமப்பா பட்டையைத்தான் வெட்டி வந்து
அப்பனே நிழலுலர்த்தா யுலர்த்திப்பின்பு
காமப்பா யிடித்துநன்றாய்ச் சூரணமே செய்து
கரிசாலை மல்லிகையின் சாறு வார்த்தை
தேமப்பா யேழுதரம் பாவனையேசெய்து
சிறப்பான வெருகடித்தூள் கொண்டி டாயே

கொண்டிடவே யனுபான வகையைக் கேளு
குறிஞ்சித்தேன் தனிற்குழைத்து
நாற்பதுநாள் கொள்ளு
விண்டிடவே யந்திசந்தி நினைவால் கொள்ளு
மெய்யெல்லாங் கருங்காலின் வயிரமாகும்
சுண்டிடவே நரைதிரைகளெல்லாம் போகும்
சுக்கிலந்தான் மேலிறுகிக் கீழோ டாது
கண்டிடவே யாறுதலம் வெளியாய்க் காணும்
காலனுமே யஞ்சிடுவான் காணு காணே

தனியானவன்

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி!
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ!

அவனுக்குக் கோயிலோ சுடுகாடாயிருக்கிறது! கொல்லும் இயல்புடைய புலித்தோலோ அவனுக்குரிய நல்ல ஆடையாக இருக்கின்றது! அவன் தாயும் அற்றவன், தந்தையும் அற்றவன்! தான் தன்னந்தனியனாகிய அவனும். இதனைப் பாரேடி!

தாயுந் தந்தையும் இல்லாதவனாய்த் தான் தனியனாகவே அவன் இருந்தானானாலும், அவன் சினந்தால் உலகனைத்துமே கற்பொடியாக ஆகிவிடுமே சாழலோ! ["அத்தகைய ஆதியும் அந்தமும் அற்ற அனைத்துக்கும் ஆதியாகிய பெருமானைப் போற்றுவோம்" என்பது கருத்து]

–திருவாசகம் 12; 3

மாஜு ஜெயா + பாலா

பொன்னைத் தேடி மண்ணைத் தோண்டியவனுக்கு வைரம் கிடைத்தால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது எனக்கு. எப்போது? திரு. இரா. பாலகிருஷ்ணன் அவர்களைச் சந்தித்த பிறகு!

மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை அமைத்திருக்கும் "மாஜு ஜெயா" கூட்டுறவுக் கழகத்தின் தலைவர் என்னும் முறையில் திரு. பாலா அவர்களிடம் மாஜு ஜெயாவின் வளர்ச்சி, நோக்கங்கள் முதலியவற்றைப் பற்றி விளக்கம் கேட்கச் சென்றேன்.



திரு. இரா. பாலகிருஷ்ணன்.

"மாஜு ஜெயா"! அது வளர்ந்துவரும் இளைய சமுதாயத்தின் எதிர்காலச் செழிப்புக்கு சக்தி வாய்ந்ததோர் உரம். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்னும் பழமொழியை நன்கு புரிந்து கொண்டு இளமையிலேயே கூட்டுறவு முறையில் சேமிக்கும் பழக்கத்தை நம் இளைஞர்களிடையே உருவாக்கத் தோன்றிய ஒரு கூட்டுறவுக் கழகம். மலேசியா வெங்கும் செழித்துக் கிளைத்து வளரும் சுமார் 140 மணி மன்றங்களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 35 ஆயிரம் தமிழ் இளைஞர்களின் பொருளியல் சிந்தனை.

"ஏ, நிலமே! நீ காடாக இருந்தால் என்ன, நாடாக இருந்தால் என்ன! மேடாக இருந்தால் என்ன! பள்ளமாக இருந்தால் என்ன, உன்னிலே வாழ்கின்ற ஆண்கள் எப்படி இருக்கிறார்களோ, அப்படித்தான் நீயும் இருப்பாய்" என்று ஔவை பிராட்டியார் புறநானூற்றில் கூறியுள்ளதை நினைத்துப் பார்த்தால், சமுதாயம் என்கிற நிலம் பண்பட்ட நிலமாக– உரமும் வளமும் பயனும் வாய்ந்த நிலமாக இருப்பதற்கு ஆண்கள், அதிலும் குறிப்பாக இளைஞர்கள் எத்துணை முக்கியமானவர்கள் என்பது விளங்கும்.

மணிமன்ற உறுப்பினர்களான நமது இளைஞர்கள், மாஜு ஜெயா கூட்டுறவுக் கழகத்தைத் துவக்கி இருப்பதன் மூலம் இந்நாட்டில் நமது சமூகம் எதிர்காலத்தில் வளமாக இருக்க வழி அமைத்திருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

அத்தகைய மாஜு ஜெயா கூட்டுறவுக் கழகத்தின் அமைப்புத் தலைவராகத் திரு. பாலகிருஷ்ணன் 1975-ஆம்ஆண்டில் மலாக்காவில் நடைபெற்ற மணி மன்ற மாநாட்டில் நியமிக்கப்பட்டார்.

இந்தியப் பகுதித் தலைவர்

மலேசிய இந்தியர்களுக்கு அறிமுகமில்லாதவரல்ல திரு. பாலா. மலேசிய வானொலியின் இந்தியப் பகுதி ரங்காயான் மேராவாக மாறுவதற்கு முன்பு வரை அதன் தலைவராக இருந்தவர். மலேசிய வானொலியின் இந்தியப் பகுதித் தலைவர் திரு. பாலகிருஷ்ணன் என்றால் யாருக்கும் தெரியாதா என்ன?

"அரசியலுக்கு முற்றிலும் அப்பாற்பட்ட முறையில், சமூக இயக்க அடிப்படையில் நமது சமூகத்தின் பொருளியல் ரீதியிலான உயர்வுக்குத் திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில்தான் நான் மாஜு ஜெயா அமைப்புத் தலைவராகப் பணியாற்ற சம்மதித்தேன்."

"தாங்கள் மாஜு ஜெயா அமைப்புத் தலைவாக நியமனம் செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டபோது என்ன நினைத்தீர்கள்?" என்ற கேள்விக்கு மேற்கண்டவாறு பதில் கூறினார் திரு. பாலா.

"அந்த நம்பிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண

மூமாக வளரும் வகையில் மணிமன்ற உறுப்பினர்களின் கூட்டுறவு முயற்சி அமைந்துள்ளதா?" எனக் கேட்டேன்.

பத்துமலை மணிமன்றம்

"நிச்சயமாக! 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாஜு ஜெயா கூட்டுறவுக் கழகம் பதிவான பிறகு அவர்களின் பங்கு சேர்க்கும் முயற்சிகள் திருப்திகரமாகவும் என்னைப் பொறுத்தவரையில் நம்பிக்கையூட்டுவதாகவும் அமைந்துள்ளது? மூன்று மாதங்களில் இரண்டரை லட்சம் வெள்ளிக்கான பங்குகள் சேர்ந்துள்ளன.

"இதுவரைக்கும் பங்கு சேர்த்துள்ள மணிமன்றங்களில் பத்துமலை மணிமன்றம் முதலிடம் வகிக்கின்றது. ஒரு லட்சம் வெள்ளிக்குரிய பங்கு வாங்கும் தனது திட்டத்தின் முதல் கட்டமாக அந்த மன்றத்தினர் அண்மையில் $6,000 வழங்கி சுமார் $52,000க்குரிய பங்குகளை வாங்கினர். அடுத்த கட்டமாக வரும் மார்ச்சு, ஏப்ரல் மாத வாக்கில் மீதியையும் செலுத்துவதாக வாக்களித்துள்ளனர்.

"இப்படியே ஒவ்வொரு மன்றமும் ஒரு லட்சம் வெள்ளிப் பங்குகளை வாங்குமானால் 1 கோடி வெள்ளி சேர்க்கும் மாஜு ஜெயாவின் திட்டம் மிக எளிதாகவும், விரைவாகவும் நிறைவேறும் சாத்தியமுண்டு. பத்துமலை மணிமன்றத்தைப் போல் 140 மன்றங்களும் பங்கு சேர்ப்பதில் முழுமூச்சாய்ப் பாடுபடும் என்று நம்புகிறேன்."

"மாஜு ஜெயாவின் முக்கிய நோக்கம் என்ன?" என்று திரு. பாலாவிடம் கேட்டேன்.

"பொதுவாக எல்லாக் கூட்டுறவு இயக்கங்களின் நோக்கங்களையே மாஜு ஜெயாவும் கொண்டிருக்கிறது. என்றாலும் இளைஞர்களிடையே இருக்கும் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இளைஞர்கள் தங்களால் இயன்ற மட்டும் சொந்தத்தொழில் செய்ய மாஜு ஜெயா உதவ முடியும்.

எங்குமே வேலை செய்ய முடியாத சிவப்பு அடையாளக் கார்டு இளைஞர்களின் முயற்சிகளுக்கு மாஜுஜெய அதிக முக்கியத்துவம் கொடுக்கும். அத்துடன் சிறு தொழில் திட்டங்களில் முக்கிய கவனம் செலுத்தும். மாஜு ஜெயாவின் வெற்றி அது செய்யப்போகும் சேவைகளில்தான் இருக்கிறது. பொறுத்திருந்து பாருங்கள்" என்று திரு. பாலா கூறியபோது அவரின் பேச்சில் அடக்கம் தெரிந்தது; காரிய நோக்கு புரிந்தது.

"மாஜு ஜெயாவில் மணிமன்ற உறுப்பினர்கள் மட்டும் தான் சேரமுடியுமா?"

"ஆமாம். மற்றவர்கள் விரும்பினால் மணிமன்ற உறுப்பினராகித்தான் மாஜு ஜெயாவில் சேரவேண்டும். ஏனெனில் மன்றங்களின் வழியாகவே பங்குகள் சேர்க்கப்படுகின்றன."

"மாஜு ஜெயா அமைப்புக் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் அங்கம் பெற்றுள்ளனர்?"

"பதினெட்டுப் பேர். மணிமன்றப் பேரவையின் சிறப்புத் தலைவர் திரு. சா. ஆ. அன்பானந்தன் துணைத்தலைவராக இருக்கிறார். திரு. ந. கோவிந்தன் செயலாளராக இருக்கிறார். இவர் சுபாங் சுங்கைவே மணிமன்ற உறுப்பினர். பொருளாளராகத் திரு மா. லோகநாதன் இருக்கிறார். இவர் கோலாலம்பூர் மன்றத்தைச் சேர்ந்தவர்.

"இந்த அமைப்புக்குழுவைத் தவிர நிபுணத்துவக் குழு ஒன்று அமைக்கப்படும். அதில் எல்லா தொழில் துறைகளிலும் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் நியமிக்கப்படுவார்கள்.

"$10 லட்சம் ரொக்கம் சேர்ந்த பிறகுதான் மாஜு ஜெயா தனது திட்டங்களைச் செயல்படுத்தத் துவங்கும்" என்று கூறினார் திரு. பாலா.

மலேசிய வானொலி இந்தியப் பகுதியைப் பொறுத்தவரையில் திரு. பாலகிருஷ்ணனின் காலம் வரலாறு படைத்த காலம் என்றே சொல்லவேண்டும்.

தம்மால் முடிந்த மட்டுக்கும் மேலாகவே அந்தக் காலத்தில் தமிழ் நிகழ்ச்சிகள் தரமாகவும் சுவையாகவும் அமைய பெருமுயற்சி எடுத்துக் கொண்டவர் என்பது வானொலி ரசிகர்களின் ஒருமனதான முடிவு.

மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியப் பகுதி அமைக்கப்பட்ட பிறகு அதில் பட்டம் பெற்று வெளிவந்த முதல் அணியினரைச் சேர்ந்தவர் அவர்.

தெலுக்கான்சன் பகுதியில் ஒரு தோட்டத்தில் குமாஸ்தா வேலை பார்த்தவரின் மகன்.

பல்கலைக்கழகத்திலிருந்து பி. ஏ. ஹானர்ஸ் பட்டத்துடன் வெளிவந்ததும் மலேசிய வானொலியில் சேர்ந்த அவர், ஒலிபரப்புத் துறையின் தலைவரான இஞ்சே டோல் ரம்லி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி தேசிய ஒலிபரப்பு வளர்ச்சி நிலையத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு கிடைத்த பெரும் பதவிதான் தற்போது திரு. பாலா வகிக்கும் ஆசிய பசிபிக் ஒலிபரப்பு வளர்ச்சி நிலையத்தின் இயக்குநர் பதவி.

மிகக் குறுகிய காலத்தில் இத்தகைய உயர்ந்த பதவியைப் பெற்ற மலேசிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் இவர் ஒருவர்தான் என்றும் சொல்லலாம்.

ஆஸ்திரேலிய ஒலிபரப்புத் துறையைச் சேர்ந்தவரும், ஆசிய-பசிபிக் ஒலிபரப்பு வளர்ச்சி நிலைய வாரியத்தின் துணைத்தலைவருமான ஒருவர், "ஒலிபரப்புத் துறைக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம்" என்று திரு. பாலா அவர்களை மனம் திறந்து பாராட்டி இருக்கிறார் என்றால் பாலாவிடம் எந்த அளவுக்குத் திறமை இருக்கிறது என்பது நன்கு புலப்படும்.

தற்போது அவர் வகிக்கும் பதவியைத் தெரிந்து கொண்ட பிறகு மாஜு ஜெயாவைப் பொறுத்தவரையில் பொன்னாகத் தெரிந்த அவர், தாம் வகிக்கும் பதவியால் எனக்கு வைரமாகத் தெரிந்தார்.

ஆசிய-பசிபிக் ஒலிபரப்பு வளர்ச்சி நிலையத்தின் பணி, ஆசிய-பசிபிக் நாடுகளில் ஒலிபரப்புத் துறையை மேம்படுத்துவதும், ஒலிபரப்பாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதுமாகும். இதில் தற்சமயம் பதினொரு நாடுகள் உறுப்பிய நாடுகளாக உள்ளன. மற்றும் பல நாடுகள் சேருவதற்றுள்ளன.

ஆனைப்பட்ட ஆசிய நாடுகளிலெல்லாம் இந்த நிலையம் அமையாமல் நமது நாட்டில் அமைந்திருப்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கும் செய்தி ஆகும். அத்தோடு திரு. பாலகிருஷ்ணன் அதன் இயக்குநராக இருப்பது நமக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியைத் தருவது இயல்பு.

இத்தகைய உலகறிந்த இயக்குநர் ஒருவர் இளைஞர் மணி மன்றங்களின் கூட்டுறவு அமைப்பான மாஜு ஜெயாவுக்குத் தலைவராக வாய்த்திருப்பது... பொன்னைத் தேடி மண்ணைத் தோண்டியவனுக்கு வைரம் கிடைத்த மாதிரிதானே!

–வணிகன்

கலையுலக வினாவிடை

பரிதாமணாளன்

எஸ். கோவிந்தராசு, பினுங்கு

கே: நான் அனுப்பிய கேள்விகளெல்லாம் என்னவாயின?

ப: வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

கே: உங்களுக்குப் பதில் தெரியாத கேள்விகளையெல்லாம் குப்பைக் கூடையில் எறிந்துவிடுகிறீர்களா?

ப: அதை இவ்வளவு "வெளிச்சமாக"வா கேட்பது?

இ. சரஸ்வதி, கோலாலம்பூர்

கே: எம்.ஜி.ஆர். பட உலகிலிருந்து போனதால்தான் அடுத்தடுத்து சில நல்ல படங்கள் வருகின்றன என்று என் தோழி கூறுகிறாள். இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

ப: நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதைத் தெரிவிக்கவில்லையே! எம்.ஜி.ஆர். விரைவில் மீண்டும் படத்தில் நடிக்கவிருக்கிறார்.

விஜய் விஜிதாஸ், புக்கிட் சீடிம் தோட்டம், பந்திங்

கே: அடுத்து நம் நாட்டிற்கு வரவிருக்கும் கலைக்குழு எது?

ப: ஏ.எம். ராஜா—ஜிக்கி குழுவினர் பிப்ரவரி 25-ஆம் தேதி வருகிறார்கள். இவர்களுடன் 20 பேர் கொண்ட இசைக் கலைஞர்கள் வருகிறார்கள். இசை ரசிகர்களுக்கு நல்ல விருந்துதான்!

தாரா எழிலழகன், சுங்கைவே, கோலாலம்பூர்

கே: இந்தப் பகுதி அடிக்கடி மறைவதேன்?

ப: இந்தக் கோளாறு இனி இருக்காது.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: காலஞ்சென்ற என்.எஸ். கிருஷ்ணன் கடைசியாக நடித்த படம் எது?

ப: ராஜா தேசிங்கு.

கே: பாலசந்தர் இயக்கிய படங்களில் வெள்ளி விழா கொண்டாடிய முதல் படம் எது?

ப: இதுவரை எதுவுமே வெள்ளி விழாவைக் காணவில்லை! ஆனால் 100 நாட்களைத் தாண்டி வெற்றிகரமாக ஓடியுள்ளன.

எம். எஸ். பெருமாள், மெடிங்கிலி தோட்டம், காஜாங்

கே: சென்னையில் தற்போது அதிக வரவேற்புடன் ஓடிக்கொண்டிருக்கும் படம் எது?

ப: "16 வயதினிலே...!" 16 வயது ஓடும் பருவம்தானே!

கே: கடந்த ஆண்டில் தலைநகரில் அதிக நாட்கள் ஓடிய தமிழ், இந்திப் படம் எது?

ப: அன்னக்கிளி, மா.

ச. ராஜேஸ்வரன், நோர்த்ஹம்மோக் தோட்டம், கிள்ளான்

கே: எம்.ஜி.ஆர். சுடுபட்டபோது நடித்த படம் எது?

ப: அரச கட்டளை

கே: நடிகை பிரமிளா நடித்த முதல் படம் எது?

ப: "வாழையடி வாழை"

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: நடிகை சத்யப்பிரியாவுக்குப் புகழ்தந்த தமிழ்ப் படம் எது?

ப: நினைவில் நிற்கும்படி எந்தப் படத்திலும் புகழ்பெற்றதாகத் தெரியவில்லையே!

ஃ ஓர் உணவகத்திற்கு சென்று உணவு அருந்தியபின் திரும்பும்போது நமக்கு நன்றாக உணவு பரிமாறிய பையனிடம் கொஞ்சம் சில்லரை கொடுப்பது வழக்கம். இதற்கு ஆங்கிலத்தில் TIPS (TO INDUCE PROMPT SERVICE) என்பார்கள்.

ஃ சிகரட் புகைப்பவர் களிடத்தில் காணப்படுவது இவை: (1) வெள்ளை நிறப்ப... கள் நிறம் மாறி மஞ்சளாகத் தோன்றும்.

(2) நாளாக நாளாக இதழ்... கள் கருப்பு நிறமாகிவிடும்.

(3) இவர்களுக்கு மு... கோபம் அதிகம் வரும்.

(4) ஒரு மாதிரியான மார்புச்சளி இருந்து கொண்டே யிருக்கும்.

(5) அடிக்கடி தலைவலி ஏற்படும்.

மலச்சிக்கலா?

சி. சிவராமன் சிரம்பான்

ஃ சிறு பிள்ளைகளுக்கு நிறைய தக்காளிப்பழம், கேரட், மீன் எண்ணெய், முட்டை (அரை அவியல்), கீரை வகைகள் அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றில் கண்நோய்கள் எதுவும் வராமல் தடுக்கும் வைட்டமின் A சத்துள்ளது.

ஃ மலச்சிக்கல் உள்ளவர் கள் என்ன செய்ய வேண்டும்

(1) பழங்கள் நிறைய சாப்பிட வேண்டும். (பொது வாக பப்பாளி & வாழை)

(2) தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும்.

(3) கொஞ்சமாவது உடற் பயிற்சி செய்ய வேண்டும்.

(4) எதையும் நன்றாக மென்று சாப்பிட வேண்டும்

(5) தினமும் ஒருமுறை மலம் கழிக்க வேண்டும்.

ஃ நாம் யாருடன் பேசினா லும் நிதானமாகவும் அழகாக வும் சிரித்த முகமாகவும் நல்ல வார்த்தை உச்சரிப்புடனும் பேச வேண்டும். அப்பொழுது தான் நம் பேச்சைக் கேட்பவர் களுக்கு மகிழ்ச்சியாக இருக் கும். நல்ல முறையில் பதிலளிப் பார்கள்.

முருகனைக் கேளுங்கள்

எஸ். முனியன், குளோரி தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: ஒரு பெண்ணின் எதிர்கால வாழ்க்கையை அந்தப் பெண்ணேதான் தேர்ந்தெடுக்கவேண்டுமா? அல்லது அந்தப் பெண்ணைச் சேர்ந்தவர்கள் பங்கெடுத்துக் கொள்ளலாமா?

ப: ஒரு பெண்ணின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் அந்தப் பெண்ணின் பெற்றோருக்கு அதிகமான பொறுப்பிருக்கிறது. பெண்ணின் ஒப்புதலோடு பெற்றோர் பார்த்துச் செய்யும் முடிவே சிறப்பாக அமையும்.

பி. காவேரி கவுண்டன், பத்துபெரண்டாம், மலாக்கா

கே: H. S. C.யில் நான் தமிழ்ப்பாடம் எடுக்கவிருக்கிறேன். அவற்றிற்கான பாடங்களைக் கற்க மற்றும் மாதிரி வினாத்தாள்கள், புத்தகங்கள் போன்றவற்றைப்பெற நான் எந்த முகவரியுடன் தொடர்பு கொள்ளவேண்டும்?

ப: கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்:

THE PRINCIPAL,
MALAYAN CORRESPONDENCE
COLLEGE,
P.O. BOX 145,
JOHORE BAHRU,
WEST MALAYSIA.

கே: கடந்த சில இதழ்களுக்கு முன்பு H.S.C.க்கான தமிழ் இலக்கியப் புத்தகங்கள் பற்றி ஒருவர் கேட்டிருந்த கேள்விக்குப் புத்தகப் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தீர்கள். அவை தவிர பாடக் குறிப்பில் வேறு புத்தகங்கள் இருக்கின்றனவா?

ப: முன்பு குறிப்பிட்டிருந்தவை தவிர வேறு புத்தகங்கள் இல்லை.

எம். எஸ். மணியம், கங்கார், பெர்லிஸ்.

கே: ம. இ. கா. தேசிய இளைஞர் பிரிவுத் தலைவரான திரு வி. எல். காந்தனின் முகவரியைத் தெரிவிப்பீர்களா?

ப: SHEARN DELAMORE & CO
2, BENTENG,
KUALA LUMPUR.

கே: ம. இ. கா. மாநிலத் தலைவர்க்குரிய பதவிக்கு ஏன் நம்மவர்கள் அடித்துக்கொள்கிறார்கள்? இதனால் அவர்களுக்குக் கிடைக்கும் லாபம் தான் என்ன?

ப: மாநிலத் தலைவர் பதவிக்கு மட்டுமா அடித்துக் கொள்கிறார்கள்? மயானத் தலைவர் பதவிக்குக்கூட அடிதடி நம்மவரிடையே உண்டு. இதனால் வருகின்ற லாபம் பதவியைப் பிடித்துக் கொண்டிருப்பவர்களைக் கேட்டால் தான் புரியும்.

எஸ். ஆர். செல்வராஜன்,
கெமுனிங் தோட்டம், மலாக்கா

கே: நம் இந்திய ஆண்கள் பலர் வேறு இனத்துப் பெண்களை மணந்துகொள்கின்றனர். இப்படி இவர்கள் வேறு இனப் பெண்களை மணந்து கொள்வதற்கான காரணமென்ன?

ப: மலேசியா போன்ற பல சமூகங்கள் வாழும் நாட்டில் இத்தகைய கலப்புத் திருமணங்கள் தவிர்க்கமுடியாதவை. என்றாலும் நமது பெண்கள் சிந்திக்கவேண்டிய கேள்வி இது. நமது இளைஞர்கள் மற்ற சமூகப் பெண்களை ஏறெடுத்துப் பார்க்காதபடி தங்கள் பக்கமே வைத்துக்கொள்வது நமது பெண்களின் சாமர்த்தியத்தில்தான் இருக்கிறது.

தாரா எழிலழகன், சுங்கைவே, கோலாலம்பூர்

கே: அன்று பாண்டிய மன்னன் இமயமலையில் கொடி நட்டது உண்மையா அண்ணே?

ப: இது உண்மையோ பொய்யோ, எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். இன்று ஒரு சிறு குன்றில்கூட நமது கொடியை நாம் நாட்ட இயலவில்லை.

மா. நிர்மல் வேலு, ஊத்தான் மெலிந்தான்

கே: இந்நாட்டில் தமிழ்ப்பாடசாலைகள் அழியாமல் இருந்தால்தான், தமிழர் கலை, கலாச்சாரம். மொழி சிதையாமல் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். தாங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தமிழ்ப்பாடசாலைகள் இருந்தால்மட்டும் போதா. மொழியை வாழவைக்கும் உறுதியான மனமும் நமது மக்களுக்கு இருக்க வேண்டும்.

எம். சாமிக்கண்ணு,
டெனிஸ் டவுன் தோட்டம், பேரா

கே: சில இந்தியப் பெண்களுக்குச் சமைக்கத் தெரியாமல் இருப்பதைப் பற்றி...?



ப: சில இந்தியப் பெண்கள் என்பது தவறு. பல இந்தியப் பெண்களுக்கு இப்போது சமையல் தெரியவில்லை. நன்கு சமைக்கத் தெரிந்த பெண்கள் தங்கள் கணவன்மாரைத் தங்களின் அருமையான பக்குவங்களின் மூலம் பெட்டிப் பாம்பாகக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ள முடியும். சமைக்கத் தெரியாத பெண்கள் குடும்ப வாழ்க்கையில் முழுமையான வெற்றியையும் இன்பத்தையும் காணமுடியாது.

கே. எஸ். மணியம், ஓலிரூட் தோட்டம், செலாமா.

கே: தலைவிதி என்பது இயற்கையாகவே அமைவதா, அல்லது நாமாக அமைத்துக் கொள்வதா?

ப: நாமாக அமைத்துக்கொள்வதும் உண்டு. இயற்கையாக அமைவதும் உண்டு.

எம். ஜி. மதன் ராஜ், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்.

கே: சமுதாயத்தில் ஒருவர் அணியக்கூடிய மிக உயர்ந்த ஆடை எது?

ப: மானம்!

கே: ஆவேசம் கொள்வது நல்லதா?

ப: அவசியமான தருணத்தில் ஆவேசம் கொள்வது நல்லது. தேவையில்லாமல் ஆவேசப்படுவது ஆபத்து.

பி. பி. தாஸ், ரெங்கம் தோட்டம்

கே: எங்கள் பட்டணத்தில் ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் இருக்கிறது. அதில் ஒரு வகுப்பு ஆசிரியர் பிள்ளைகளிடம் கொச்சைத் தமிழ்பேசி பிள்ளைகளின் முன்னேற்றத்திற்குக் களங்கம் விளைவிக்கிறார். இதைப்பற்றித் தலைமை ஆசிரியரிடம் சொன்னால் அவர்மௌனம் சாதிக்கிறார். இதற்குத் தாங்கள் தான்நல்ல முடிவு சொல்லவேண்டும்.

ப: தாங்கள் எழுதியிருப்பது உண்மையானால் அந்த ஆசிரியர் தமது போக்கை மாற்றிக் கொள்வாரென்று நம்புகிறேன். தலைமை ஆசிரியரும் அந்த ஆசிரியரைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம்.

ஆ. சிவஞானம், சீப்போட் தோட்டம், சிலாங்கூர்

கே: அண்ணா! சில மனிதர்கள் போதைப் பொருட்களை உட்கொண்டு விட்டு சாலையில் விழுந்து கிடப்பதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?



ப: வீதியில் கிடக்கும் கல்,மரம்போன்ற ஜடப் பொருட்களை விட அவர்கள் கேவலமானவர்கள்.

இரா. இராமராவ், தலைநகர்

கே: மலேசியாவில் 50,100 என்று கொடுத்து விட்டால் வள்ளல் பெருந்தகை எனும் பட்டத்தைப் பொருத்தமின்றிக் கொடுத்துவிடுகின்றனரே?

ப: இதில் நமக்கென்ன நஷ்டம். அதிகமான வள்ளல் பெருந்தகைகள் நம்மிடையே இருப்பது நமக்குப் பெருமைதானே!

முருகன், கெப்போட் தோட்டம், கிள்ளான்

கே: தர்ம காரியத்தினால் கிடைக்கும் ஒரு தொகை, சுய நலத்திற்கு உபயோகப் படுவது நல்லதா?

ப: அது கண்டிக்கத்தக்க குற்றம்.

கே: உயர்ந்த லட்சியம் கொண்டுள்ள ஒருவனுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை யாது?

ப: வாழ்க்கையிலும் வெற்றிகண்டால் தான் தங்கள் லட்சியங்களை நிறைவேற்ற முடியும் என்பதை லட்சிய நோக்குள்ள இளைஞர்கள் உணர வேண்டும்.

ராமையா, உலுபெர்ணம் தோட்டம், தெலுக்கான்சன்

கே: அண்ணா! என் உடம்பில் ரத்தம் இல்லை என்று டாக்டர் சொன்னார். என் உடம்பில் இரத்தம் ஊறுவதற்கு என்ன சாப்பிடலாம்? மேலும் என் உடம்பு நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டிருக்கிறது. இதை நிவர்த்திக்கவும் ஒரு வழி சொல்லவும்.

ப: தாங்கள் டாக்டர் ஒருவரை நாடி உடம்பைச் சோதித்துக்கொண்டு அவருடைய ஆலோசனைப்படி ரத்த விருத்தி டானிக்குக்களை சாப்பிடுவது நன்று.

பாஷா ரஹிம், குவாந்தான்.

கே: நான் இந்தியாவில் 1960-ஆம் ஆண்டு 25 ஆம் தேதி ஜனவரி மாதம் பிறந்தவன். நான் மலேசியாவுக்கு 1968-இல் இங்கு எட்டு வயதில் வந்தேன். அதே வருடம் இந்தியா திரும்பினேன். அப்போது திரும்பியதுடன் இங்கு சுமார் 9 வருடத்திற்கும்மேல் மலேசியாவில் தங்கிவிட்டேன். என் தந்தை ஒரு மலேசியப் பிரஜை. நான் இப்போது சிவப்பு அடையாளக் கார்டு வைத்து உள்ளேன். அதை நீலக்கார்டாக மாற்றுவதற்கு என்ன வழி அண்ணா?

ப: தாங்கள் 21 வயது பூர்த்தியாவதற்குள் மைனர் பிரஜாவுரிமை எடுக்க முடியும் தங்கள் தாயாரும் இங்கு இருப்பது முக்கிய தகுதியாகக் கருதப்படும். தங்கள் தகப்பனார் தங்களுக்காக இந்தப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.

கிருஷ்ணன், பெக்கோ தோட்டம், மலாக்கா

கே: அண்ணா 12 வயதில் எடுத்த அடையாளக் கார்டை 18 வயதில் கண்டிப்பாகப் புதுப்பிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கட்டளை. அப்படி 18 வயதில் அடையாளக்கார்டைப் புதுப்பிக்காதவர்கள் 21 வயதில் புதுப்பிக்கலாமா? காலதாமதமாக புதுப்பிப்பதால் அபராதம் செலுத்த நேரிடுமா? விளக்கம் தேவை!

ப: காலதாமதமாகப் புதுப்பித்தால் தக்க காரணங்கள் இல்லாவிட்டால் அபராதம் விதிக்கப்படும் சாத்தியம் உண்டு.

கே: 12வயதில் அடையாளக்கார்டு எடுக்கும் போது தகப்பனாரின் அனுமதியுடன் பெறவேண்டியிருக்கிறது. ஆனால் இதே அடையாளக் கார்டை 18வயதில் அல்லது 21வயதில் புதுப்பிக்கும்போது தகப்பனாரின் அனுமதி தேவையா? அல்லது நாம் சொந்தமாகச் சென்று புதுப்பித்துக் கொள்ளலாமா?

ப: புதுப்பிக்கும்போது தகப்பனாரின் அனுமதி தேவையில்லை.

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, ஜாசின்

கே: காதல் தோல்வியை முதலில் மறக்கும் மனப்பாங்கு உள்ளவர்கள் ஆண்களா, பெண்களா?

ப: இதில் ஆண்களுக்குத்தான் முதலிடம்!

கே: சார், வானொலி, தொலைக்காட்சித் குறைகளை இவ்விதழ்களில் எழுதுகிறோமே, எங்கள் குறைகளைச் சம்பந்தப்பட்ட தலைவர்கள் தீர்ப்பார்களா?



ப: பெரும்பாலான குறைகள் தீர்க்கப் படுவதாகத் தெரியவில்லை. தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் குறைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெரும்பாலும் அலட்சியம் செய்வதாகவே தோன்றுகிறது.

எம். ஜி. குணசேகரன், சுங்கைப்பட்டாணி

கே: மனிதன் தவறு செய்தால் ஆண்டவன் தண்டிக்கிறான். அந்த ஆண்டவனே தவறு செய்யும்படி நேர்ந்தால் அவனை யார் தண்டிப்பது?

ப: அப்படி ஆண்டவன் தவறு ஏதும் செய்ய மாட்டான். அவனைத் தண்டிக்க வேண்டிய கட்டாயமும் அதற்கு ஓர் ஆளை நியமிக்க வேண்டிய அவசியமும் தங்களுக்கு நேரிடாது. நிம்மதியாக இருங்கள்!

எம். ஜி. ராஜு, கோலத் தெர்லா, கேமரன் மலை.

கே: அண்ணா! ஆவதும் பொண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்று ஏன் கூறுகிறார்கள். பெண்களைக் கண்டால் அவ்வளவு பயமா?

ப: தங்களுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையென்று நினைக்கிறேன். ஆகியிருந்தால் இந்தப் பழமொழியின் முழுப் பொருளை நீங்கள் நிச்சயம் உணர்ந்திருப்பீர்கள்.

கே: அண்ணா! ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்! துன்பம் எத்தனை நாள்?

ப: துன்பம் தொலையாத நாள்!

திருமதி பாக்கியம், பூச்சோங்

கே: சாவிக்கீரை, காசினிக்கீரை இவற்றுக்கு வேறு பெயர் என்ன என்பதைப் பற்றியும், இவை மலேசியாவில் எங்குக் கிடைக்கும் என்பதைப் பற்றியும், இவற்றினால் என்ன நன்மை உண்டு என்பதைப்பற்றியும் தாங்கள் தெரிவிப்பீர்களா?

ப: சாவிக்கீரைக்கு மறு பெயர் கடுகுக் கீரை. புளிச்சகீரைதான் கன்னட மொழியில் காசினிக்கீரை என்று அழைக்கப்படுகிறது. கடுகுக்கீரையும் புளிச்சகீரையும் எல்லா மார்க்கெட்டுகளிலும் கிடைக்கும். விலை அதிகமாக இருந்தாலும் நல்ல சத்துள்ள கீரைகள் இவை.

தெய்வானை, போ தோட்டம், செளத் டிவிஷன், கேமரன் மலை

கே: அண்ணா. பெண்களுக்கு அடிக்கடி கோபம் வருகிறதே. ஏன்?

ப: ஆண்களிலும் சிலருக்கு அடிக்கடி கோபம் வரும், இது பிறவிக் குணம். இதற்கெல்லாம் காரணம் கிடையாது.

கே: அண்ணா! எனக்கு எல்லாப் பாடங்களும் நன்றாக விளங்குகின்றன. ஆனால் கணக்கு மட்டும் எவ்வளவோ முயற்சி செய்தாலும் புரியவில்லை. எனக்கு நன்றாக கணக்குப் புரிய நீங்கள் தான் ஒரு யோசனை சொல்லவேண்டும்.

ப: நீங்கள் கோலாலம்பூரில் இருந்தால் உங்களுக்குக் கணக்குப் பாடத்திற்கு நான் "டியூசன்" கொடுக்க முடியும். நீங்களோ வெகு தொலைவில் இருக்கிறீர்கள். அங்குள்ள ஒரு கணக்கு மாஸ்டரைப் பிடித்து ஒருசில மாதங்களுக்கு விடாப்பிடியாக மண்டையை உடைத்துக் கொண்டால் எந்தக் கணக்கும் புரிந்துவிடும்.

ஊதாப்பூ ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம், பத்தாங்காலி

கே: மனிதனுக்கு மட்டும் ஆண்டவன் ஆறறிவைக் கொடுக்காதிருந்தால்...?

ப: கொடுக்காதிருந்தால் உலகம் இவ்வளவு முன்னேறியிருக்காது. இத்தனை நெருக்கடிகளும் உருவாகி இருக்காது.

கே: கை தவறி கண்ணாடி கீழே விழுந்து விட்டால் நொறுங்கி விடும். ஆனால் நா தவறி வாய் உளறிவிட்டால்?

ப: மனிதரின் நாணயம் செல்லாக் காசாகி விடும்

பீ. ஆறுமுகம், சுங்கைவே.

கே: தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "கல்கி" வார இதழ் ஏன் தற்பொழுது நம் நாட்டில் கிடைப்பதில்லை?

ப: தொழில் தகராறு காரணமாகக் கல்கி இதழை அதன் உரிமையாளர்கள் நிறுத்தி விட்டார்கள்.

பெ. ரெங்கசாமி, பந்தாய் ரெமிஸ், பேரா.

கே: என்னைச் சிலர் "தீக்காசுக்கு" என்று அழைக்கிறார்கள். அவர்களை என்ன செய்யலாம்?

ப: அந்தக் "கிறுக்கர்களை" நீங்கள் பொருட்படுத்தத் தேவையில்லை.

கே: வாரத்தில் ஓரிரு நாட்கள் பட்டினி கிடப்பது நல்லதா?

ப: நமது நாட்டில் உணவுப் பஞ்சமில்லை. ஆகவே இந்தப் பட்டினி கிடக்கும் வேலைக்கு அவசியமில்லை.

கே. ஜி. ஜெயராமன், கிரிக், பேரா.

கே: சின்னப் பிள்ளைகள் ஒரு நாளில் சைக்கிள் விடக் கற்றுக் கொள்கிறார்கள். வளர்ந்த பெரியவர்களோ கற்றுக் கொள்ள ஒரு வாரத்திற்கு மேலாகிறதே ஏன்?

ப: சிறு பிள்ளைகளுக்கு வளைகிற மாதிரி வயதானவர்களுக்கு உடம்பு அத்தனை எளிதில் வளையாது. அதுதான் காரணம்.